உ
சிவமயம்
ஒட்டாவா சிவன் கோயில்

## வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமி கோயில்

# வைத்தீஸ்வரம்

## ஆண்டு மலர் - 2011

# VAITHEESWARAM

## ANNUAL MAGAZINE - 2011

வெளியிடுவோர்:
சைவநெறி மன்றம் - ஒட்டாவா சிவன் கோயில்

**Released By:**
**Saivaneri Manram – Ottawa Sivan Temple**

**2104 Roger Stevens Drive, North Gower, Ontario K0A 2T0, Canada.**

Telephone: 613-489-1774
e-mail: ottawasivantemple@yahoo.ca
Web: www.ottawasivantemple.com

**July 2011**

## Group Photo:

## Board of Directors & Trustees

உ

சிவமயம்

ஒட்டாவா சிவன் கோயில்

**OTTAWA SIVAN TEMPLE**

**Picture - Sivalingam**



# வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமி

# VALLAVAAMBIKA SRI TAIYALNAYAKI SAMETHA VAITHIYANATHA SWAMI

# PICTURES OF KOIL VIKRAHAMS

| | |
|---|---|
| | |
| விநாயகர் | வைத்தியநாத சுவாமி |
| | |
| ஸ்ரீ தையல்நாயகி | முருகன் |
| | |
| நடராஜர் | பைரவர் |

# ஓம் நமச்சிவாய!

**"வைத்தீஸ்வரம் 2011 ஆண்டுமலர்"** சிவபக்தர்களின் கைகளுக்கு தேர்த் திருவிழாவன்று சேரவேண்டுமென்பது எம்பெருமான் வைத்திய நாதனின் கிருபையாகும். அவன் அருளால் சென்ற ஆண்டு "கால்வருடச் செய்தி இதழாக" நான்கு முறை வெளிவந்த "வைத்தீஸ்வரம்" இவ்வருடம் ஆண்டு மலராக பூத்துப் பல அரிய சைவசமயக் கட்டுரைகளும் பக்தர்களுக்கு வேண்டிய சைவச் செய்திகளும் தாங்கி வெளிவந்துள்ளது. சிவனடியார்கள் இம்மலர் மூலம் சமய அறிவும், வல்லவாம்பிகா ஸ்ரீ தையல் நாயகி சமேத வைத்தியநாத சுவாமியின் அருளும் பெற்று இனிது வாழ வாழ்த்துகிறோம்.

**மனித** உடல் என்பது மகத்தான தேர். அந்த தேரில் இறைவனை வைத்து மானுட வாழ்க்கை என்கிற பவனி வரும்போது, மக்களால் போற்றப்படுவதுடன் திருத்தேர் சரியான நிலையடிக்கு வருவதுபோல மனித யத்தனமும் சரியான இலக்கை அடைந்துவிடும் என்பதுதான் தத்துவம். தேர் சரியான பாதையிலே ஓடுவதற்கிசைவாகச் சறுக்குக் கட்டைகள் போட்டு அதனைக் கட்டுப்படுத்துவது போல நமது வாழ்க்கையையும் நல்வழிகளில் நெறிப்படுத்த வேண்டும்.

**உண்டு** கழித்து, உறங்கிக் கழித்து, பொருந்திக் கழித்து முதுமை வரும்போது வாழ்வு சலித்து விடுகிறது. இயற்கை தனது இயல்பான சாகசத்தைக் காட்டுவதால் நாம் ஏன் வாழ்கிறோம் என்னும் கேள்வியும் அதனால் ஞானமும் பிறக்கிறது. ஏன் முதுமை வரவேண்டும்? எதற்காக நோய் வரவேண்டும்? எண்ணிப் பார்க்கும் போது ஞானம் வருகிறது.

**பட்டினத்தாருக்கு** ஞானம் வந்தது; பத்ரகிரியாருக்கு ஞானம் வந்தது; ஏன் எமக்கெல்லாம் ஞானம் வரவில்லை என்று யோசித்த போது ஓர் உண்மைப் புலப்பட்டது. செல்வத்தில் நிரம்பிய பட்டினத்தாருக்கு நிறைவின் எல்லையில் ஞானம் பிறந்தது. பத்ரகிரியாருக்கு இராஜ போதையின் நிறைவில் ஞானம் பிறந்தது. இதேபோல புத்தர், மகாவீரர் வாழ்வில் ஞானம் பிறந்தது. எனவே ஞானம் உருவாக நிரம்பி வழிதல் என்பது மிகமிக அவசியமாகும்.

அபிராமி பட்டர்,

**தனம் தரும் கல்வி தரும்**<br>
**ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும்**<br>
**தெய்வ வடிவும் தரும்**<br>
**நெஞ்சில் வஞ்சம் இல்லா**<br>
**இனம் தரும் நல்லன எல்லாம் தரும்**<br>
**அன்பர் என்பவர்க்கே**<br>
**கனம் தரும் பூங்குழலாள்**<br>
**அபிராமி கடைக்கண்களே"**

**என** அபிராமியிடம் கேட்டுப் பெற்றதன் நோக்கமே - தனமும் கல்வியும் நிறைந்தால் ஞானம் என்பதும் சுலபமாக வரும் என்பதால்தான். பெற்ற செல்வம் ஒரு மனிதனுக்கு முழுமையாகப் பயன்பாட்டுக்கு வந்துவிட்டால் அந்த மனிதன் ஞானியாவது உறுதியாகும்.

**தேர்வடத்தைத்** தொட்டதும் இது நமது தாத்தா முதல் முன்னோர்கள் வரை தொட்டுவிட்ட காரியமாகும் என நினைத்து வாழ்க்கையின் நிலையாமையை யோசிப்போம். நிலையாமை என்பது புரிந்துவிட்டால் திகட்டல் என்பது உதயமாகிவிடும். உலகியல் திகட்டி விட்டால் இறை ரகசியம் புலப்படத் துவங்கிவிடும். வாழ்வியல் குழப்பம் அகன்றுவிடும். தேர்த் திருவிழா நடக்குமிப் பொன்னாளில் சிந்திப்போம்! தெளிவு பெறுவோம்!

**இம்** மலருக்கு ஆசிச் செய்தி தந்தோர்க்கும், சிவனடியார்க்கு வேண்டிய செய்திகளை நல்கினோர்க்கும், சிறந்த சைவசமயக் கட்டுரைகள் தொகுத்துப் படைத்தோர்க்கும், மொழி பெயர்த்தோர்க்கும், மலரைக் கணனியில் வடிவமைத்தோர்க்கும் விளம்பரங்கள் தந்து இம் மலர் அச்சிட்டு வெளிவர உதவியோர்க்கும் வல்லவாபிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமிகள் அருள் கிடைக்க வாழ்த்துவதோடு எமது நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

**ஓம் நமச்சிவாய!**

**ஆசிரியர் குழு, வைத்தீஸ்வரம்.**


**VAITHEESWARAM-2011 : EDITORIAL GROUP:**

**Editors:** S. Theivasihamany, Pulavar K. Sivananthan**,** S**.** Sivasothy

**Computer Designers:** Sivaananthan Sabaratnam, Sivalingam Sivaruban,

**Coordinator:** Balasubramaniyam Shanchayan

# ஒட்டாவா சிவன் கோயில் பிரதம குருவின் ஆசிச் செய்தி:

**உ**
**சிவமயம்**

**நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!**
**இமைப்பொழுதும் என் நெஞ்சில்**
**நீங்காதான் தாள் வாழ்க!!**

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றார் ஔவை. அதிலும் அரிய பிறப்பு சைவசமயியாக பிறப்பது. சைவமக்களின் தொன்மைச்சிறப்பை எண்ணுந் தோறும் பெருமை கொள்ளுகின்ற நாம் இந்த சைவசமயத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சைவசமயிகளாகிய நாம் எமது சமயம், பண்பாடு என்பன அழிந்துவிடாமல் வருங்கால சந்ததியினருக்கு கொண்டு சேர்க்கவேண்டியது கட்டாயக் கடமைஆகும். அதற்குச் சிறந்த தகுதியான ஊடகம் அவசியமானதாகும்.

முனிவர்கள், ஞானிகள், நாயன்மார்கள், சைவப் புலவர்கள், சைவ மன்னர்கள், ஆதீனங்கள் போன்ற அமைப்புகள் அவ்வப் போது சைவமும் தமிழும் சிறந்து வளர அருந் தொண்டாற்றியுள்ளார்கள். அந்த வகையில் எமது ஆலய சைவ நெறி மன்றத்தின் வெளியீடான “வைத்தீஸ்வரம் - ஆண்டு மலர்” கனடா வாழ் சைவசமயிகளுக்கோர் வரப்பிரசாத மாகும். மேலும் இந்த ஆண்டுமலர் வருடாவருடம் சிறப்பாக வளர்ச்சி பெற்று, தன்கடமை தவறாத ஆதவனை போன்று தடையின்றி வெளிவர எம் பெருமான் ஸ்ரீ வைத்தியநாதனும், தையல்நாயகி அம்மையும் திருவருள் தர வேண்டி வணங்கி எனது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வணக்கம்

**வைத்தியநாத சேவகன்,**
**பத்மநாபன் சின்னசாமி குருக்கள்**
**(முகுந்தன் ஐயா)**

# தலைவரின் இதயத்திலிருந்து ...

**சிவனடியார்களே!**

**வணக்கம்.** ஒட்டாவா தமிழ் மக்களின் சமூக வளர்ச்சி கருதி, சைவ ஆகம முறைப்படி ஓர் சைவத் தமிழ் ஆலயமொன்று அமைந்து, சரியான திசை நோக்கி, துரித கதியில் வளர்ந்து வருகின்றது. எல்லோரும் மனமிசைந்து, காலவிரையம் நோக்காது, ஆற்றி வருகின்ற சமயப்பணி வைத்தீஸ்வரப் பெருமானுடைய பெரும் கருணையினால் இனிதே நடைபெறுகின்றது. 2007ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் கடந்த நான்கு ஆண்டுகளில் அடைந்திருக்கும் துரித வளர்ச்சி அளப்பெரியது! அகமகிழ்வுக்குரியது! இந்த வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் சிவனடியார்களாய நீங்கள் செய்த, செய்து வருகின்ற பொருளாதார, சரீர, சிரமதான சேவைகள் எண்ணிலடங்காதவை. இறையன்புடன், சமூக அக்கறையுடன் நீங்கள் ஆற்றும் சேவைகளுக்கு வைத்தீஸ்வரப் பெருமான் அருள் பாலித்துக் கொண்டே இருப்பார்.

**நிரந்தர** இடத்தில் ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையின் விளைவாக, ஐந்து ஏக்கர் காணியை சொந்தமாக வாங்கி ஆலயம் அமைக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட அடமானக்கடனுக்கான வட்டியாக, கடந்த நான்கு ஆண்டுகளாக பெருமளவு பணம் விரையமாகிறது. இந்தக் கூடுதலான வட்டி விரையத்தை தவிர்த்து, விரைவாக அடமானக் கடனை செலுத்துவதற்கு சிவனடியார்கள் சிலர் கடனாக பண உதவி செய்ய முன்வந்துள்ளனர். இதன் மூலம், இதுவரை செலுத்தி வந்த வட்டிப் பணத்தை மீதப்படுத்தி எமது ஆலயத்தின் அடமானக் கடனின் பெருந்தொகையை விரைவாக செலுத்த முடியும். இத் திட்டம் எல்லோராலும் வரவேற்கப்பட்டு, ஆலய எதிர்கால வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படும் என நம்புகிறோம்.

**திருவிழா** என்பது ஆலயத்துக்கும் அடியார்களுக்கும் மிகுந்த சிறப்பைத் தருவது. திருவிழாவின் முக்கியத் துவத்தை உணர்ந்து, ஒட்டாவாவின் அனைத்து சைவர்களும் இணைந்து ஒற்றுமையாக வருடா வருடம் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். ஊர் ஆலயங்களில் எல்லாத் திருவிழாக்களுக்கும் நாம் வழங்குகின்ற முக்கியத்துவத்தையும் ஈடுபாட்டையும் நாம் இங்கும் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவினை மேலும் சிறப்பாக கொண்டாடுவதற்கு உங்களின் உதவிகளும் ஆலோசனைகளும் மிக மிக அவசியம்.

**சைவசமயத்தை** எமது அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்வது எமது ஆலயத்தின் தலையாய கடமை. ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் சைவத்தின் பெருமைகளையும் எமது குழந்தைகளுக்குப் புரிய வைத்தல் வேண்டும். இந்த இலக்கை நோக்கி எமது ஆலயம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. சிறுவர்களுக்கான கோடைகாலப் பாசறை (Summer Camp), ஞாயிற்றுக்கிழமை வகுப்புகள், கூட்டுப்பிரார்த்தனை ஆகிய செயற்பாடுகள் குறிப்பிடத் தக்கன. இருப்பினும், சிவனடியார்களாகிய நீங்களும் இணைந்து, புதிய வழிகளில் செயற்பட்டு நல்லதோர் இளைய சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டுமென வேண்டுகிறோம்.

**சிவனடியார்கள்,** தாங்களே முன்வந்து ஆற்றிய பல திருப்பணிகள் போற்றுதற்குரியது. தேர், சப்பறம் அமைத்தது, ஆலயத்தின் உட்புறம் முழுவதும் பெயின்ற் பூசியது. வெளிப்புறங்களை சீர்படுத்தி துப்பர வாக்கியது, ஆலயத்தின் பின்புறத்தைச் செப்பனிட்டு, ஆலயத்திற்கான தோட்டம் ஒன்றை அமைத்தது, ஆலயத்தின் கீழ்த்தளத்தை நிர்மாணம் செய்தது போன்ற பல சரியைத் தொண்டுகளை செய்து ஆலயத்தின் வளர்ச்சிக்கும் இயக்கத்துக்கும் முதுகெலும்பாக இருக்கும் உங்கள் அனைவருக்கும் எமது நல்லாசிகள். எமது ஆலய வளர்ச்சியில் தொடர்ந்து பங்காற்றிக் கொண்டிருக்கும் ஆலய அர்ச்சகர்கள், பிரதம குருக்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஒட்டாவா,** தமிழ் மக்கள் குறைவாக வாழுகின்ற இடமாக இருப்பினும், இம்மக்கள் பண்பிலும், ஒழுக்கத்திலும், வாழ்க்கைத் தரத்திலும் சிறந்தவர்கள். இவர்கள் இடமறிந்து, பொருளறிந்து, தேவையறிந்து, செயற்படக் கூடியவர்கள்.

இதுதான் இந்த ஆலயத்தின் மிகப் பெரிய பலம். இவர்களின் சேவைகள், சிரமதானங்கள், பொருளாதாரப் பங்களிப்புகள் இன்றி இந்த ஆலயம் இயங்க முடியாது என்பதுதான் யதார்த்தம். இது உங்கள் ஆலயம்; நீங்கள் உருவாக்கி வளர்த்த ஆலயம். இதை உணர்ந்து உள்வாங்கி ஆதரவு தந்து செயற்படும் உங்கள் அனைவருக்கும் இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்கட்டுமாக!

நன்றி!

**நந்தா ஐயாத்துரை**
**தலைவர், ஒட்டாவா சிவன் கோயில்** **16 ஜூலை, 2011**

# பிரதோஷ விரதம்

சிவ விரதங்களுள் பிரதோஷ விரதம் சிறப்பானதாகச் சொல்லப்படுகிறது. மாதந் தோறும் அமாவாசை, பௌர்ணமிகளுக்கு இரண்டு நாட்கள் முன்பு வரும் திரியோதசித் திதியிலே இவ்விரதம் அனுஷ்டிக்கப் படுகிறது. தேவர்களும் அசுரர்களும் தீர்காயுளைத் தரும் அருமருந்தாம் அமிர்தத்தைத் பெறும் பொருட்டு பாற்கடலை மந்தார மலையை மத்தாகவும் வாசுகி எனும் சர்ப்பத்தைக் கயிறாகவும் கொண்டு கடைய ஆரம்பித்தனர.

சர்ப்பம் மிகக் களைப்படைந்து கொடிய விஷமான ஆலகால விஷத்தைக் கக்கியது. அச்சங்கொண்ட தேவர்களும் அசுரர்களும் சிவனை ஒன்று சேர வணங்க, கருணைவடிவான சிவன் தனது பக்தர்களைக் காப்பாற்ற விஷத்தை விழுங்கி அருளினார். சக்தி சிவனின் தொண்டையைப் பிடித்ததால் விஷம் அங்கேயே தங்கி சிவனுக்கு திருநீலகண்டன் எனும் பெயர் ஏற்பட்டது.

தொடர்ந்து பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தம் கிடைத்தது. அமிர்தம் கிடைத்ததும் தேவர்கள் பரம்பொருளாம் சிவனை வணங்க மறந்து களிபுற்றிருந்தனர். பினபு தமது பிழை உணர்ந்து திரயோதசி தினத்தன்று தங்களது பிழையான செய்கைகளை பொறுத்தருளு மாறு வேண்டக் கயிலை மலை சென்றனர். பரம்பொருளாம் சிவன் அவர்களைப் பொறுத்தருளியதுடன் அவர்களுக்காக நந்தி தேவரின் கொம்பு களிடையே நடனம் புரிந்து அவர்களைப் பேரானந்தம் அடையச் செய்தார். இக்காட்சியை விஷ்ணு, பிரம்மா உட்பட தேவர்களும் எல்லாத் தெய்வங்களும் கண்டு களித்தனர். இவை அனைத்தும் நடந்தது திரயோதசி தினத்து பிரதோஷ காலமாகும்.

இத்தினங்களில் பிரதோஷ நேரத்தில் நந்தி தேவருக்கும் சிவனுக்கும் அபிஷேகத்துடன் பூசை நடைபெறும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களும் தரக்கூடியது இவ்விரதம். முக்கியமாக புத்திர பாக்கியம் தரவல்லது.

பிரதோஷ விரதம் அனுட்டிக்க விரும்பும் அடியவர்கள் ஒரு சனிப் பிரதோஷத்தில் விரதத்தை ஆரபம்பிக்க வேண்டும். உங்களதும் குடும்பத்தினரதும் நட்சத்திரங்கள், பெயர்கள் தரப்பட்டால் தங்களால் கோயிலுக்கு வரமுடியாத போதும் நட்சத்திரம் பெயர் உச்சரித்து பூசை செய்யப்படும். விரதம் அனுட்டிக்கும் அடியவர்க்கு சிவ-சக்திக்கு அர்ப்பணித்த பிரசாதமும் இரவு போசனமாக வழங்கப்படும். விபரங்களுக்கு கோயில் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

# From the Heart of President ...

**Dear Siva Devotees,**

**Greetings!** As a mark of development of the Tamil community in Ottawa, a Saiva Temple has been established adhering to Saiva Agama rules and is developing in the proper direction at a fabulous speed. By the grace of Lord Vaitheeswaran, all devotees are sacrificing their time to perform the religious services whole heartedly. Development of this Temple which started in 2007, has been enormous and gratifying. It is your active participation offering numerous economic and voluntary services as administrators, directors and many other roles that has brought about these huge developments in the Temple. Lord Vaitheeswaran will continue to bless all of you for your services.

**As** it was felt that a permanent place was required to establish a temple in the long run, five acres of land was acquired. During the last four years, a lot of money was paid in interest on mortgage of the land purchased. To avoid paying high interest rates on mortgage loans, some devotees have come forward to give loans to the temple. Hereafter, the high interest payments can be diverted to the development of the Temple as well as to repay part of mortgage loans. We hope that this plan will be appreciated by everybody as it will enhance the future development of the Temple.

**High** Festival brings about happiness and gratification to the devotees as well as the Temple. All Saivites of Ottawa regions get together and celebrate these festivals yearly with great appreciation of the importance of High Festival. We have to bring about the same degree of co-operation and dedication among our people during High Festival as was done in our villages in our mother country. Your help and suggestions are essential to improve the festivals year after year.

**Taking** Saivaism to our next generation is the most important service of this Temple. We have to make our children understand the importance of temple worship and the greatness of Saivaism. Our temple is continuously making efforts in this direction. Children's summer camp, Sunday Saivaism & Yoga Classes and group prayers are some of these efforts. We still expect you, the Siva Devotees, to come up with new ideas and dedicated efforts to create a very good, young generation for our community.

**All** dedicated services of Siva devotees are appreciated. Building of THER, SAPPARAM, painting of the complete interior of the Temple, putting the Temple's surroundings in order, cleaning and reorganizing the back side of the temple, recreating Sivan gardens and developing the basement of the Temple are important symbols of dedicated 'Sariyai' services of volunteers from Siva Devotees. They are the backbone of the Temple's development. Our blessing goes out to all of you. Our thanks also go to 'Adchakar', Chief Priests, who are tirelessly participating in the Temple's development.

**Even** though Ottawa is a place where Tamils are living as a minority, they are successfully upholding their culture, morals and standard of living. They are capable of acting according to their place, economic situation and needs. This is the basic strength of this Temple. In fact, without their services, volunteerism and economic participation, this Temple cannot function. This is YOUR temple. It is you who created this Temple and who are developing it now. Let the Almighty Lord Siva bless all of you to continue to support this Temple with love.

**Thank you**

**Nantha Aiyadurai** **July 16, 2011**
**President, Ottawa Sivan Temple**

உ

# ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

## HINDU RELIGIOUS SOCIETY OF ONTARIO

Reg. No. 1201762
1473 Birchmount Road, Toronto, ON. M1P 2G4

18.06.2011

**போற்றியோம் நமச்சிவாய.**

ஒட்டாவாத் தமிழ் மக்கள் புண்ணியஞ் செய்தவர்கள். பல ஆண்டுகளாக மேற்கொண்ட விடா முயற்சியின் பயனாக 5 ஏக்கர் நிலத்தில் எல்லாம் வல்ல சிவபெருமானுக்குக் கோயில் அமைத்து வழிபட்டு வருகின்றார்கள். அடக்கமான கோயில்; அழகான கோயில்.

24.04.2007 அடியார்களால் மறக்கமுடியாத திருநாள்.

அங்கிங் கெனதபடி எங்கும் பிரகாசமாக விளங்குகின்ற இறைவன் ஒட்டாவாவில் வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமியாக எழுந்தருளிய பெருநாள் அந்தநாள்.

கோயில் இல்லாத ஊரிலே குடியிருப்பது நல்லதல்ல என்பது சைவப் பெருமக்களின் கொள்கை. அப்பர் பெருமான் பாடுகின்றார்:

**திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்**
**திருவெண்ணீ(று) அணியாத திருவில் ஊரும்**
**பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்**
**பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்**
**விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்**
**விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்**
**அருப்போடு மலர்பறித்திட்(டு) உண்ணா ஊரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.**

கோயிலின்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பது கடினம். கோயில் என்றால் அது சிவன் கோயிலே. சிவனை வணங்கினால் சக்தியையும் வணங்குகின்றோம் என்று பொருள். ஏனென்றால் அவர் அர்த்தநாரீசுவரர். சிவனை வணங்கினால் விநாயகப் பெருமான், முருகப்பெருமான், வீரபத்திரர், வைரவர் ஆகிய தெய்வங்களை வணங்குதற்கும் சரியாகும். ஏனென்றால் இவர்கள் அவரின் மூர்த்தங்கள்.

சிவ தத்துவத்தை நன்கு உணர்ந்தவர் ஒட்டாவாச் சைவ மக்கள். திருவருளால் ஆகமவிதிகளின்படி கோயில் அமைத்துக் கும்பிடுகின்றார்கள்.

நான்காவது ஆண்டாகக் கோயில் கொடியேறித் திருவிழா நடைபெறுகின்ற இச் சமயத்தில் எல்லாம் வல்ல சிவபெருமானின் அருளினாலே எல்லாம் இனிதே நடைபெறவும் விழாக்களைக் கண்டு அடியவர்கள் இறைவனின் திருவருளிற் குளித்துக் குறைகளைப் போக்கவும் பெருமானின் திருவடிகளை வணங்கி ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

அன்பே சிவம்.

**வி. கந்தவனம்**
**தலைவர்**

## OST ACCOUNTS STATEMENT

# VOLUNTEERISM

**"True happiness consists in making others happy."**

It is very important to include volunteerism in your life. Religion teaches good things to shape our lives. Ottawa Sivan Temple is there for us to go, learn and teach others the spiritual values of lives.

Sivan Temple volunteers are trying their best to maintain and keep our temple in good order. They are spending some of their time. We have been very successful in expanding volunteers in the last years. We are trying to add new members. It is our responsibility to have strong foundation built for our kids so they can learn our traditions and religion - Hinduism and Saiva samayam. As you all know, seeing is believing, a picture is worth thousand words and so on. It is sometimes very hard to explain your kids questions. What is easy is to make them see and find answers themselves.

Temple is one of the great places for our people to go and see each other. This would refresh our memories of our life back in our homeland. In particular, our seniors are so thankful that we have our own temple that they can go and pray the way they used to all along in their life. This gives all of us great satisfaction. It makes us all feel great. One of the main festivals that you would remember from your childhood would be that you were in middle of the temple grounds in your own community along with all other familiar faces. You might recall your memories that you were running around and playing while all good things that your parents were doing. For some of you or many of you, temple would have been the starting point of your life. It is to say that there is no better place than the sacred place like temple to see your man or woman first time. You might remember that your parents would not have let you do that on your own and they would have been there to safe guard. You get the point. It is temple annual thiruvilla. We thrive to continue that here in Ottawa at our temple during thiruvilla time. so our people would continue and enjoy their life.We always welcome your suggestions and opinions to improve our temple. If you put effort to allocate very little time to provide your participation, you can do it. There are people who are doing that on their own time. If you would like to know and join the great team that we formed, please don't be shy make your connection to any volunteers.

To summarize main activities of our volunteers:

1) Regular cleaning and moping temple premises

2) Maintaining outside temple area clean and regulate parking area

3) Gardening and continuous maintenance

4) Helping others whenever needed, offer ride to those who don't have transportation

5) Suggest ideas and opinions to improve our temple

Thank you. May God bless you!

**Yours truly**
**Sivan Temple Volunteer team**

- **The heart of a volunteer is not measured in size, but by the depth of the commitment to make a difference in the lives of others.**
- **Volunteerism is the voice of the people put into action. These actions shape and mold the present into a future of which we can all be proud.**
- **Everyone can be great, because everyone can serve.**

# தொண்டாற்றல்

**“உண்மையான மகிழ்ச்சி மற்றவர்களை மகிழ்ச்சிப் படுத்துவதிலேயே கிடைக்கும்”**

உங்கள் வாழ்க்கையில் தொண்டாற்றலைச் சேர்த்துக் கொள்வது மிக முக்கியமாகும். எமது வாழ்வை வளம் படுத்தச் சமயம் நல்ல விடயங்களை அறிவுறுத்துகிறது. எங்களுக்குச் செல்லவும், ஆன்மீகம் பற்றி அறியவும் மற்றவருக்கு எடுத்துச் சொல்லவும் ஒட்டாவா சிவன் கோயில் இருக்கிறது.

சிவன் கோயில் தொண்டர்கள் கோயிலை நல்ல நிலையில் பராமரிக்கவும் ஒழுங்கு படுத்தவும் தங்களால் இயன்ற அளவுக்குப் பாடுபடுகிறார்கள். இதற்காகத் தங்கள் நேரத்தில் சிறுபகுதியை அர்ப்பணிக்கிறார்கள். கடந்த வருடங்களில் தொண்டர்களின் எண்ணிக்கயைக் கூட்டுவதில் முன்னேற்றம் கண்டுள்ளோம். புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கு முயற்சி செய்தும் வருகின்றோம். எங்கள் பிள்ளைகள் எமது பாரம்பரியத்தையும் சமயத்தையும் கடைப்பிடிக்கவும், - இந்து சமயம், சைவசமயம் பற்றி அறியவும் ஒரு பலமுள்ள அத்திவாரத்தைக் கட்டி எழுப்புவது எமது கடமையாகும். உங்களுக்கு ஏற்கனவே தெரிந்தபடி கண்ணால் காண்பதுவே நம்பக்கூடியது, ஒரு படம் ஆயிரம் சொற்களுக்குமேல் பெறுமதி வாய்ந்தது. சில நேரங்களில் எமது பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாது தவிக்கின்றோம். இதற்கு இலகுவான வழி அவர்களே பார்த்து அறிந்துகொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகும்.

மக்களைச் சந்திக்கவும் அளவளாவும் சிறந்த இடம் கோயிலாகும். மேலும் இக்கோயில் எமது தாய் நாட்டு வாழ்வின் ஞாபகங்களை மனதுள் அசைபோட வைக்கிறது. முக்கியமாக எமது வயோதிபர்கள் தாம் காலம் காலமாக வணங்கி வந்த முறையில் வணக்கஞ் செய்ய தமக்கென்று ஒரு கோயில் அமைந்ததுக்காக நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள். இது எமக்கு மிகுந்த மனத் திருப்தியைக் கொடுக்கிறது. எம்மைப் பெருமை கொள்ள வைக்கிறது. எமது குழந்தைப் பிராயத்தில் இருந்து மிகவும் மகிழ்ச்சி தருவது கோயில் வீதியில் திருவிழாகளின் போது எமது சமூகத்தினர் நடுவில் தெரிந்த முகங்களோடு இருப்பதுவாகும். உங்களுக்கு ஞாபகம் இருக்கும், நீங்கள் நண்பர்களுடன் கோயிலில் ஓடி ஆடி விளையாடினபோது உங்கள் பெற்றோர் அங்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்தார்கள். உங்களில் சிலருக்கு அல்லது பலருக்குக் கோயிலே வாழ்க்கை ஆரம்பித்த இடமாயிருக்கும். முதன் முதல் எமது வாழ்க்கைத் துணையைச் சந்திப்பதுக்குக் கோயிலை விட வேறு புனிதமான இடம் இல்லை. ஆனால் உங்கள் பெற்றோர் உங்களைப் பாதுகாப்பதற்காக அந்த நாட்களில் அதை நீங்களே செய்யவிடாது தடுக்க முனைந்ததும் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். இப்போது விளங்கியிருக்கும். அது கோயில் வருடாந்தத் திருவிழாக்களாகும். அவையெல்லாம் ஒட்டாவாவில் எமது கோயிலில் தொடர வேண்டுமென முயற்சி செய்வோம். இவை யெல்லாம் எமது மக்களைத் தொடர்ந்து இனிமையாக வாழவைக்கும். கோயிலை முன்னேற்றுவதற்கு உங்கள் எண்ணங்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கின்றோம். உங்கள் நேரத்தில் மிகச் சிறிய பகுதியை ஒதுக்குவதற்கு முயற்சி செய்யதால் உங்களால் நிச்சயம் முடியும். எமது குழுவில் சிலர் தமது முக்கியமான நேரத்தையே கொடுக்கிறார்கள். நாம் ஆக்கியுள்ள இப் பெருமையுள்ள குழு பற்றி அறியவும் சேரவும் வெட்கப்படாது தொண்டர்கள் யாராவது ஒருவருடன் தொடர்பு கொள்ளவும்.

சுருக்கமாக எமது தொண்டர்களின் செயல்கள் பின்வருமாறு:

1) ஒழுங்கு முறையில் உட்கோயில் சுத்திகரித்த லும் தண்ணீர் போட்டுத் துடைத்தலும் (Mop-up).
2) கோயில் வெளிவீதியும் வாகனத் தரிப்பிடங்க ளும் சுத்தமாக பராமரித்தல்.
3) காய்கறி, பூந்தோட்டம் தொடர்ந்து பராமரித்தல்.
4) தேவையானபோது மற்றோருக்கு உதவுதல், வாகன வசதியற்றவருக்கு கோயிலுக்குப் போக வர உதவுதல்.
5) கோயிலை முன்னேற்ற ஆலோசனைகளும் எண்ணங்களும் வழங்குதல்.

நன்றி. கடவுள் உங்களுக்கு அருள்வாராக!

உங்கள் உண்மையுள்ள

**சிவன் கோயில் தொண்டர் குழு**

# சிவன் கோயில் பரீட்சார்த்தத் தோட்டம்

ஒட்டாவா சிவன் கோயிலில் சென்ற வருடம் (2010) சிவனருளால் பரீட்சார்த்தமாக பூந்தோட்டம் ஒன்று உருவாக்கப் பட்டது சிவனடியார்கள் அநேகருக்குத் தெரிந்த விடயமே. அது பூந்தோட்டம் மாத்திரமன்று. அங்கு பூக்கண்டுகளும் காய் பழம் தரும் கன்றுகளும் நாட்டி வளர்க்கப்பட்டன. சென்ற ஆண்டு கோயில் தேவைகளுக்கு மேலால் கிடைத்த காய், பிஞ்சு, பழங்கள் சிவனடியார்க்கு மலிவு விலையில் கொடுக்கப்பட்டது.

சிவன் கோயிலுக்குச் சொந்தமாக ஐந்து ஏக்கர் காணி உண்டு. ஆண்டவன் நம்மிடம் காணியைக் கொடுத்து நாம், எமது சமுதாயத்தினர், என்ன செய்கிறோமென பரீட்சித்துப் பார்க்கிறான். எமது சமுதாயத்தின் வாழ்வு முறை பிற நாட்டுக்குப் புலம் பெயர்ந்ததோடு பட்டணத்தில், அதுவும் கனடா நாட்டின் தலை நகரம் ஒட்டாவாவில் வாழ்வதால் எமக்குச் சொந்தமான விவசாய அறிவு இளம் சந்ததியினரிடம் காணமுடியாத ஒன்றாக இருக்கிறது. பூக்கள், காய், பழங்கள் பற்றிச் சிந்தனை வந்தால் அவை விற்கப்படும் கடைகள் மனதில் வருவதே அல்லாமல் தோட்டங்கள் அவர்கள் மனத்திரையில் காண்பதில்லை. சைவசமயிகளான நாம் புல், பூண்டு, மரம், செடி, கொடிகளையும் எமது பிறப்புகளில் ஒன்றாகக் காண்கிறோம். மரம், செடி, கொடிகளை நட்டுப் பராமரித்துப் பயன் பெறுவது பெரிய புண்ணியமான காரியமாகும்.

சென்ற வருடம் சிவன் கோயிலில் தோட்டம் செய்து கிடைத்த அனுபவங்களால், இவ்வருடம் தோட்டம் மூன்று மடங்கு விரிவாக்கம் பெற்றுள்ளது. முக்கியமாக சென்ற வருடம் பல விதமான செடி கொடிகள் கலந்து நாட்டி வளர்க்கப்பட்டன. அதனால் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் தோன்றாவண்ணம் இம்முறை திட்டமிட்டு வேண்டிய மேடைகள் தேவையான மண்-பசளைகளோடு தயாரிக்கப் பட்டு பயிரேற்றி உள்ளோம். வருடத்தில் 110 நாட்களே இந்த விவசாயம் செய்யமுடியும். இவ்வருடம் மார்ச் 21 ந் திகதி வீட்டில் நாற்று மேடைகள் போட்டு அந்த நாற்றுகளும் பயிரேற்றப்பட்டன.

எமது பூந்தோட்டத்தில் றோஸ் (Rose), கார்னேஷன் (Carnation), சீனியார்ஸ் (Zeniars), செவ்வந்தி (Flowers Marigold), குளிர்காலத்துக் கேற்ற செம்பரத்தை (Winter Hisbiscus Rosa) ஆகியன (ஒவ்வொன்றிலும் மூன்று நான்கு வகைகள்) பயிரேற்றப்பட்டு அலங்காரத் திருவிழாவுக்கு வேண்டிய பூக்கள் பறித்து உபயோகப் படுத்துகிறோம்.

எமது காய்கறித் தோட்டத்தில் இவ்வருடம், மஞ்சள் போஞ்சி (Yellow Beans), பச்சைப் போஞ்சி (Green Beans), அவரை (Snowpeas), சப்பட்டை அவரை (Flat Beans), பயிற்றங்காய் (Beans), கீரை (Spinach), இலைக்கோவா (Collard), கோவாவகை (Kale), கத்தரி (Egg-Plant), வெண்டி (Kora), கரட் (Carrot) – 4 வகைகள், பீற்றூட் (Beetroot), தக்காழி (Tomatto), கறிமிளகாய் (Capcicum) – 3 வகைகள், பூசணி – 4 வகைகள் (Pupkin – 4 varities) ஆகியனவும், வத்தகப் பழம் (Water Melon), கன்ரலோப் (Cantalope) பழக்கொடிகளும் பயிரிட்டுள்ளோம். மிளகாயும் கீரை, கோவா வகைகள் கோயிலின் தேவைக்கு இப்போதே எடுக்கக் கூடியதாக இருக்கிறது.

கனடாவில் எப்போது பயிர் ஏற்றவேண்டும்? எப்படியான பயிர்கள் கூடிய பயன்தரும்? பயிர்களின் நாற்றுக்கள், விதைகள் எங்கே கிடைக்கும்? பயிர்கள் வளரும்போது எப்படி அவற்றை அன்போடு பராமரிக்க வேண்டும்? என்னும் விடயங்கள் ஒரு கலை. பயிர்கள் நம் கண்முன்னே வளர்ந்து பயன் தரும்போது நமக்குக் கிடைக்கும் மனநிறைவும் ஆனந்தமும் சிவனருளைப் போல் சொல்லில் வடிக்க முடியாது. இந்த ஆனந்தம் எம்மளவோடு இல்லாது உங்களுக்கும் கிடைக்க வேண்டுமாயின் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சிவன் கோயில் பரீட்சார்த்தத் தோட்டத்துக்கு வந்துதவுங்கள்.

பயிர்மேடைகள் போடுதற்கும் பசளை மண் நிரப்பிப் பயிரேற்ற உதவிய தொண்டர்களுக்கும் தேவையான கன்றுகளை வாங்கி உதவியோர்க்கும், வாகன உதவி தந்தோர்க்கும், சிவனருள் கிடைக்க வேண்டுவதோடு "வைத்தீஸ்வரம் ஆண்டு மலர்" மூலம் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சுந்தரமூர்த்தி சிதம்பரப்பிள்ளை**
**விவசாய ஒருங்கிணைப்பாளர்**
**ஒட்டாவா சிவன் கோயில்**

# OTTAWA SIVAN TEMPLE

## Board of Directors, Board of Trustees, Aministration, Coordinators and Members

### Board of Directors:

| Name / Position | Phone |
| --- | --- |
| Nanthaseelan Aiyadurai<br>*President* | 613-850-9931 |
| Sivasothy Sivagnanam<br>*Senior Vice President* | 613-421-2730 |
| Sellappah Ragavan<br>*Secretary* | 613-843-0690 |
| Thamboo Thevarajah<br>*Treasurer* | 613-825-4385 |
| Balasubramaniyam Shanchayan<br>*Joint Treasurer* | 613-355-3385 |
| Selliah Theivasihamany<br>*Vice President - Youth and Seniors* | 613-825-6449 |
| Baskaran Sinnanainar<br>*Vice President - Religion* | 613-761-6767 |
| Muttulingam Thambirajah<br>*Vice President - Operations* | 613-825-9570 |
| Niranjan Chelliah<br>*Vice President - Maintenance* | 613-823-4026 |
| Mathiyalaghan Rajadurai<br>*Vice President - Public Relations* | 613-823-8643 |
| Pageerathan Ariyaputhiran<br>*Vice President - Media Relations and Publications* | 613-324-7250 |

### Board of Trustees

| Name | Phone |
| --- | --- |
| Nanthaseelan Aiyadurai | 613-850-9931 |
| Sivasothy Sivagnanam | 613-421-2730 |
| Sellappah Ragavan | 613-843-0690 |
| Murugananthan Kathirithamby | 613-823-9876 |
| Kugendran Sabaratnam | 613-271-6449 |
| Tharmakularajah Sellathurai | 613-746-6624 |
| Thamboo Thevarajah | 613-825-4385 |
| Baskaran Sinnanainar | 613-761-6767 |
| Muttulingam Thambirajah | 613-825-9570 |
| Mathiyalaghan Rajadurai | 613-823-8643 |
| Muralitharan Subramaniam | 613-823-4913 |

### Administration:

| Name / Position | Phone |
| --- | --- |
| Kumarakuladervan Mahalingam<br>*Internal Auditor* | 613-747-3790 |
| Peethaamparam Vaithilingam<br>*Administrative Assistant* | 613-825-5949 |
| Sritharan Nadarajah<br>*Senior Maintenance Consultant* | 613-824-9472 |
| Sundaramoorthy Sithamparapillai<br>*Sivan Farm Coordinator* | 613-843-9807 |
| Rasananthan Anakan<br>Accountant | 613-435-0333 |
| Sathish Vallipuram<br>Lead of High Festival Committee | 613-825-6449 |
| Mayurananthan Sothirajah<br>Sujivan Rasaratnam<br>Suren Mohandas<br>*Web Masters* | 613-823-4752<br>613-823-4752<br>613-220-0346 |

### Priests:

Pathmanaban Sinnasamy Kurukal (Mukunthan Iar)
*Priest*

### Volunteer Coordinators:

| Name | Phone |
| --- | --- |
| Suthakar Pakiyanathan | 613-843-8402 |
| Mohan Sundaramoorthy | 613-843-9807 |
| Sribalakrishnan Subramaniam | 613-592-1732 |
| Rajeswary Thilainathan | 613-825-3317 |
| Parmalar Sanmugam | 613-825-4136 |
| Subathira Rajeswaran | 613-823-4864 |

# LIST OF MEMBERS
# OF OTTAWA SIVAN TEMPLE AS ON 01-JAN-2011

| | | |
|---|---|---|
| Ahila Balasundaram | | Mahindan Kathiravelu |
| Ammany Thevarajah | | Manickam Nimalan |
| Anthonipillai Rajanayakam | Harry A.Ruthnum | Mathialaghan Rajadurai |
| Arulampalam Nakeeran | Humsataruni Subramaniam | Mathiyaparnam Vipulananthan |
| Arulchelvan Kandiah | | Maurananthan Sothiraja |
| Arumainayagam Paskaran | | Mohan Suntharamoorthy |
| | Jeevagan Thavachelvi | Murugaiah Thambipillai |
| | Jeevakumar Kanagaratnam | Murugananthan Kathirithamby |
| Bala Ratnapillai | Jey Aiyadurai | Murugesupillai Vijayasekaran |
| Bala Sivagnanam | Jeyatheeban Nagarajah | Muthuraman Ragenderan |
| Balaganesh Nadarajah | Jothiravi Subramaniyam | |
| Balasrikugan Kandiah | | |
| Baskaran Sinnanainar | | N. Radhakrishnan |
| | K.Ganeshmoorthy | N.Krishnamoorthy |
| | K. Jeyamoorthy | Nanthan Nadarajah |
| Candasamy Devarajah | K. Nagalingam | Nanthaseelan Aiyadurai |
| Chambers Gas | K.Logesan | Nanthan Sellathurai |
| | K.Murukesapillai (Seelan) | Navamshan Murugesapillai |
| | K.Muthurajah | Nesabalan Balasundaram |
| Dr. Mohan Pancharatnam | Kana Shankar | Niranjan Chelliah |
| Dinesh Krishnan | Kannan Tennankone | Nisanthan Ravindrakumar |
| Dr. Somarajah | Kapilan Ramachandran | |
| Dr. Umesh Rayer | Kasilingam Nagaraj | |
| Dr. T. Nitheanandan | Kavitha Suganthan | P. Manoharan |
| | Kirupaharan Namasivayam | Paheerathan Ariyaputhiran |
| | Kirubananthi Murugananthan | Paheerathan Shanmugasundaram |
| Easparan Santhirasegaram | Kokulan Balasubramaniam | Parmalar Sanmugam |
| | Kopivinopa Kanagas | Pirabakaran Kumararatnum |
| | K. Kugathasan | Prabaharan Adchalingam |
| G. Oothayakumaran | Kugendran Sabaratnam | Pirapaharan Kanesalingam |
| Gajendra Kandiah | Kula Sellathurai | Pradeepan Shanmugalingam |
| Gajendran Kanapathipillai | Kumarakuladervan Kumarakulasingam | Prem Kumarathasan |
| Gajendran Mahenthiran | | Premjeyanth Sivasamy |
| Ganenthiran Mahendran | | |
| Ganesarajah Thirunavukarasu | Letchumanan Yogendran | |
| Ganeshram Paramananthan | Loyed Chellapillai | Quinius Perera |
| Ganeshvaran Muthu | | |
| Gayathiri Yogendran | | |
| Gnanbalan Subramaniam | Mahadevan Aravindan | R.Jegatheesvaran |

# LIST OF MEMBERS
# OF OTTAWA SIVAN TEMPLE AS ON 01-JAN-2011 (Cont.)

| | | |
|---|---|---|
| Rajeshwaran Rajaratnum | Sivaananthan Sabaratnam | Theivan Iyampillai |
| Ramesh Manikavasakar | Sivapalan Siva | Thevy Varaprasatham |
| Ramesh Selladurai | Sivarajah Balasubramaniam | Thillainadesan Thiyagarajah |
| Ramesh Vivekanandarajah | Sivarankesan Jeyarajah | Thiru Ajanthan |
| Rameshan Subramaniam | Sivaruban Sivalingam | Thirun Ravi |
| Ranjidthan.C | Sivasothy Sivagnanam | Thiruselvam Somasundaram |
| Rasananthan Anakan | Sivasuriya Ponnampalam | Thivyaloginy Pathmarajah |
| Raveenthiran Ponnambalam | Sivasuthan Kathirgamanathan | Thurailingam Veravaku |
| Rewathy Thushyanthan | Sivathanu Velayudhan | |
| Roobaharan Rajalingam | Sothyvannan Ratnasabapathy | |
| Rosan Antonipillai | Sri Balakrishnan | V. Murugathasan |
| | Srirangan Nalliah | V.Yogendran |
| | Sriranganathan Rasu | Vahesan Srirajasingam |
| S. Arudchelvam | Subodini Thevarajah | Vani Siva |
| S.Parthipan | Subramaniam Ganapalan | Varathan Maheswaran |
| S.Sivathayalan | Sukumaran Ganeshan | Vasuki M Basavanahalli |
| Sabanadesan Ravishankar | Surendiran Mohanathas | Venu Kayathi |
| Sakunthala Srighanthan | Suresh Sangarapillai | Vijayanarada Dittakavi |
| Sandiren Premkunthan | Sureshkumar Suntharalingam | Vijayasekaran Muthucumarasamy |
| Sanjayan Balasubramaniyam | Sutha Kumarakuladevan | Vijayasooriyakandan |
| Saratha & Yogeswaran | Suthakar Pakianathan | Vijayendran Mahendran |
| Saravanabavan Ganeswaran | Suthan Selvaratnam | Vejitharan Varatharajah |
| Sathees Ramachandran | Sutharsan Manikavasakar | Vinoja Vikneswaran |
| Satheeskumar Vaithilingam | Sutharsan Sundralingam | Vithiya Perampalam |
| Sathishkumar Vallipuram | Susi Nalliah | |
| Sathiyalingam Nannithamby | | |
| Satkunanathan Satkunarajah | | Waheesan Mathiyaparanam |
| Segar Rajalingam | Thamayanthi Mohan | |
| Sellappa K.Ragavan | Thambirajah Muttulingam | |
| Selliah Theivasihamany | Thambithurai Ravichandramohan | Yamini Thurairaja |
| Selvanathan Shanmuganathan | Thampoo Thevarajah | |
| Selvarani Pulendran | Thangavel Muthuali Kesavan | |
| Siva Palaninathan | Thavarajah Sangarapillai | |
| Sivakumar Ganesapillai | Thavputhian Sivathasan | |
| Sivakumar Sivasambu | Thayalan Thanabalasingam | |
| Sivakumaran Gunaratnam | Thayananthan Prasanna | |

**Note:** Members who find their names not listed above kindly inform the office to update information.

**Space for Photo**

# சைவசமய வகுப்புகளும்
# யோகமும் தியானமும் பயிற்சிகளும்

எமது சைவச்சிறார்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு சமய அறிவை வளர்க்க வேண்டும் என்ற நோக்கம் எழுந்த போது **திரு பாலா துரைரட்ணம், ஆனந்தி முருகானந்தன்** ஆகிய இருவரும் தாம் சமய வகுப்புக்களை நடாத்தித் தருவதாக முன்வந்தார்கள். அதன் அடிப்படையிலேயே **ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்** சமய வகுப்புக்கள் **தை 2011ல்** இருந்து சைவநெறிமன்றத்துாடாக ஆரம்பிக்கப்பட்டது. இவற்றுள் சிறுவர்களுக்கான சைவநீதிக்கதைகள், நாயன்மார்களின் வரலாறுகள், தேவார-பஜனைப் பாடல்கள் என்பன அடங்கும்.

இத் திட்டத்தின் விரிவாக்கமாக சிறியோர், பெரியோர்களுக்கான யோகாசன வகுப்புக்கள் **திரு/திருமதி தெய்வசிகாமணி** அவர்களாலும், பெரியோர்களுக்கான இராஜயோகப் பயிற்சி/ஆன்மீக விளக்கங்கள் என்பன Dr. **வெங்கட் நரசிம்மன்** அவர்களாலும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் சிறுவர்களுக்கும் சிவனடியார்களுக்கும் **பெரியோர் உவந்தளிக்கும் அன்னதானமும்** வழங்கப்படுகிறது.

சிவனடியார்களை இத்திட்டத்துக்கு ஆதரவு தருவதோடு ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் கோயிலுக்கு வந்து இந்த ஆன்மீகப் பயிற்சிகளில் பங்கு கொண்டு வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமியின் அருள் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஓம் நமச்சிவாய!

**இயக்குனர் சபை, ஒட்டாவா சிவன் கோயில்**

# Saivaism Classes
# And Yoga & Meditation Training

Considering Saivaite children for developing their knowledge on religion, **Mr. Bala Thurairatnam and Mrs Ananthi Murugananthan** came forward to conduct classes for children. On that basis Saivaism classes are conducted through **Saivaneri Manram** on every Sunday since January 2011. The curriculum of the classes includes Saiva Moral Stories, Life History of Nayanmaar, Thevara-Bhajan Singing.

As an extension of this program ‘Yogaasana’ Classes are conducted to adults and kids by **Mr and Mrs Theivasihamany** and Spiritual Discussions and Meditation are also conducted by **Dr. Narasimman**. Special Lunch Meals (Annathaanam) are also provided sponsored by generous devotees.

Siva devotees are kindly requested to support this scheme by visiting temple regularly on Sunday mornings and get benefitted by this Spiritual programme and get blessed by Vallavambika Sri Taiyalnayaki Sametha Vaithiyanatha Swamy.

Aum Namachivaaya!

**Board of Directors, Ottawa Sivan Temple**

# நமது வாசலுக்கும் வைத்தீஸ்வரன் வருவான்

புலவர் ஈழத்துச் சிவானந்தன்
(நிறுவனர், ஆதி அருள்நெறி மன்றம் – கனடா)

சிவபெருமானே நமது முழுமுதற் கடவுள். நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தெய்வம். நமது வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை தானே வாழ்ந்து காட்டிய தந்தை. திருக்கல்யாணம் அர்த்தநாரீஸ்வர இணைக் குடும்பம், குழந்தைகள், கூட்டு வாழ்க்கை, கொண்டும் கொடுத்தும், கருணை செய்தும், படித்தரம், அருள்வரம் என்றும் பத்ததி முறையும், சந்நிதி முறையும் உருவாக அருள்பாலித்த இன்ப அன்புடைமை என்பன எண்ணி எண்ணி வியக்கத்தக்கன. அன்பே சிவம் என்ற அர்த்தம் ஆருயிர்க்கெல்லாம் அன்பு காட்டல் வேண்டும் என்ற கோட்பாட்டினை கோடிட்டுக் காட்டுவதாகும்.

தாய்போன்று நமக்குத் துணை செய்யும் தனித் துணைவரே சிவபெருமான். நமக்குப் பின்னால் நின்றும், நடந்தும், திரிந்தும், நம்மைக் கவனிக்கும் கண்காணிப்பாளர். “புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே” என்பார் மணிவாசகர். அப்பனாய், அம்மையாய், அன்புடைய மாமன் மாமியாய், ஒப்புடைய மாதராய், ஒண்பொருளாய், ஒரு குலமாய், சுற்றமாய், ஓர் ஊருமாய் விளங்கி நாம் அனுபவிப்பதற்கும், அறுதலடைவதற்கும் வேண்டியனவற்றைத் தந்து அருள் செய்யும் அம்மை அப்பனே சிவபெருமான்.

சிவபெருமானுக்குப் பல பெயர்கள் உண்டு. அத்தனையும் காரணப்பெயர்களே. இடுகுறிப் பெயர்கள் இரண்டொன்றும் இருக்கிறது. காரணப் பெயர்களே நமது கணிப்புக்குரியன. வாழ்க்கை காரண காரியங்களால் நகர்வது. இந்த இயங்கலில் கலந்து கணத்துக்குக் கணம், தருணங்களுக்கும், சமயோசிதங்களுக்கும் ஏற்ற வடிவமும் குணமும் செயல்பாடும் கொண்டு தோற்றம் பெறும்போதெல்லாம் காரணப் பெயர்கள் சிவனுக்கு அமைந்து விடுகின்றன. வைத்தீஸ்வரன் என்பது நோய் தீர்க்கும் வைத்தியன் என்னும் பொருளதாகும்.

நமது உடல் மனநோய்களைப் பரிசோதிக்கும் குடும்ப வைத்தியர் (Family Doctor) போன்று நமது முன்வினை நோய்களையும் பின்வினை நோய்களையும் தீர்க்கும் ஈஸ்வரனாக வைத்தீஸ்வரன் விளங்குகிறான்.

குடும்ப வைத்தியரிடம் நமது நோய்களை மறைக்காமல் சொல்லவேண்டும். அவரும் நாடி பிடித்து நமது நோய்களைக் கண்டு பிடிப்பார். வினைப்பிறவியின் நோய்கள் என்ன என்பது நமக்குத் தெரியாது. ஊழ்வினையின் உபாதை எப்போது உண்டாகும் என்பது புரியாது. நாளை என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோமா? இல்லை. சுகமாய் சுமாராய் நகரும் வாழ்வு நம்மை அதிரவைக்கும் திருப்பங்களைச் சந்திக்கலாம். நேற்று நன்றாய் இருந்த நாம் இன்றோ நாளையோ நடுங்கிப் போகிறோம். நம் பொருட்டோ, நம்மவர் பொருட்டோ இந்த நடுக்கம் வரலாம். என்றும் அமைதியாய் இன்பமாய் உறவுகளைப் பேணி, உணர்வுகளை மதித்து வாழ விரும்பும் நாம் குடும்ப வைத்தியரிடம் நம்பிக்கையோடு போவது போன்று குடும்பக் கடவுளான வைத்தீஸ்வரனிடம் நம்பிகையுடன் போகவேண்டும். பேசவேண்டும்.

நாம் ஒன்றும் சொல்லாமலேயே வைத்தீஸ்வரனுக்கு முன்னால் நின்றதும் அவன் பார்வை நமது நோய்களை, துன்பங்களை அறிந்து குணப்படுத்தும். வைத்தியனைக் கண்டாலே நோயின் அரைப் பகுதி போய்விடும் என்பார்கள். வைத்தீஸ்வரன் நம்மைக் கண்டாலும் அரைப் பகுதி வினைநீக்கம் உண்டாகும். பரமனின் பார்வை படவேண்டும். பக்தி பரவ வேண்டும் என்பது நமது சமய உண்மை. ஏன் வந்தாய் என்று கேட்காமல் என்று வந்தாய் என்னும் திருக்குறிப்பில் நோய்நாடி நோய்முதல்நாடி அது தீர்க்கும் வாய்நாடி பிடிப்பவனே வைத்தீஸ்வரன். உடையாய் என்னைக் கண்டுகொள் இருக்கும் துன்பங்களையும் இனிமேல்வரும் துன்பங்களையும் நீக்கி அருள்க என்று வேண்டுதல்

செய்தலும் வழிபாட்டின் ஒருவகையே. வேண்டப் படுவதை அறிந்தாலும் வேண்ட முழுதும் தரும் தெய்வமாய் தையல்நாயகி சமேதராய் தண்ணளி செய்கிறான் வைத்தீஸ்வரன். நமது உறவு நிலைகளில் நாம் மதித்துக் கொண்டாடும் உறவினர்களே நம்மை மதித்து நமது சுக துக்கங்களை விசாரிப்பார்கள். அவர்கள் வீட்டிற்குச் சென்று நாம் காட்டும் அன்பு உசாவல் உரையாடல் அவர்களையும் நமது வீட்டுக்கு வரவழைத்து அன்பு பாராட்ட வைக்கும்.

வைத்தீஸ்வரனோடு கொள்ளும் உறவு நிலை யும் இது போன்றதே. நாம் வைத்தீஸ்வரனிடம் போனால் அவன் நமது வீட்டுக்கு வருவான். நாம் அவனிடம் செல்வதற்குப் பல சிரமங்கள் இருக்கலாம். நேரம், தூரம், வேலை, களைப்பு, சோம்பல் போன்ற சிறு சிறு தடைகள் இருப்பது இயல்பே. இத்தனை தடைகளையும் தாண்டி நாம் அவனை வணங்கும் விருப்பத்தில் ஆவலில் திழைத்தால் அவனருளாலேயே அவனுடைய ஆலயத்துக்கு செல்லும் வழி பிறக்கும். ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமான் என்கிறது திருவாசகம்.

நாம் அவனுக்குத் தெரியக்கூடியதாக அவன் ஆலயத்துக்குச் செல்வோம். அவன் நமக்குத் தெரியாமலேயே நமது வீட்டிற்கு வந்து நல்லது செய்து திரும்புவான். நமது வீட்டில் நேரத்துக்கு நேரம் நடக்க வேண்டியவை நேரம் தவறி நடக்கலாம். நாம் பேசும் வார்த்தைகள் வீட்டில் உள்ளவர்களை சினம் கொள்ள வைக்கலாம். மனம் நோகச் செய்யலாம். குழந்தைகள் தொல்லை நம்மைக் குழப்பலாம். வேலைப் பழுக்கள் மனதை அழுத்தலாம். சில தடைகள் குறுக்கீடுகள் நம் மனதைக் குலைக்கலாம். இவை எல்லாம் இல்லற வாழ்க்கையில் இயல்பாக எழுகின்ற அகோர அலைகள். வீட்டுக்கு வீடு வாசல் படிகள் என்பது போன்று இவை எல்லா வீடுகளுக்கும் இயல்பானதே.

இந்த இயல்பு வாழ்க்கையால் நாம் சிதறி விடாமல், சிதைந்து போகாமல் மனத்திடத்தோடும் துணிவோடும் அத்தனை அலைகளையும் புறம்தள்ளி, நீர் அலையில் அமிழ்ந்து எழுவதுபோல் எழுந்து நிற்கிறோம். நிமிர்ந்து நிற்கிறோம். புதிய அனுபவ வார்ப்போடு சகித்தும், சமாளித்தும் மீண்டும் புத்துயிப்புக் கொள்கின்றோம். இது எப்படி எதனால் நிகழ்கிறது? ஒருவர் வரவால், ஒரு கணத்தின் நகர்வால் எல்லாப் பிரச்சனைகளும் சூரியனைக் கண்ட பனிபோல் அகன்று விடுவது போலவே,

வைத்தீஸ்வரன் வரவால் நமது வீட்டுப் பிரச்சனைகள் அடங்கிப் போவதை; அடுத்த கட்டத்திற்கு சுகந்த சூழ்நிலைக்கு நகர்வதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கடவுளைத் தோன்றாத் துணைவன் என்பார்கள் ஞானிகள்.

தனது உருவத்தைக் காட்டாமல் நம் வீட்டுக்கு வந்து துணை செய்யும் வைதீஸ்வரனை நமது வீட்டு வாசலுக்கு வரவழைக்க வேண்டும். இதற்கு நாம் இயன்ற மட்டும் அவனிடம் போக வேண்டும். நித்தமும் எம்பிரானுடைய கோயிலுக்குப் போகவேண்டும் என்றார் நாவுக்கரசர். இன்றைய எமது வாழ்க்கச் சூழலில் இது முடியாத காரியம். முடிந்தமட்டும் போவதும் போனபோது கண்ட அர்ச்சனை பூசைகளையும் அம்பிகை பாகனின் திருமேனியையும் நெஞ்சில் பதித்து நித்தம் நித்தம் நினைந்து நினைந்து உள்ளுருகி உருகி வாழ்வதே முடியக்கூடிய காரியமாகும்.

நினைப்பவர் மனங்களில் மட்டுமல்ல மனைகளுக்கும் வருவான் வைத்தீஸ்வரன். தனியாகவா? இல்லை. தையல்நாயகியோடு வருவான். அம்மை அப்பனாய் அவன் வருவது நமது தாயும் தந்தையும் வந்தது போன்றிருக்கும். வாழ்வும் மலரும்.

மலையாள எழுத்தாளர் குட்டிக்கிருஷ்ணன் எழுதிய நாவலில் ஒரு கட்டம் வருகிறது. அநாதையான இளைஞன் ஒருவன் இன்னொரு அநாதைப் பெண்ணைக் காண்கிறான். அவள் ஏமாற்றப்பட்டு அடுத்தவேளை உணவுக்கு வழியற்றவளாக வாழ்பவள். அநாதை இளைஞன் அவளை மனைவியாக ஏற்க முடிவு செய்கிறான். தனது விருப்பத்தை அவன் அவளிடம் சொன்னபோது அவர்கள் இருவருமே அத் தருணத்தில் அநாதைகள் இல்லாமல் ஆகிறார்கள். நாதி உள்ளவர்களாக உணர்கிறார்கள். அக்கணமே வயிறுகள் நிறைகின்றன. இருவருக்குமே வாழ்க்கையில் பொருளும், நம்பிக்கையும், ஒளியும், பற்றும் ஏற்படுகிறது. அந்த நேரத்தை கணத்தை சுருக்கமான சொற்களால் சொல்ல எண்ணிய குட்டிக்கிருஷ்ணன் "அவ்வழியாக தெய்வம் சென்றது" என்கிறார்.

தேடிப்போன தெய்வம் வாசலுக்கு வந்தது என்று ஒரு பழமொழி உண்டு. பழமொழி அறிவின் வெளிப்பாடு அல்ல அனுபவத்தின் வெளிப்பாடே.

**"நம் வாசலுக்கும் வைத்தீஸ்வரன் வருவான்"**

# ஈழத்து ஈஸ்வரங்களும் கனடா வைத்தீஸ்வரமும்

திருமதி விஜயராணி மதியழகன்

எமது ஈழதேசத்தில் பல திருத்தலங்கள் உள்ளன. அவற்றுள் சைவத்தின் முழுமுதற்க் கடவுளான சிவனுக்கே உரித்தான சிவத் தலங்கள் பல உள்ளன. அவற்றுள் ஈஸ்வரங்களும் பல உள்ளன. ஈஸ்வரங்களுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை ஐந்து ஈஸ்வரங்கள். அவையாவன:

1) திருக்கோணேஸ்வரம்,
2) திருக்கேதீஸ்வரம்,
3) முன்னேஸ்வரம்,
4) நகுலேஸ்வரம்,
5) தொண்டீஸ்வரம் என்பனவாகும்.

ஈழதேசத்தின் திருகோணமலை மாவட்டத்தில் இயற்கை எழில் பொங்கும் கடலும், மலையும், கவின் கூட்டமும், புள்ளினங்களும் ஒருங்கே அமைந்த இடந்தான் **திருக்கோணேஸ்வரம்.** தட்சணகைலாயம் என்றும் அழைக்கப்படும். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைக் கொண்டது. இத்திருத்தலத்தில் வீற்றிருந்து எமக்கெல்லாம் அருள்பாலிப்பவர் திருக்கோணேஸ்வரநாதர். அவர் சக்தி மாதுமை அம்மன். இத்திருத் தலத்தின் தீர்த்தம் பாவநாச தீர்த்தம் ஆகும். இத் தீர்த்தத்தில் நீராடினால் எமது பாவங்கள் தீர்ந்துவிடும் என்பது ஐதிகம். தலவிருட்சமாக விளங்குவது ஆலமரம். இத்தலமானது சமய குரவர்கள் நால்வரில் ஒருவரான திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்ற திருத்தல மாகும்.

**திருக்கேதீஸ்வரம்** மன்னார் மாவட்டத்திலுள்ள மாதோட்ட நகரில் பாலாவித் தீர்த்தக்கரையில் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவன் பெயர் திருக்கேதீஸ்வரத்தார். இவ் இறைவனுக்கு 'நாகநாதர்' என்றும் ஒரு பெயருண்டு.இறைவியின் பெயர் கௌரியம்மை. இத்தலத்தின் தீர்த்தமாக விளங்குவது பாலாவி தீர்த்தம். தல விருட்சமாக விளங்குவது வன்னி மரம். நாயன்மார்களான ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும்தேவாரம் பாடப்பெற்ற சிறப்பினை உடையது இத்தலம்.

**முன்னேஸ்வரம்** இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இத்திருத் தலமானது இராமாயணக் கதையுடன் தொடர்புடைய வரலாற்றுப் பெருமைமிக்கதாகும். இங்கிருந்து அனைவருக்கும் அருள்பாலிக்கும் இறைவன் பெயர் முன்னைநாத சுவாமி, இறைவியின் பெயர் வடிவாம்பிகை அம்பாள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீரிமலை என்னும் இடத்தில் அமைந்துள்ள திருத்தலமே **நகுலேஸ்வரம்.** சிவபெருமானால் சபிக்கப்பட்டு கீரிமுகமடைந்த முனிவர் இங்கு நீராடி பாவ விமோசனம் பெற்றதால் கீரிமலை என்னும் பெயர்பெற்றதாகவும், நகுலம் என்ற வடசொல் கீரி என்று பெயர்பெறுவதாலும், இவ் ஆலயம் நகுலேஸ்வரம் என்னும் பெயர் பெற்றுள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப் பெற்றது. இறைவனின் பெயர் நகுலேஸ்வரப்பெருமான், அம்பாள் பெயர் நகுலாம்பிகை. கீரிமலைத் தீர்த்தம் தலதீர்த்தமாகும். தல விருட்சமாக விளங்குவது கல்லால மரம் ஆகும்.

**தொண்டீஸ்வரம்** இலங்கையின் தென்திசையில் மாத்தறை மாவட்டத்தில் தெய்வேந்திரமுனை என்னும் பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. பஞ்சஈச்சரங்களில் ஒன்றாக விளங்கும் இத்திருத்தலமானது வரலாற்றுப் புகழ் மிக்கதாகும். இலங்கையின் நான்கு திசைகளிலும் இவ் ஈஸ்வரங்கள் அமைந்து, ஈழவள நாட்டைக் காவல் காத்ததாக கூறப்படுகின்றது. இலங்கையைப் போத்துக்கீசர் ஆக்கிரமித்தபோது இத்திருத் தலமானது சிதைவடைந்து போனது. பின்னர் அகழ்வாய்வின்போது பெரிய சிவலிங்கம் கண்டுபிடிக்கப் பட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஈழத்து ஐந்து ஈஸ்வரங்களைப் பார்த்த நாம், கனடா நாட்டின் ஈஸ்வரத்தின் வரலாற்றைப் பார்ப்போம். தென்னிந்தியாவில் சீர்காழிக்குப் பக்கத்து ஊராக விளங்குவது வைத்தீஸ்வரம்.

இங்கிருந்து மக்களுக்கெல்லாம் அருள் பாலிக்கும் இறைவனின் பெயர் வைத்தியநாதர். இறைவி பெயர் தையல்நாயகி அம்பாள் . இவ் ஆலயத்தின் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்த திருத்தலங்களே ஈழதேசத்தில் வண்ணை வைதீஸ்வரமும், கனடா நாட்டின் தலைநகர் ஒட்டாவாவில் அமைந்த வைத்தீஸ்வரமும் ஆகும்.

கனடா **வைத்தீஸ்வரம்** என அழைக்கப்படும் இத்திருத்தலத்தில் இறைவன் பெயர் வைத்திய நாதர் இறைவி பெயர் தையல்நாயகி அம்பாள். "சக்தி இன்றிச் சிவமில்லை" என்னும் பொருளுக்கிணங்க தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமியாக எமக்கெல்லாம் அருள்புரிந்து, புலம் பெயர்ந்தாலும் உள்ளம் மகிழ ஒரு சிவாலயம் அமைந்தது எம்மினத்தவர்க்கு ஒரு கொடை என்றே கூறலாம். இத்திருத்தலமானது ஏனைய பரிவார மூர்த்திகளும் அமையப்பெற்று சிறப்புற்று விளங்குகின்றது. செய்வாய் (அங்காரகன் கிரகத்திற்கு தனி விக்கிரகம் அமைத்து வழிபடும் திருத்தலம் வைத்தீஸ்வரம் மட்டுமே. அவ்வாறே நவக்கிரக மூர்த்திகளும் அமையப்பெற்றதோடு, சூரியனுக்கு தனி விக்கிரகமும் அமைத்துப் பூசைகள், வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஆலயத்தின் சிறப்பு என்பது அனைவரும் அறிந்தது. நோய்களைத் தீர்த்து வைப்பவர் வைத்தியர் . அவ்வாறே நோய், பிணி, துன்பம் அனைத் தையும் தீர்ப்பவர் வைத்தியநாதர். அவரே இத் திருத்தல மூர்த்தி. முழுமுதற்க் கடவுளாகிய சிவனே இத்திருத்தலத்திற்கு மூர்த்தியாக அமைந்தது நாம் செய்த பாக்கியமே.

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே,**

**நாடு நகரமு நற்திருக் கோவிலுந்**
**தேடித்திருந்து சிவபெருமானென்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாய் கொள்வேனே''**

என்று திருமூலர் கோயில் அமைப்புப் பற்றி சிறப்பாக கூறியுள்ளார்.

இந்த ஆலய அமைப்புக்கேற்ப இத்திருத்தலமும் விரைவில் மிளிரும் என்பதில் ஐயமில்லை. ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்''.

இவ் ஆலய தீர்த்தம்பற்றி நோக்குவோமானால், கனடாவில் தொட்டிகளில் சேமித்து சுத்திகரித்த தண்ணீரை குழாய்மூலமாக பெற்றே அனைவரும் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் இத் தேசத்தில், வைத்தியநாதர் அருளால் வைத்தீஸ்வரத்தில் ஊற்று நீர்; பூமியிலிருந்து ஊறும் நீர்தான் தீத்தமாக அமைந்துள்ளது. பூமாதேவியின் ஊற்று சிவனின் தலைமுடி யிலிருந்து கங்கை நதியாக ஓடுவது போல் எம்பெருமான் வைத்தியநாதர் பூமியின் உடன் ஊற்று நீரில் தினம் நீராடுவது என்பது நினைத்துப் பார்க்கமுடியாத அதிசயம். அதுவும் அவன் அருளே.

**இத்திருத்தலத்தில்** தினப் பூசை, விசேட பூசை, வருடாந்த உற்ச்சவம் என்பன ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. வருடாந்த உற்ச்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்தாம் நாள் தீர்த்த உற்ச்சவமும், மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். பூங்காவன்த் தன்று தையல்நாயகி சமேத வைத்தியநாதர் மணவாளக் கோலத்தில் ஊஞ்சல் ஆடும்போது திருவூஞ்சல் பாட்டுக்கள் பாடப்படும். வைத்தீஸ் வரத்துக்குரிய ஊஞ்சல்ப் பாடல்களை **திரு. சண்முகம் நடராஜா** அவர்கள் இயற்றிப் பாடியுள்ளார்.

"கோயிலில்லாத ஊரிலே குடியிருக்கலாகாது" என்னும் முதுமொழிக் கிணங்க, எமது ஊருக் கென்று அமைந்த கோயில் வைத்தீஸ்வரம். பல ஊர்களிலிருந்து மக்கள் ஆலய தரிசனத்திற்காக இங்கு வந்து செல்வது வழக்கம்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று "

***************

# இடர் கடி கணபதி

## திருமதி பிருந்தா பாஸ்கரன்

தமிழரின் சமயம் சைவசமயமாகும். சிவத்தை முழுமுதற் கடவுளாக வழிபட்டு வந்த தமிழ் மக்கள் தம்மிடத்து ஒற்றுமை வளரவும், ஒன்றாகச் சேர்ந்து வாழவும் தாம் வணங்கும் சிவனையும் ஒரு குடும்பமாகப் கண்டார்கள். கடவுளைக் குடும்பமாகக் கொண்டு வணங்கி வருவதால் மக்களும் அக்கலாச்சாரத்தை இலகுவாக ஏற்று ஒற்றுமையான குடும்பங்களாக வாழ வழி செய்தனர்.

சிவத்தின் செயல்பாட்டிற்கு சக்தியையும், அவர்களின் குழந்தைகளாக கணபதியையும் முருகனையும் கண்டனர். ஆகவே பிள்ளையார் சிவன் பார்வதியின் பிள்ளையாகவும் முருகக் கடவுளின் அண்ணனாகவும் கருதப்படுகின்றார்.

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவரிடர் கடிகண பதிவர வருளினன் மிகுகொடை வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**

இது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம் ஆகும். இதன் பொருள்: மிகுதியாக வழங்கும் கொடையே தமக்கு அழகைத் தரும் என நினையும் வள்ளற் பெருமக்கள் வாழும் வலிவலத்தில் உறையும் இறைவன், உமையம்மை பெண்யானை வடிவுகொள்ள, தான் ஆண்யானையின் வடிவு கொண்டு **தன் திருவடியை வணங்கும் அடியவர்களின் இடர்களைக் கடியக் கணபதி**யைத் தோற்றுவித்தருளினான்.

அவர் வெவ்விய தன்மையுடைய யானை முகமும் துளை உள்ள கையும் (துதிக்கை) நான்கு திருக்கரங்களும் மலர் போன்ற இரு பாதங்களும், பவள வாயும், முத்துப்பூண் அணிந்த தந்தங்கள் இரண்டும், கோடி சூரியப் பிரகாசமான விளக்கம் உள்ள திருமேனியும் பேடகம்போல் அகன்ற குட உருவிலான வயிறும் பூணூலும், சுளகு போன்ற விரிந்து மடியும் செவிகளுமாய் விளங்கும் ஐங்கரப் பெருமானாகிய பிள்ளையாரே.

குளக்கரை, நாற்சந்தி, முச்சந்தி, தெருமுனை என வானம் பார்க்க அமர்ந்திருக்கும் ஒரே சுவாமி பிள்ளையார்தான். **"ஆற்றங்கரை ஓரத்திலும் அரச மர நிழலினிலும் வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்"** என மக்களால் போற்றி வழிபடப்படுகின்றார். இந்து நாகரிகத்தின் வளர்ச்சியால் எமது பண்டைய மன்னர்கள் பல சிவாலயங்கள், சக்தி பீடங்கள் அமைத்து இறைவழிபாட்டை ஊக்குவித்தனர். எங்கெல்லாம் ஆலயங்கள் அமைக்கப்பட்டதோ அங்கெல்லாம் பிள்ளை யாரைப் பிரதிஷ்டை செய்து அவரை முழுமுதற் கடவுளாக வழிபட்டனர்.

பின்னர் பிள்ளையாருக்குச் சிறப்பாக தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டன. குறிப்பாக ஈழ்நாட்டிலே எமது தமிழ்மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணத்தில் பிள்ளையாருக்குப் பல காரணப் பெயர்கள், செல்லப்பெயர்கள் சூட்டி செல்லப்பிள்ளையார், வெள்ளைப்பிள்ளையார், சித்திவிநாயகப் பிள்ளையார், சிற்றம்பலப் பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார், சிந்தாமணிப் பிள்ளையார், கருணாகரப் பிள்ளையார், பழங்கிணற்றடிப் பிள்ளையார், தலங்காவல் பிள்ளையார், எனப் பல ஆலயங்கள் அமைத்து சிறப்போடு விநாயகரை வணங்கி வருகின்றனர்.

பிள்ளையார் ஞான சொரூபமானவர். பிள்ளை யாருக்கு எள்ளுப்பாகு, கற்கண்டு, அவல், மோதகம், அப்பம், முதலிய நிவேதனப் பொருட்கள் படைக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பிரசாத வகைகள் பிள்ளையாருக்குப் படைத்து அவற்றைப் பிரசாதமாக நாம் உண்ணும் போது திருவருளுடன் சாத்வீக குணங்களும் எம்மைச் சேருகின்றன.

விநாயகப் பெருமானையே நாம் முதலில் வழிபட வேண்டும். மூலம் முழுவதும் முடிவுமாக விளங்கும் பிரணவ வடிவினராகிய விநாயகப் பெருமான் விளங்குவதால் இவரின் வழிபாடு முதன்மை பெற்றது. அ + உ + ம் ஆகிய மூன்று எழுத்துக்களின் நாதங்கள் ஒருங்கிணயும்போது 'ஓம்' என்னும் ஒலி பிறக்கிறது. நாத வடிவில் இறைவன் நமக்கு காட்சி தருவதற்கே பிரணவம் ஆகிய 'ஓம்' எனும் எழுத்தைப் போன்ற யானையின் முகத்தை தனது திருவதனமாகக் கொண்டு விநாயகர் விளங்குகிறார்.

அவரை முதலில் வணங்கினால் நாம் ஆரம்பிக்கும் எக்காரியமும் இடையூறு இன்றி நிறைவேறும். அல்லாவிடில் விக்கினங்கள் சம்பவிக்கும் எனவும் நமக்கு கந்தபுராணம்

அறிவுரை பகருகின்றது. விநாயக வழிபாடு செய்யாவிடில் தீமை விளையும் என்பதை சிவபெருமான் திரிபுரதகனம் செய்ய முற்பட்ட போது தேர் அச்சு முறிந்ததனால் நமக்கு உணர்த்துகின்றது. இதனை –

**"முப்பிரம் எரி செய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடிசெய்த அதிதீரா"**
என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார்.

அவரது திருக்கரத்தில் உள்ள மோதகம் பிரபஞ்சத்தைக் குறிக்கின்றது. பஞ்சபூதங்களின் மயமாக உலகம் விளங்குவது போல மாவு, பயறு, சக்கரை, தேங்காய் ஆகிய நான்கும் வெளியாகிய ஆகாயமும் அந்த மோதகத்தில் அடங்கியுள்ளது. அந்த பிரபஞ்சம் அனைத்தையும் தானே ஆதாரமாக தாங்கி இருப்பவர் என்பதை ஞான மயமான தமது துதிக்கையால் தொட்டுக் கொண்டு காட்சி தருவது ஜீவராசிகளை தனது ஞான தீட்சையினால் பரிசுத்தப்படுத்தி காத்தலையும் அறியவைக்கின்றது. எனவே கருணையின் திருவடிவமாகவும் ஞானத்தின் இருப்பிடமாகவும் விநாயகரை நாம் சிந்தித்து வழிபடுதல் வேண்டும்.

விநாயகர் என்ற பெயர் இந்து சமய ஆண்பால் கடவுள்களில் யானை முகத்தை வடிவமைக்கப் பட்டதான உருவத்தை குறிக்கின்றது. பிள்ளையாரை வணங்குபவர்கள் காணபத்தியர் என அழைக்கப்படுகின்றனர்.

பிள்ளையாருக்கு விக்னேஸ்வரன், விக்கனங் களைத் தீர்க்கும் ஈஸ்வரன் – பிரச்சனைகளைத் தீர்க்கும் கடவுள், கஜமுகன் – கஜம் என்றால் யானையைக் குறிக்கும். யானை முகத்தை உடையவர் ஆதலினால் கஜமுகன் எனச் சிறப்புப் பெயர்களும் உண்டு. தவிர, இந்துக்கள் பிள்ளையாரின் மீதான அதீத பக்தியினால் தமது பிள்ளைகளுக்கு கஜன், ஆனைமுகன், கணேசன், கணன், பிரணவன், ஐங்கரன், லம்போதரன், என்னும் நாமங்கள் சூட்டி அழைக்கிறார்கள்.

**"அப்பம், முப்பழம் அமுதுசெய்தருளிய தொப்பை அப்பனைத்தொழ வினையறுமே"**

என எமது சைவக் குழந்தைகள் பிள்ளையாரை வணங்குவதே தனித்துவமானது. பிள்ளையாரை வணங்கும்போது நெற்றியில் மூன்று முறை குட்டித் தோப்புக்கரணம் போட்டு வணங்குவதும், வீடுகள் ஆலயங்களில் நடை பெறும் விசேட நிகழ்வுகளில் சாணத்தால் அல்லது மஞ்சளால் பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து அறுகம்புல் சாத்தி வணங்குவதும் **"ஓம் சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் - பிரசன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே"** என்னும் மந்திரத்தை ஜெபிப்பதும் சிறப்பான விநாயகர் வழிபாடாகும்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என உலகிற் குணர்த்தியவர் பிள்ளையாரே. மறைமுனியாகிய நாரதர் மாங்கனி கொணர்ந்து கறைமிடற்று இறைவன் கையில் கொடுப்ப வேலனையும் கணபதியையும் சிவன் அழைத்து யார் முதலில் உலகைச் சுற்றி வருகின்றார் களோ அவர் தமக்கு மாங்கனியை வழங்குவோம் என்றார். வேலோன் மயில்மிசை வருமுன் அரனையும் அம்மையையும் வலம் வந்து மாங்கனியைப் பெற்றவர் பிள்ளையார்.
**"அரனை வலம் வந்து அக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி"**
என்று போற்றித் திரு அகவல் கூறுகின்றது.

**"தந்தை வலத்தால் அருள் கை கனிவோனே"**

எனத் திருப்புகழ் புகழாரம் சூட்டுவது பிள்ளையாருக்கே. திருவிழாக்களில் மாம்பழத் திருவிழா சிறப்பாக முருகன் கோவில்களில் நடைபெறுவதின் தத்துவமும் இதுவே.

விநாயகப் பெருமானின் அருள் பெற இரண்டு விரதங்கள் அனுட்டிக்கலாம். ஒன்று ஆவணி மாதத்தில் வளர்பிறையில் வரும் சதுர்த்தியாகும். சிறப்பாக அன்றைய தினம் விநாயகர் ஆலயங்களில் விசேட அபிஷேக ஆராத்திகள் நடைபெற்று எம்பெருமான் உள் வெளி வீதிகள் உலாவருதல் நியதியாகும்.

மற்றையது கார்த்திகை மாதம் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாதம் வளர்பிறை சஷ்டி வரையுள்ள 21 தினங்கள் கொண்ட பிள்ளையார் கதை விரதமாகும். பிள்ளையார் கதை விரதத்தை அனுஷ்டிக்காது விட்டாலும் விரதத்தின் கதை யைக் கேட்டவர்கள் படித்தவர்கள் துன்பமின்றி வாழ்வார்கள் என்று **"நோராது அருகிருந்து கேட்போர்க்கும் வாராது கேடு"** என்று பிள்ளையார் கதை கூறுகின்றது.

தமிழ் மக்களாகிய நாம் விநாயகர் துதிப் பாடல்களை சிறப்பாக போற்றித் திரு அகவல், வருக்கைக் கோவை, தத்துவஞானத் திரு அகவல் பிள்ளையார் கதைப்பாடல் போன்றவற்றை பண்ணுடனும் பாடி விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறுவோமாக.

**"வேழமுகத்து விநாயனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்".**

## விநாயகரை எப்படி வழிபட வேண்டும்?

விநாயகர் முன் பணிவுடன் நின்று வலது கையால் இடப்பக்கத்திலும், இடது கையால் வலப்பக்கத்திலும் மூன்று முறை தலையில் குட்டி காதுகளைப் பிடித்துத் தோப்புக்கரணம் போட வேண்டும். தேங்காயை சிதறு காயாக உடைத்து நமது தீவினைகளும் அவ்வாறே நொறுங்க வேண்டுமென அவரிடம் பணிவாகக் கேட்க வேண்டும். அருகம்புல் மாலை அணிவித்து நெய்தீபம் காட்டி மூன்று முறை வலம் வந்து வணங்கல் வேண்டும்.

## தலையில் குட்டி தோப்புக்கரணம் போடுவது ஏன்?

அகத்தியர் கமண்டலத்தில் கொண்டுவந்த கங்கை நதியை காகம் வடிவில் வந்த விநாயகர் கவிழ்த்தார். பின்னர் அந்தணச் சிறுவன் வடிவில் அகத்தியர் முன்பு வந்து நின்றார். கோபங்கொண்ட அகத்தியர் விநாயகரின் தலையில் குட்டினார். அப்போது விநாயகர் சுயரூபம் எடுத்து உலக நன்மை கருதி காவிரியை உருவாக்க அப்படி செய்ததாகக் கூறினார். அகத்தியர் தன் தவறுக்காக வருந்தி தன் தலையிலேயே குட்டிக்கொண்டார். அன்றுமுதல் வினாயகரை வணங்கும்போது குட்டிக் கும்பிடும் வழக்கம் ஏற்பட்டது.

கஜமுகாசுரன் என்ற அசுரன் தேவர்களை அடிமைப்படுத்தி தனக்குத் தோப்புக்கரணம் போடவைத்தான். விநாயகர் அவனை அழித்து தேவர்களைப் பாதுகாத்தார். அசுரன் முன்பு போட்ட தோப்புக்கரணத்தை விநாயகர் முன்பு பயபக்தியுடன் தேவர்கள் போட்டனர். அன்று முதல் தோப்புக்கரணம் போட்டு விநாயரைத் தொழும் பழக்கம் ஏற்பட்டது.

## தேங்காயை சிதறுகாயாக உடைப்பது ஏன்?

மகோற்கடர் என்னும் முனிவராக விநாயகர் அவதாரம் செய்து காசிப முனிவரின் ..ஆச்சிரமத்தில் தங்கி இருந்தார். ஒரு யாகத்து க்கு புறப்பட்ட போது ஒரு அசுரன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். விநாயகர் யாகத்திற்காகக் கொண்டு சென்ற கலசங்களின் மேலிருந்த தேங்காய்களை அவன் மீது வீசி அந்த அசுரனைப் பொடிப் பொடியாக்கினார். எந்தச் செயலுக்கு கிளம்பினாலும் தடைகள் ஏற்பட்டால் அதை உடைக்க விநாயகரை வணங்கிச் செல்லும் வழக்கமுண்டு. தனக்கு வந்த தடையைத் தேங்காயை வீசி எறிந்ததன் மூலம் தகர்த்தார்.அதன் மூலம் விக்னங்கள தகர்த்த விக்னேச்வரர் என்ற பெயரும் ஏற்பட்டது. சிதறுகாய் உடைக்கும் வழக்கமும் உருவானது.

## அருகம்புல் மாலை ஏன்?

அனலாசுரன் என்ற அசுரன் தேவர்களை மிகவும் துன்புறுத்தி வந்தான். தன்னை எதிர்ப்பவர்களை அனலாய் மாற்றித் தகித்து விடுவான். இவனை பிரம்மாவாலும் தேவேந்திரனாலும் அடக்க முடியவில்லை. அவர்கள் சிவ, பார்வதியைச் சந்தித்து முறையிட்டனர். சிவனும் விநாயகருக்கு அந்த அரக்கனை அழித்து வரும்படி கட்டளையிட்டார். விநாயகரும் பூத கணங்களுடன் போருக்குச் சென்றார். அங்கு சென்றதும் அனலாசுரன் பூதகணங்களை எரித்துச் சாம்பலாகினான். விநாயகர் அனலாசுரனுடன் மோதினார். ஆனால் அவனை வெற்றி கொள்ள முடியவில்லை. கோபத்தில் அவனை அப்படியே விழுங்கி விட்டார்.

வயிற்றுக்குள் சென்ற அனலாசுரன் அதை வெப்பமடையச் செய்தான். விநாயக்ருக்கு அந்த வெப்பத்தை தாங்க முடியவில்லை. அவருக்கு குடம் குடமாக கங்கை நீர் அபிஷேகம் செய்யப்பட்டது. அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. இந்நிலையில் ஒரு முனிவர் அருகம்புல்லைக் கொண்டு வந்து விநாயகரின் தலை மேல் வைத்தார். அவரது எரிச்சல் அடங்கியது. அனலாசுரனும் வயிற்றுக்குள் ஜீரணமாகி விட்டான். அன்றுமுதல் விநாயகரை அறுகம்புல் கொண்டு அர்ச்சிக்கும் வழக்கம் ஏற்பட்டது.

***பின்குறிப்பு:*** *இரண்டு கை விரல்களையும் மடித்துத் தலையில், அதாவது நெற்றிப்பொட்டில் குட்டிக்கொள்கிறோம். யோக சாஸ்திரப்படி, நாம் தலையில் குட்டிக்கொள்ளும் இடத்தில் உள்ள நரம்பு(நாடி)களால் சலனம் மாறி, மனதில் தெய்வீகமான அதிர்வு உண்டாகிறது என்பது நம் முன்னோர் கண்ட உண்மை.*

*அதுபோலவே, இரண்டு கைகளையும் மாற்றி காதுகளைப் பிடித்துக்கொண்டு, முட்டிக்கால் தரையில் படுமாறு தோப்புக்கரணம் போடுவதால், காது சதைகள் உந்தப்பட்டு, மூளையில் தெளிவு ஏற்படும். கால்களை மடக்கி எழுவதால், ஒட்டுமொத்த உடலுக்கும் புத்துணர்வு ஏற்படுகிறது.*

# அர்த்த நாரீஸ்வரர் - தத்துவம்

சண்முகம் நடராஜா, வல்வெட்டி

சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமானா வார். அந்தச் சிவத்துடன் ஒன்றி நிற்பது சக்தியாகும். சிவசக்தி ஐக்கியத்தை விளக்குமுகமாக,

**"சொற்றுணை வேதியன்"**

என்னும் தேவாரச் சொற்றொடராலும் சிவமும் சக்தியும், வாக்கும் அர்த்தமும் போன்றிணைந்து நிற்பதாக மகாகவி காளிதாசனும்,

**"சொல்லும் பொருளுமென நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடியே"**

எனவும்,

**"நஞ்சையுண்டு கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பெண்ணே"**

எனவும் அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி மூலமும் அறிகின்றோம்.

உலகத்திலேயுள்ள அனைத்து உயிர்களையும் ஆண் பெண் என்று வேறு நிலைகளில் பகுத்து நாம் காணமுடியும். ஆனால் அவை இருவேறுபட்ட நிலையாக இருந்தாலும் அவை இரண்டும் சேர்வதனாலேயே உலக இயக்கம் நடைபெறுகின்றது.

தமிழ் இலக்கியங்களை எடுத்துக் கொண்டாலும் அவைகளில் இரவு பெண்ணாகவும் பகல் ஆணாகவும் வர்ணிக்கப்படுவதை நாம் காணலாம். சூரியனைத் தந்தையாகவும் சந்திரனைத் தாயாகவும் கூறப்படுகின்றது. ஆகாயம் ஆணாகவும் பூமியைப் பெண்ணாக வும் வேதம் போற்றுகின்றது. இவ்வாறாக ஆண் பெண், இரவு பகல், வளர்பிறை தேய்பிறை, வலம் இடம், ஏற்றம் இறக்கம், நேர் எதிர், உத்தராயணம் தட்சணாயனம் ஆன வெவ்வேறு இரட்டைப் பொருள்கள் இணைந்து ஒரு முழுச் செயலை நிறைவேற்றுகின்ற பரிணமிப்பை அறியக்கூடியது கண்கூடு.

மானிடப் பிறவிகள் அல்லாமல், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் உட்பட அனைத்து சீவராசிகளும் ஆண் பெண் என்ற இருபால் பண்புகளாக இயங்குகின்றன. இவைகளுக்கு முன்னோடியாக, தெய்வங்கள் தேவர்கள் என்பவர்களிடையேயும் ஆண் பெண் - வேறுபாட்டுத்தன்மை இருப்பதாக சமய இலக்கி யங்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக அறியக்கூடியதாக உள்ளது. கணவனின் ஒரு பாகமே மனைவி. பதியாகிய கணவன் பாதியாகவும் பத்தினியாகிய மனைவி பாதி யாகவும் **"பதிபத்தினி"** எனப் போற்றப் படுகின்றனர். இந்த பதிபத்தினி என்ற நிலைமையைத்தான் தம்பதி என்ற சொல்லால் வேதங்கள் போற்றுகின்றன. தம்பதி என்பது கணவன் மனைவி இருவரும் சேர்ந்திருக்கும் நிலையாகும். இவ்வாறு இணைந்திருந்து உலக தோற்றத்திற்கும் அங்கு நடைபெறவேண்டிய நன்மைகளுக்கும் மூல வடிவமாகக் காணப்படும் திரு அருட் கோலமே **"பெண் பாதித் தலைவன்"** எனப்படும் **"அர்த்த நாரீஸ்வரர்"** வடிவமாகும். உலகில் உள்ள சீவராசிகள் எல்லாம் இன்பம் பெறவும், மகிழ்வுடன் வாழவும் அர்த்தநாரீஸ்வரர் தத்துவ மூர்த்தியாக விளங்குகிறார்.

இறைவனின் இந்த வடிவத்தை சொரூப நிலை, தடத்த நிலையென இரண்டாகக் கூறுகிறது, சைவசித்தாந்த நூல்கள். இவற்றில் சொரூப நிலையை இயல்பு நிலையென்றும், தடத்த நிலையை சார்பு நிலையென்றும் கூறலாம்.

இயல்பாக பிரகாசமுடைய சக்தியை தன்னுள் அடக்கிக்கொண்டு, தனியாக இறைவன் இருக்கும் நிலை இயல்பு நிலை அல்லது சொரூப நிலை எனப்படும். இந்நிலையில் எவரும் இறைவனை உணர முடியாது. எனவே ஆன்மாக்களின் நன்மை கருதி தன்னை விரிபு படுத்திய நிலை சார்பு நிலை அல்லது தடத்த நிலையாகும். ஞானமயமான சக்தி பராசக்தி எனப்படும். சக்தியின் வடிவம் என்பது தடையிலா ஞானமாகும். இப்பராசக்தியும் இயல்பு நிலையில் ஆன்மாக்களால் அறியப் படாமலே இருக்கும். எனவே ஆன்மாக்கள் மீதுள்ள கருணையினால் தன்னுள் அடக்கப் பட்டுள்ள சக்தியை வெளிப்படுத்திக் காட்ட இறைவனும் இறைவியும் எடுத்த சிவசக்தி வடிவமே அர்த்த நாரீஸ்வரர் வடிவமாகும்.

சிவன் எந்த வடிவங்கள் எடுக்கின்றானோ, சக்தியும் அந்த வடிவங்களை எடுப்பாள் என்பது

**"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறன்**
**அவளும் நிற்பாள்"**

என்பதால் அறியக்கூடிய தாக இருக்கின்றது.

இறைவனது சிவமுகூர்த்தங்கள் அறுபத்து நான்காகும். இவற்றுள் மகேஸ்வர வடிவங்கள் இருபத்தைந்தும் அடங்கும். இவ்விருபத் தைந்துள் அர்த்தநாரீஸ்வரர் வடிவம் சிவசக்தி இணந்த வடிவமாகப் போற்றப்பட்டுகிறது.

ஒரு செயல் எம்மால் செய்து நிறைவேற்றப் படவேண்டுமெனில் அதைச் செய்து நிறைவேற்ற வேண்டிய ஆற்றல் எமக்கு இருக்க வேண்டும். ஒரு செயலைச் சொல்லலாம், ஆனால் செய்து முடிக்க இயலாது. அதற்கு ஆற்றல் வேண்டும்.

**"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"**

என்கிறார் வள்ளுவர். சிவனைச் செயலாகவும் சக்தியை ஆற்றலாகவும் நாம் கருதவேண்டும். செயலும் ஆற்றலும் இணந்து ஒரு காரியத்தை வெற்றியடையச் செய்யுமென்பதை,

**"சித்தத்திலே நின்று சேர்வதுணரும்**
**சிவசக்தி தன் புகழ் செப்புகின்றோம்"**

என்று பாரதியார் கூறுகின்றார்.

சிவனை ஆக்கம் என்று கொண்டால் அவ்வாக்கத்தை நிறைவேற்றும் ஊக்கமாகச் சக்தியைக் கூறலாம்.

**"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை"**

என்கிறார் வள்ளுவர். ஊக்கம் உடையவனுடைய செயல், குறித்த இலக்கினை அடையுமென்பது குறள்.

**"ஆதிப் பரம் பொருளின் ஊக்கம் அதை**
**அன்னையெனப் பணிதல் ஆக்கம்"**

எனப் புரட்சிக் கவிஞர் பாரதியார் சிவசக்திப் பிணைப்பை மேலும் விபரிக்கின்றார். எனவே செயலும் ஆற்றலும், ஆக்கமும் ஊக்கமும் இணைந்த தத்துவத்தை அர்த்த நாரீஸ்வரர் வடிவம் குறிக்கிறது.

திருமுறைகள் இறைவனும் இறைவியும் சேர்ந்திருக்கும் நிலையைப் புகழந்து பாடுகின் றன. சம்பந்த சுவாமிகள் தனது பாடல்கள் பலவற்றில் உமையொருபங்கனைப் பாடுகிறார்.

**"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்"** என்றும்
**"வேயுறு தோழி பங்கன்"**,
**"செந்துவர் வாயுமைப் பங்கன்"**,
**"வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த"**

எனவும் இறைவன் உமையோடு இருந்து அருள் நல்கும் காட்சியை பாடியுள்ளார்.மண்ணில் நல்ல வண்ணம் வாழ பெண்ணில் நல்லாளொடும் வீற்றிருக்கும் பெருந்தகையைக் கண்ணால் கண்டு தொழ வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

அப்பர் சுவாமிகள் இணைந்துள்ள காட்சியை சிறப்பாகப் புகழ்கிறார்.

**"உரு இரண்டும் ஒன்றோடொன்று ஒவ்வா அடி"**

என அர்த்தநாரீஸ்வரர் பாதப் பெருமையைப் பேசுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பல பாடல்களில் மங்கை பங்காளனைப் பாடி மகிழ்கிறார்.

**"மங்கை பங்காளனை மாசிலாமணியை"**
**"மங்கையோர் கூறுடையான்"**
**"உமையோர் கூறுடையான் உருவே**
**திருக்காளத்தி யாய்"**

என்று பல இடங்களில் உமாபதியைப் போற்றுகின்றார்.

மாணிக்கவாசக சுவாமிகளும் திருவாசகத்தில் சிவசக்தி பெருமையைப் போற்றிப் பாடுகிறார். திருச்சாழல் என்னும் பகுதியில் சிவன் சக்தியோடு சேர்ந்திருக்கா விட்டால் உலக வாழ்க்கையில் ஆருயிர்கள் ஆண் பெண் தொடர்பின்றி உயர்வடையாது என்பதை,

**"தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன்**
**பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி**
**பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்**
**விண்பாலியோ கெய்தி வீடுவர்காண் சாழலோ"**

திருப்பள்ளியெழுச்சியில் இறைவனும் இறைவி யும் இணைந்து ஒவ்வொரு மெய்யடியார்களு டைய சிறிய குடில்கள் தோறும் எழுந்தருளிய சிறப்பினை,

**"பந்தனை விரலியும் நீயும் நின்னடியார்**
**பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே"**

என்று போற்றிப் பாடியருளியிருக்கிறார்.
திருவெம்பாவையில் அர்த்த நாரீஸ்வரர் வடிவமாக மாத்திரமன்றி பல்வேறு வடிவமும் தாங்கி எம்மை வந்து காப்பான் என்பதை,

**"பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்"**
எனவும் இறைவனும் இறைவியும் சேர்ந்திருந்து திருவருளாகிய அருள் நீரைத் தருவது போல காட்சிதரும் பொய்கையில் நீராடுங்களெனப் பாடுகினறார்.

**"எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த**
**பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து"**
எனவும் அருளுகிறார்.

எம்மையாக்கும் சக்தியாகிய உமையம்மை யாரை விட்டுப் பிரியாதவன் சிவன் என்பதை

**"நந்தம்மை அருளுடையான் தன்னிற்**
**பிரிவிலா எங்கோமான்"**

என இறைசக்தி மகிமையைப் பாடுகிறார்.

**"இம்மங்கை பாகவடிவமே தொன்மைக் கோலம். அக்கோலத்தைக் கண்டு அரசவண்டே நீ குளிர்ந்தூதுவாயாக"**

எனத் திருக்கோத் தும்பியில் பாடுகிறார்.

**"தோலும் துகிலும் குழையும் அருள்தோடும்**
**பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்**
**சூலமும் தொக்க வளைமுடைத் தொன்மையும்**
**கோலமே நோக்கிக் குனிந்தூதாய் கோத்தும்பி"**

எனக் கூறுவதன் மூலம் அர்த்த நாரீஸ்வரர் வடிவச் சிறப்பம்சத்தையும் அவ்வடிவத்தின் பழம் பெருமையையும் உணர்த்துகிறார்.

திருப்பொற்சுண்ணம் பகுதியில் இறைவன் நீராடுவதற்காக தயாரிக்கப்படும் மருந்தை,

**"மங்கை பங்கினன் எங்கள் பராபரனுக்கு**
**ஆடக மாலை அன்ன கோவுக்**
**காடற் பொற்சுண்ண மிடித்து நாமே."**

எனப் பாடி மங்கை பங்கினன் திருமுழுக்காட திருப்பொற்சுண்ணம் இடிப்பதாகக் கூறுகிறார்.

இவ்வாறு சமயகுரவர்கள் நால்வரும் அர்த்த நாரீஸ்வரர் வடிவத்தின் மேன்மை யையும் சிறப்பையும் பாடியருளினார்கள்.

சேந்தனார் திருவிசைப்பாவில்,

**"மங்கையோர் பங்கத் தென்னரு மருந்தே**
**வருந்தி நான் மறப்பனோ பிணியே"**

என இவ்வடிவம் எனது பிணியை நீக்குமெனப் பாடுகிறார்.

திருப்பல்லாண்டில்,

**"அன்ன நடை மடவாள் உமைகோன்"**

எனவும் பாடி சிவனையும் சக்தியையும் இணைக்கின்றார்.

பத்தாம் திருமுறையில் இறைவன் ஐந்தொழில் களைச் செய்வதற்காக உமை பாகனாக நடனமாடுகிறார் என்பதனை,

**"ஆன தொழிலருளாலைந் தொழில் செய்தே**
**தேன் மொழி பாகன் திருநடமாடுமே"**

எனவும் சிவனுக்கு பாகமாக இருந்து ஆன்மாக் களுக்கு நன்மை செய்கிறாரென்பதை,

**"மாலினி மாகுனி மந்திர சண்டிகை**
**பாலினி பாலவன் பாகமதாமே"** எனவும் கூறுகிறார்.

சிவனும் சக்தியும் இணைந்திருந்து நடத்தும் திருவிளையாடலே உலகம் என்பதை

**"சக்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி**
**சக்தி சிவவாம் சிவன் சக்தியாம்"**

பரமனும் அம்மையும் சேர்ந்திருக்கும் அக்காட்சி யைக் கண்டு தொழுதால் ஞானம் கைகூடும் என்பதை,

**"எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்**
**முந்தவுரைத்து முறை சொல்லின் ஞானமாம்"**

எனத் திருமூலர் கூறுவார்.

இவ்வாறு திருமந்திரத்தில் காணப்படும் அர்த்தநாரீஸ்வர தத்துவப் பெருமைகளைக் காணலாம்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் உமைபாகனைப் புகழ்கிறார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவாலவாய்த் திருக்கோயிலில் யாழிசைத்த முறையினைக் கூறும்போது,

**"ஆலவாயமர்ந்தார் கோயில் வாயிலை**
**அடைந்து நின்று ...........................**
**தேவனார் குழலாள் பாலகர் பாணிகன்**
**யாழி விட்டார்"**

எனவரும் பாடலில் குறிப்பிடுகிறார்.

அடியார் திருக்கூட்டச் சிறப்பைக் கூறும்போது,

**"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்**
**மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்**
**கோதிலாத குணப்பெருங்குன்றனார்"**

என இறைவனும் இறைவியும் இணைபிரியாத திருக்கோலத்தை மறக்காதவர்கள் எதற்கும் பயப்பட மாட்டார்கள் எனக்கூறி மாதோர்பாக வடிவம் வீரமும் தரவல்லது எனச் சுட்டுவதைக் காணலாம்.

எனவே அர்த்த நாரீஸ்வர வடிவம் உமையொரு பாகனாக பல இடங்களில் போற்றிப் பாடப்படுவதும் புராணங்களில் கேதார கௌரி விரதத்துடனும் தொடர்புடைய தத்துவச் சிறப்புடையது.

**சுபம்**

# கோவில்

**பண்டிதர், சைவப்புலவர் ஏ.பரஞ்சோதி**

கோவில் இறைவன் இருக்கும் வீடு. கோ-அரசன், இறைவன், இல்-வீடு. அரசற்கு அரசனான இறைவன் இருக்கும் அரண்மனை.

சைவக்கோவில்கள் மனித உடம்பின் அமைப்பில் அமைந்துள்ளன. ஒரு மனிதன் படுத்திருக்கும் போது கர்ப்பக்கிருகம் அவன் தலை, கோபுரம் பாதம். கற்பக்கிருகமும் மனிதன் நிற்பது போல அமைந்துள்ளது. மனிதன் தன் உடம்பினுள்ளே இறைவனைக் காணுதலே சிறந்தது என்பது அதன் நோக்கம்.

மனித உடம்பு மாயாகாரியமான முப்பத்தாறு தத்துவங்களால் ஆனது. அவையாவன: சிவம், சக்தி, சாதாக்கியம், ஈசுவரன், சுத்தவித்தை, காலம், நியதி, கலை, வித்தை, புருடன், அராகம், பிரகிருதி, குணம், புத்தி, அகங்காரம், மனம், மெய், வாய், கண், மூக்கு, செவி. வாய், கால், கை, மலவாசல், சலவாசல், காற்று, நீர், நெருப்பு, நிலம், ஆகாயம், பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம். சிவம் உட்பட இந்த 36 தத்துவங்களையும் மனிதன் தன் உடம்புள்ளும், ஏனையோர் உடம்புள்ளும் காணும்போதே அவன் பேரின்பம் எய்துவான் என்பது கோவில் தத்துவம்.

கோவில் பாலர் பாடசாலை என்பர் சுவாமி விவேகானந்தர். ஆரம்பத்தில் மனிதன் தனக்குப் புறம்பாக இறை விக்கிரகத்தில் இறைவனைக் கண்டு கும்பிட்டும், வலம் வந்தும், கோவிற் பணி செய்தும் உடற் பயிற்சியும், பொதுநல உளப்பயிற்சியும் பெறுகின்றான். மேலும் அங்கே தனித் திருந்து கோவில் - உடல் தொடர்பைத் தியானம் செய்வதன் மூலம் அவன் மேலும் உள வளர்ச்சி பெறுகின்றான். கோவில் விழா, இசை, நடனம், தொண்டர் கூட்டம் அவனைச் சாலோக முத்தி பெறச் செய்கிறது. அதன்மேல் அங்கே நிகழும் நிகழ்ச்சிகளில் தானும் ஒருவனாகப் பங்குபற்றி மகிழும் நிலை சாமீப முத்தி எனப்படுகிறது. அதன் மேலும் வளர்ச்சி பெற்று அங்கே நிகழும் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகிப்பவர்களுள் ஒருவனாக இருந்து மகிழும் நிலை சாரூப முத்தி ஆகிறது. இப்படிக் கோவிலுனுள் திருவடி யார் கூட்டத்துடன் சேர்ந்து மூவகை முத்திகளையும் பெற்று ஒருவன் மகிழ்ச்சி அடைகிறான். இந்த மூவகை முத்திகளும் பதமுத்தி எனப்படும். மக்களோடு சேர்ந்து மகிழும் நிலை அது. தனிப்பட இருக்கும்போது பழைய ஆணவம் அவனைத் தொடர்ந்து வருத்தலாம்.

அதன் பின் அவன் தனித்திருந்து நான் என்பது ஆர் என்பதைப் பற்றி ஆராய்கிறான். உலகத்தை நடுவு நிலை யோடு நின்று பார்க்கிறான். சமய, விஞ்ஞான, கலை ஞான அறிஞர்களின் கருத்துக்களைச் சேர்த்து அவதானிக் கிறான்.

**சீவ னெனச்சிவ னென்னவே றில்லை**
**சீவ னார்சிவ னாரை அறிகிலர்**
**சீவ னார்சிவ னாரை அறிந்தபின்**
**சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே.**

என்ற திருமூலர் வாக்கு அவனைச் சிந்திக்க வைக்கிறது.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' தனக்கு வரும் தீமையும் நன்மையும் பிறரால் வருவன அல்ல. தன் ஆற்றற் குறைவாலும் நிறைவாலுமே என்பதை உணர்கின்றான்.

கொடியவர்கள் 'நமசிவாய' என்றால், நல்லவர்கள் 'சிவாய நம', என்ற உண்மையை அனுபவத்தில் காண்கிறான். எம் முன்மாதிரியான, புத்திசாலித்தனமான செயல்களால் கெட்டவர்களிடமிருந்தும் நன்மை பெறலாம், அவர்களையும் வழிக் குக் கொணரலாம் என்ற உண்மை இந்த மந்திரங்களில் பொதிந்துள்ளது.

*(ந-திரோதான சக்தி (கெட்ட செயல்), ம-மலம் (அறியாமை, சிந்தனையற்ற சடநிலை), சி - சிவம் (நன்மை, நற்பண்புகள்), வா - அருட்சக்தி (நல்ல செயல), ய - ஆன்மா (நான் என்ற அகங்காரத்துடன் கூடிய அறிவு))*

கோவில் மனித உடலை மட்டுமல்ல பிரபஞ்சம் முழுவதையும் ஒருங்கே காட்டுகிறது எனக் காண்கிறான்.

அகன்று உயர்ந்த கோபுரத்திலிருந்து வர வர ஒடுங்கி மூலஸ்தானத்துள் உள்ள சிவலிங்கத்தில் முடிவதை அவதானிக்கி றான். அது பலவாக விரிந்து எல்லை யற்றுக் காணப்படும் பொருள் யாவும் 'சிவம்' என்ற மங்களகரமான நன்மையில் முடிவதை உணர்கிறான்.

இப்பொழுது அவன் ஆலய வழிபாடு கோவிலுள் மட்டும் அடங்கி இருக்க வில்லை.

**கண்ணிற் காண்பதுன் காட்சிகை யாற்றொழில்**
**பண்ணல் பூசை பகர்வது மந்திரம்**
**மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே**
**அண்ண லேஉன் அருள்வடி வாகுமே.**

எனப் பாடிய தாயுமானவர் நிலையில் நிற்கிறான்.

மேலும் அந்த நிலை வளர்கிறது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத் தல், அருளல் என்ற ஐந்து தொழில் களையும் உலக இயற்கையாகக் காட்சி யளிக்கும் இறைவன் ஓர் ஒழுங்கின் படி நிதானமாகச் செய்து கொண்டிருப்பதை அவதானிக்கிறான். அது சிதம்பரத்திலுள்ள நடராச விக்கிரகத்தை அவனுக்கு நினைவூட்டுகிறது. 'சிதம்பரம் தரிசிக்க முத்தி' என முன்னோர் கூறி வைத்தது நினைவுக்கு வருகிறது. தில்லை அம்பலத் திலுள்ள நடராசர் விக்கிரகத்தை ஊனக் கண்ணால் பார்த்தால் மட்டும் முத்தி கிடைக்காது என அனுபவம் சொல்கிறது.

**எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி**
**எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்**
**எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்**
**தங்கும் சிவனருள் தன்விளை யாட்டதே**

என்ற திருமந்திரப் பாடல் அவன் நினை வுக்கு வருகிறது.

சடமாயிருக்கும் பூமியிலிருந்து புல், பூண்டு, தாவரம், விலங்கு, பறவை, மனிதன் என அறிவு படிப்படியாக வளரும் பொருள்கள் தோன்றி குறிப்பிட்ட காலம் வரை பாதுகாப்பாக இருந்து மீண்டும் சடமாக மாறும் அற்புதம் அவன் கண் முன்னே தோன்றுகிறது. அது மட்டுமோ, அவன் ஐம்புலனையும் மகிழ்விக்கும் பொருள்களும் அவனை மகிழ்விக்கின்றன.

ஐம்புல இன்பங்களுக்கு அடிமையானவர் கள் போல் அவன் இன்பம் விட்டு விட்டு மறுபிறவி எடுப்பதில்லை. புல இன்பம் இல்லாவிடில் அறிவின்பம். இன்னும் புல இன்பத்திலும் பார்க்க அறிவின்பம் கூடச்சுவைக்கின்றது.

**கரும்பும் தேனும் கலந்ததோர் காயத்தில்**
**அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்**
**விரும்பி யேஉள்ளம் வெளியுறக் கண்டபின்**
**கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே.**

என்ற திருமூலர் நிலையை அவன் அடைகிறான். இந்த உடம்பு கரும்பும் தேனும் போல இன்சுவை தருவது. அந்தச்சுவை வேரும் கிழங்கும் போல குறைந்து கூடக்கூடிய நேரம் நிலைத்து நிற்கும். நான், என் உறவு, என் மொழி, என் சமயம், என் சாதி என்ற குறுகிய நிலையில் இருந்து மனம் ஆகாயம் போல எல்லாவற்றையும் அடக்கும் பரந்த நிலைக்கு வரும்போது முன்னைய உடலின்பத்திலும் பார்க்க பரந்த அறிவு நிலையில் அனுபவிக்கும் இன்பம் பல மடங்கு அதிகம் என்பது அப்பாடலின் சாரம்.

அந்நிலையில் அவன் காணும் கோவில் தச்சன் கட்டிய சிறு கோவில் அல்ல: பிரபஞ்சம் முழுவதும். அவன் காணும் கடவுள் தனக்குப் புறம்பாக இல்லை. பிரபஞ்சமாகிய கடவுளின் தான் வேறல்ல என்பதைக் காண்கிறான். அப்போது அவனுக்கு எதிரிகள் இல்லை. இயற்கையாம் இறைவன் நடனம் போல நடனமாடி விளையாடித் திரிகிறான். அந்நிலை நாட்டில் சிறு தொகையினருக் காவது ஏற்படின் உலகில் சண்டை, சச்சரவு நீங்கி இந்த உலகமே சிவ லோகமாகும்.

அன்று எம் உபநிடதங்கள் உலகுக்கு வழி காட்டியது போல இன்று எம் கோவில்கள் இளைஞரின் அன்பு, அறிவு, ஆற்றல்களை வளர்த்து அவர்கள் தன்னம்பிக்கையுடன் சுதந்திரமாகச் சிந்தித்து உண்மை கண்டு உலகுக்கு வழிகாட்ட உதவுமா?

***********

# பிரபஞ்ச நடனம்

**குமார் புனிதவேல்**

அயனர் பிரசித்திபெற்ற சிற்பி. பல்லவ சாம்பி ராஜியத்தில் அவரை அறியாதவர் ஒருவரு மில்லை. காரணம் அவர்தான் மாமல்லபுரத்து சிலைகள் அனைத்தையும் வடித்தவர். மாமல்லனின் கனவான மகாபலிபுரத்து மலைகள் பாறைகள் அனைத்தையும் உயிர் பெற்ற சிலைகளாக்குவதை நனவாக்கிய பெரும் சிற்பி அவர். அவர் புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. அவரைதெய்வச்சிற்பி என்று அனைவரும் போற்றுவர்.

அவருடைய வயது அதிகரிக்க அதிகரிக்க அவருக்கு ஒரு அவா அவரைக் கிண்டத் துவங்கியது. பல சொரூபங்களை, இறை வடிவங்களை அவர் செதுக்கி இருந்தார் என்பது உண்மைதான். ஆனால் அவர் உள்ளுணர்வு அச்சிலைகள் பூரணத்துவம் உடையதல்ல என உணர்த்தியது. ஏற்கனவே இருந்த ஒரு சிலை வடிவத்தை அவர் மறு உருக் கொடுத்தார் அன்றி உண்மையான இறை உருவம் என்பதற்கு உறுதி இருக்கவில்லை. தலைமயிர் நரைக்க ஆரம்பித்துவிட்டது. காதோரம் வெள்ளைமயிர் கதைமுடிவை ஞாபகப்படுத்திய வண்ணமிருந்தது. ஒவ்வொருநாளும் அவர் கனவை நனவாக்க உள்ள நாட்களை அருகிய வண்ணமிருந்தது.

இறுதியாக ஒருநாள் தன் ஆதங்கத்தை பூர்த்தி செய்ய இறைவனின் வடிவத்தைச் செருக்கி அது என்றென்றும் வழிபடவேண்டும் என விரும்பினார்.அந்த பெரும் சிற்பக்கலைஞர் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து கண்ணில் பட்ட ஞானிகள், துறவிகள் யாவரிடமும் அவர்கள் கடவுளைக் கண்டார்களா? அவர் எப்படி இருப்பார் எனக் கேட்டார். இல்லை என்ற பதில் அல்லது மௌனம் பதிலாய் கிடைத்தது. இன்னும் சிலர் தெரிந்ததுபோல் நடித்தனர். மற்றவர்களிடம் கேட்பதில் பலன் ஒன்றுமில்லை. அவர் கண்ட உண்மை இறைவனைக் கண்டவர்கள் அதைச் சொல்ல வில்லை. சொன்னவர்கள் காண வில்லை என்பதே.

இப்படிப் பல மாதத் தேடுதலுக்குப்பின் விரக்தியடைந்த அயனார் எல்லாவற்றிலுமிருந்து ஒதுங்கி தான் பிறந்த கிராமமான பொதிகை மலை அடிவாரத்திலுள்ள அருவித் தோட்டத் துக்கு குடிவந்து விட்டார். அருவித் தோட்டம் அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட ஒரு சிறு கிராமம். இங்கு வசிப்பதை அவர் பெரிதும் விரும்பினார். காரணம் அந்த இயற்கை வனப்பு களுடன் அங்கு வசித்த மக்கள் இவரை பெரும் சிற்பக்கலைஞராக அன்னியப்படுத்தி விடாமல் தம்மில் ஒருவராக உறவுமுறையுடன் அரவணை த்தமையே.

ஒரு நவராத்திரி முதல் நாள் நேரத்துடன் விழித் தெழுந்து நெடுந்தூரம் கிராமத்தை விட்டு நடந்தார் அயனர். அருகில் இருந்த மலைக்கு கிராமத்தவர்கள் பெரிதும் செல்வதில்லை. ஆனால் அயனாருக்கோ உள்ளத்தில் அழியாத கோலங்களாக இருந்த இளமை நினைவுகள் ஊற்றெடுத்தது. இளம் வயதில் அங்கு மலை உச்சியில் உள்ள குகைக்குச் சென்றுவந்த நினைவுடன் இப்போ அந்தக் குகை எப்படி உள்ளது என்று அறிவதற்கு ஆர்வம் ஏற்பட்டது. அந்தக் குகைச் சுவரில் இளவயதில் தனது காதலியின் பெயரை எழுதியது ஞாபகம் வந்தது. மனிதரின் இயல்பான அறியும்

ஆவலின் உந்தலில் மெதுவாக அந்த மலையில் ஏறமுற்பட்டார் அயனர். முதுமை காரணமாகவும், வேறு அவசிய வேலை எதுவுமின்மையால் ஆறுதலாக ஏறினார்.

குகை வாயிலை அடைவதற்கு அவருக்கு ஒரு மணித்தியாலத்துக்கு மேல் எடுத்தது. அந்தக் குகை பல பாறைகளுக் கிடையில் உள்ள ஒரு சிறு குகை. இளம் வயதுக் கற்பனையில் பெரிதாக நினைத்த குகை நேரில் காணும் போது சிறிதாக இருந்தது. அயனர் மனதுக்குள் நினைத்துக் கொண்டார் சிறுவயதில் பெரிதாகத் தெரிவது, பெரியவரானவுடன் சிறிதாகத் தெரியும் என்று. குகைக்குள் எட்டிப் பார்த்தார் அயனர். அவர் வரைந்த ஓவியம் சற்று அழிபட்டுக் காணப்பட்டாலும் இன்னும் தெளிவாகவே தெரிந்தது. தனது இளமை எழுத்தைப் பார்த்தவுடன் கண்களில் நீர் சுரந்து கண் பார்வையைத் திரையிட்டது. தனது முன்னால் இருந்த அந்த இளமை ஓவியத்துக்கு முன் தான் செய்த எந்த ஒரு சிற்பமோ, சித்திரமோ நிற்கமுடியாது என்று எண்ணினார் அயனர்.

அவருக்கு வெளியில் மலை உச்சியில் நின்று கத்தவேண்டும் போலிருந்தது. "வாருங்கள்! பிரசித்த சிற்பி அயனரின் முதல் சித்திரம் என்று அருகில் இருந்த ஒரு கற்பாறையில் அமர்ந்து ராஜு சோமுவுடன் விளையாடிய இனிய நாட்களை இரைமீட்டார். இளம் வயதில் தன் உள்ளம் கவர்ந்த சீதா இப்போ எங்கே என்று யோசித்தார். அவள் இன்னும் உயிருடன் இருக்கிறாளா? சீதாவின் படம்தான் அங்கே குகைக்குள் வரையப்பட்டிருப்பது. அது அவருக்கு துன்பமான இனிமை நினைவாக இருந்தது.

திடீரென அயனருக்கு இறைவனின் சிலையை செதுக்கவேண்டும் என்ற வேட்கை தணியாத தாகமாக பிரசவித்தது. அதைப் பற்றியே முழுமையாக தியானித்தார் கல்லில் அமர்ந்திருந்த அயனர். அவரது தியானம் ஆள் அரவம் கேட்டு கலைந்தது. இந்த தனியிடத்துக்கு யார் வரக்கூடும் என்று அயனர் பார்த்தவேளை பத்து வயது மதிக்கக்கூடிய பையன் அவருக்கு முன்னால் நின்றிருந்தான்.

"தாத்தா, இங்கு என்ன செய்கிறீர்கள்? என்னைத் தவிர யாரும் இங்கு வருவதில்லை" என்று கூறினான். பதிலுக்கு அயனர் "யாரப்பா நீ? உன்னை இங்கு என்ன இட்டு வந்தது?" என்றார். கோயில் மணிபோல் கல கல என்று சிரித்தான் சிறுவன். பின் "நான்தான் முதல் கேள்வி கேட்டேன். ஆனால் நீங்கள் வயதில் முதியவர் ஆனதால் பதில் சொல்கிறேன். என்னை எல்லோரும் சாமி என்று அழைப்பார்கள். மலையின் மறுபக்கத்தில் உள்ள கிராமத்தில் வசிக்கிறேன். சில தினங்களில் இந்த மலையில் அலைந்து திரிவதில் எனக்கு அலாதி பிரியம்" என்று சொன்னான். பின் "என்ன தாத்தா ஆழ்ந்த யோசனையில் இருக்கிறீர்கள். நானும் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

அதற்கு அயனர், "தம்பி! நீ சிறு பையன். உனக்கு இந்த விடயங்கள் புரியாது. எனவே வந்த காரியம் முடிந்தால் பேசாமல் போய்விடு" என்றார். அந்தச் சிறுவனோ விடுவதாயில்லை. "தாத்தா, சில சமயங்களில் முதியவர்களுக்கு தெரியாத பதில் சிறுவர்கள் கூறக் கேட்டிலையா? ஏன் முருகன் கூட படைத்தல் செய்யும் பிரம்மதேவனுக்கு தெரியாத பதிலைக் கூறவில்லையா?" என்று கேட்டு வைத்தான். அயனர் ஒரு கணப்பொழுது யோசித்தார். சுட்டியான அந்தப் பையனின் ஆர்வமும், உற்சாகமும் மிகவும் பிடித்திருந்தது. சுடர்விட்டு ஒளிக்கும் அவன் கண்கள் அவரைக் காந்தம்போல் கவர்ந்தது. மேலும் அவர் சிந்தித்தார் வாழ்க்கை முன்னோக்கி நகர்வதானால் குழந்தைகள்தானே நாளைய உயிர்நாடி, அதில் பயணிக்க அவருக்கு கனவிலும் இடமில்லை. அவர் எண்ணினார் ஏன் தனது ஆணவத்தைக் களைந்துவிட்டு குழந்தையின் வழிகாட்டலில் செல்லக்கூடாது? என்று. இறுதியாக அவர் "மகன், நான் ஒரு சிற்பி. எனக்கு கடவுளை சிலையாக வடிப்பதற்கு நெடுநாளைய ஆசை. ஆனால் கடவுளை உள்ளபடி வர்ணிப்பதற்கு யாருமில்லை. மேலும் அவரை நான் பார்த்ததில்லை. என் வாழ்நாள் ஆதங்கத்தை நிறைவேற்றாமலே இறந்துவிடுவேனோ என்று அஞ்சுகிறேன்" என்றார்.

சாமி தன் கபடமில்லா கல கல சிரிப்புடன் சொன்னான் "தாத்தா! அதுதானே மிக எளிதான செயல். நீங்கள் எண்ணும் கடவுள் என்னென்ன செய்வார் என்று சிந்தித்து, அவை அனைத்தையும் சித்தரிக்கும் ஒரு சிலையை செய்வதுதானே".

அயனருக்கும் அச்சிறுவன் சொன்னது

சரியாகவே பட்டதுமல்லாமல் அவனிடமே சில அறிவுரை பெறலாம் என்று எண்ணினார். எனவே அந்தப் பையனிடம், "எப்படித் தொடங்கலாம்?" என்றுகேட்டார். அந்தப் பையனும் ஒரு நிபந்தனையுடன் தனது கருத்துக்களை தெரிவிக்க உடன்பட்டான். அவன் நிபந்தனை அங்கு உள்ள பாறை ஒன்றை காட்டி, "அந்தப் பாறையை செதுக்கவேண்டும் என்பதுடன் தான் காலத்துக்கு காலம் வந்து பார்வையிட தடைகூறக் கூடாது" என்றான்.

முதியவரும் அந்த நிபந்தனைக்கு உடன்பட்டதுடன் தானும் ஒரு நிபந்தனை விதித்தார். அதாவது வேலை செய்யும்போது இடையில் கேள்வி கேட்டு இடைஞ்சலாய் இருக்கக்கூடாது என்று. இதனை தொடர்ந்து சிற்பிக்கு வழிகாட்டும் நோக்கத்தோடு குறிப்பான கேள்விகளை கேட்டு இறைவனின் உருவத்தை மனக்கண்முன் கொண்டிவர விழைந்தான். முதலாவதாக இறைவன் படைக்கிறவரா? என்று கேட்டதற்கு அயனரும் ஆமாம் என்று பதில் சொன்னார். உடனே சுவரில் **<u>படைத்தல்</u>** என்று எழுதச் சொன்னான் பையன். இதனை தொடர்ந்து அப்படியானால் அழிப்பவர் யார்? என்று கேட்டான் பையன். அதுவும் இறைவனே என்று பதில் வர சுவரில் **<u>அழித்தல்</u>** என்று எழுதச் சொன்னான் பையன். இதைத் தொடர்ந்து கேள்வியாக காத்தல் யார் செய்வார்? என்று கேட்க அதுவும் இறைவனே என்று அயனர் சொன்னார். எனவே **<u>காத்தல்</u>** என்ற சொல்லை அடுத்து எழுதச் சொன்னான்.பார்த்தீர்களா! இறைவனின் அம்சங்கள் மூன்று தேர்ந்து சிலைக்கு சில அமைப்புகளை கண்டு கொண்டு விட்டீர்கள். அடுத்ததாக அவர் அருளுவதுண்டா? என்று கேட்டான் சாமி. "நிச்சயமாக" என்று பதில் சொன்னார் அயனர். உடனே அடுத்து **<u>அருளல்</u>** என்று எழுதுங்கள் என்றான் பையன். பின் இவ்வளவு காலமும் இறைவன் இருந்தும் எமது கண்களுக்கு மறைந்துதானே இருந்தான். காலம் வரும் வேளை அவன் தெரிவான். ஆகையால் இறைவனின் இன்னுமொரு குணமாக **<u>மறைத்தலை</u>** காட்டலாம்.

அடுத்ததாக பையன் கேட்டான் "இறைவன் ஆணா அல்லது பெண்ணா?" என்று. ஆண் என்றால் ஆண்களுக்குச் சார்பென்பார்கள். அதேபோல் பெண் என்றால் பெண்களுக்குச் சார்பு என்பார்கள். எனவே இறைவனை **<u>இருபாலாரையும்</u>** பிரதிநிதிப்படுத்தல் வேண்டும் என்று இருவருமே ஏற்றுக்கொண்டார்கள். அடுத்த கேள்வியாக பையன், "இறைவனை மறுத்து எதிர்த்து வருபவர்களை இறைவன் என்ன செய்வான்?" என்று கேட்டான். தங்குதடையின்றி அயனர் உடனே, "கொடியவனை **<u>காலில் போட்டு மிதிப்பார்</u>**" என்று உற்சாகமாகச் சொன்னார். இருவருமே இப்பதிலை உடனே ஏற்றுக் கொண்டனர். அடுத்ததாக எழுந்த வினா "இறைவன் காலில் விழுந்து சரணடைந்து அபயம் கேட்டவரை இறைவன் என்ன செய்வான்?" என்பதாகும். அதற்குப் பதில், "**<u>அணைத்து உயர்த்தி விடுவார்</u>**" என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இறைவனை நெருங்கும் வேளை பகைகள் பெருகுமா அல்லது அமைதி நிறையுமா என்ற கேள்வி எழுந்தது. அங்கு **<u>அமைதி</u>** நிலவும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்து, "தாத்தா இந்தப் பூமியை மட்டுமல்லாமல்இந்தப் பிரபஞ்சத்தையே தாங்கி **<u>நின்று நிலைய வைப்பவர்</u>** இறைவன் அல்லவா?" என்று கேட்டதற்கு, ஆமாமாம்! அதுமட்டுமல்ல அவரில்லாவிடில் **<u>அனைத்தும் ஒடுங்கிவிடும்</u>** என்று அயனர் பதல் சொன்னார். கல கல என்று சிரித்த பையன், "இன்னும் என்ன தாமதம், வேலையைத் தொடங்குவதுதானே! நீங்கள் போட்ட பட்டியலை மீண்டுமொருமுறை வாசிப்போம்" என்றான்.

அவர்கள் சுவரில் எழுதிய பட்டியலை வாசித்தனர்.

1. படைத்தல்
2. காத்தல்
3. அழித்தல்
4. அருளல்
5. மறைத்தல்
6. இருபாலார்க்கும் பொதுவானவர்
7. கொடியவரை காலில் போட்டு நசுக்குபவர்
8. சரணடையும் நல்லவரை உயர்த்துபவர்
9. அமைதி உடையவர்
10. பிரபஞ்சத்தை நிலைக்கச் செய்பவர்
11. அவர் இல்லையெனில் அனைத்தும் அழிந்துவிடும்.

சிறுபையன் சாமி சொன்னான் உங்களுக்கு இப்போ இறைவன் எப்படி இருப்பார் என்பதில் ஒரு தெளிவு வந்திருக்கும். நீங்கள் செதுக்கும் சிலை மேலே நாம் போட்ட பட்டியலில் உள்ள பதினொரு குணங்களும் இருப்பதவசியம் என்று சொன்னான். அப்படி இருப்பின் கட்டாயம் அது

இறைவனைப் போலவே இருக்கும் என வலியுறுத்தினான். முதியவரான அயனரும் தான் அறிந்த விடயங்களைச் ஜீரணித்து அடுத்த தினமே சிலை செதுக்கும் பணியை ஆரம்பிப்பதாக உறுதி மொழி சொன்னார். அவர் சிறுவனைப் பார்த்து நீதான் எனக்கு உண்மையான குரு என்று கூறி அன்புடன் அவனை நோக்கினார். நீ அருகில் இருக்கும் வரை அச்சமேதுமில்லை. வாழ்க்கைக் கனவு நிச்சயமாக நிறைவேறும் என்று சொன்னார். அந்தப் பையன் பெருத்த சத்தத்துடன் சிரித்துக்கொண்டு "அப்படியானால் என்னைக் 'குருசாமி' என்று கூப்பிடுங்கள்" என்றான். முதியவர் மறுநாள் வரும்பொழுது உளி மற்றும் கருவிகள் கொண்டுவருவதாகச் சொன்னார். அதற்கு அந்தப் பையன், "தாத்தா! கருவிகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். என்னிடம் புத்தம் புதிதாக நல்ல உளி வைத்திருக்கிறேன். எனது அப்பா எனக்கு பிறந்தநாள் பரிசாகத் தந்தார். ஆனால் நான் ஒருபோதும் அவற்றை பாவிக்கவில்லை. நீங்கள் அதை உபயோகிக்கலாம். நான் நாளை காலை வரும்போழுது கொண்டு வருவேன்" என்றான். அயனர் அங்கிருந்த பாறையில் அமர்ந்து அன்று நடந்த சம்பவங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார். அவர் மனதில் ஒரு தெய்வீக அமைதி தோன்றியது. அவரால் இந்த அபூர்வ பையனைப் பற்றி யோசிக்காமல் இருக்க முடியவில்லை. சாதாரண கிராமத்துப் பையன்போல் இருந்தாலும், தனக்குப் புரியாமல்இருந்ததை எவ்வளவு எழிதாக புரிய வைத் தான். இச் சிறுவனுடைய அனுசரணையுடன் தனது தீராத ஆதங்கம் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை வரவே மெதுவாக எழுந்து வீடு நோக்கி நடந்தார்.

அடுத்தநாள் அயனர் மிக நேரத்தோடு எழுந்து குளித்து காலை உணவையும் உட்கொண்டார். குடும்பத்தாரிடம் தனக்கு அருகிலுள்ள மலைபாறையில் சிற்பம் செதுக்கவுள்ளதாகவும் ஒருவரையும் வந்து குழப்பவேண்டாம் என்று கூறிவைத்தார். அவர் குகையை அடைந்தபோது அந்தக் கிராமத்துச்சிறுவன் ஏற்கனவே அங்கு வந்திருந்தான். முதிய சிற்பியும் உளி, மற்றும் ஆயுதங்களை அடுக்கிவைத்துவிட்டு அதை அட்டாங்க நமஸ்காரம் செய்து இறையருள் வேண்டி நின்றார். அப்போ அச்சிறுவன் "தாத்தா, நீங்கள் சொன்னதுபோல் நான் குரு என்றால் என்னையும் வீழ்ந்து வணங்கி என் ஆசியை பெறவேண்டாமா? என்று கேட்டான். கண்களில் நீர் வடிய வயோதிக அயனர் அந்தப்பையனின் காலில் அட்டாங்கமாக விழுந்து வணங்கினார். அப்பையன் அவரை அரவணைத்து தூக்கி உமது சிலை காலத்தை வென்று நிலையாக நிற்கும் என்று வாழ்த்தினான்.

அயனர் உடனடியாகவே சிலை செய்வதற்கு ஆரம்பித்தார். சிறுவன் அருகில் இருந்த ஒரு பாறையில் அமர்ந்து அவர் வேலை செய்வதை கவனமாக கவனித்தான். இடைக்கிடை ஓரிரு வார்த்தை பரிமாற்றத்துடன் வேலை தொடர்ந்தது. பாறையில் செதுக்கும்படியால் வேலை மெதுவாகவே நடந்தது. ஒரு பிழை ஏற்பட்டால் திருத்துவது கடினம் அல்லவா?

ஒரு நாள் காலையே மழை தூறத் துவங்கியதால் அயனர் விரைந்து சென்று குகையில் ஒதுங்கினார். பையனும் ஒரு வாழை இலையை குடைபோல் பிடித்துக்கொண்டு ஓடி வந்தான். இருவரும் குகையில் அமர்ந்து கொண்டு பல விடயங்கள் பற்றி பேசினார்கள். முதியவர் தன் வாழ்க்கை அனுபவங்களை சிறுவனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். சாமி கேட்டான் இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் சிலையை முடிப்பதற்கு என்று. முதியவர் ஒரு பெருமூச்சை விட்டபடி "தம்பி எவ்வளவு தினங்கள் எடுக்குமோ தெரியவில்லை. நானோ முதியவன். முடியும் வரை உயிருடன் இருப்பனோ தெரியாது" என்றார். முதியவரின் வெள்ளி மயிரையும் களைத்துப் போன முகத்தையும் பார்த்து பெரும் கருணைபொங்க அயனரின் தோளில் தனது கையை வைத்து "தாத்தா, இப்படியான ஒரு புனிதமான பணி செய்யும் வரை நீங்கள் மரிக்கமாட்டீர்கள். இந்தச் சிலை முடியும் வரை நீங்கள் உயிருடன் இருப்பீர்கள்" என்று சொன்னான்.

இறுதியாக சிவராத்திரி தினத்தில் அந்தச் சிலை முடிவு பெற்றது. பையன் பெரியவரை நோக்கி இனி தான் கேள்வி கேட்கலாமா? என்று அனுமதி கேட்டான். அயனரும் அனுமதி தர "தாத்தா இதில் எப்படி படைப்பைக் காட்டுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"மகன், ஆரம்பத்தில் உலக தோற்றம் பெரு வெடிப்புடன் உண்டாவதை அறிவாய். இதுவே இன்றைய படைப்பு என்று நான் குறிப்பிடுவதற்குக் காரணம், படைத்தல் தொழில் இல்லாத காலம் என்று ஒன்று

இல்லை. வலது கையில் உள்ள உடுக்கையின் ‘ஓம்’ எனும் பிரணவ தோற்றத்தை குறிப்பதுடன் படைத்தலை குறிக்கும்”. “அது நல்ல விளக்கம்தான், ஆனால் நீங்கள் படைத்தல் என்றால், இந்த பிரபஞ்சம் படைப்பதற்கு எங்கிருந்து பெறப்பட்டது? ஒன்றால் தோற்றுவிக்காமல் படைப்பது எப்படி முடியும்?”. அயனர் பையனுடைய பிரகாசமான குறும்பு தவழும் கண்களை உற்றுப் பார்த்துக்கொண்டு சொன்னார், “கடவுள் எங்கும் பிரசன்னமானவர் என்றால் காண்பதெல்லாம் அவருள் அடங்க வேண்டுமல்லவா? அதனால்தான் அவருக்கு பவளம் போல் சிவப்பு நிற இரத்தத்தை கொடுத்துள்ளேன்” என்றார். “அப்படியானால் அழித்தல் எப்படிக் காட்டியுள்ளீர்கள்? மேலும் அழிக்கும்வேளை அனைத்தும் எங்கு செல்லும்?” என்றான்.

முதிய சிற்பி பதிலளித்தார். “நான் அழித்தல் என்பதிலும் ஒடுங்குதல் என்று குறிப்பிடுவேன். காரணம் புதிதாகத் தோன்றுவதுமில்லை, இருப்பது இல்லாமல் போவதுமில்லை. படைத்தல் இறைவனில் இருந்து வந்ததால் அழித்தல் மீண்டும் இறையுள் ஒடுங்கிவிடும். இங்கு படைத்தலுக்கும் அழித்தலுக்குமிடையில் ஒரு சமன்பாடு நிலைக்கும். பவளமேனியில் உள்ள பால்நிற வெண்ணீறு எல்லாம் ஒருபிடி சாம்பலாகி இறையுடன் கலப்பதை காட்டி நிற்கும். பையன் அடுத்த சந்தேகத்தை கேட்கமுன் வயோதிபர் தொடர்ந்தார். அபயமுத்திரை காட்டி நிற்கும் வலது கை இறைவன் காத்தல் தொழிலை காட்டி நிற்கும். அது சரிதான் ஆனால் அருளல் தொழிலை எப்படிக் காட்டியுள்ளீர்கள் என்று பையன் கேட்டான். அதற்கு அந்த முதிய சிற்பி சிறு புன்னகையுடன் அருளல் இறைவன் பாதங்களில்தான் என்றார். மேலும் இடது கை கஜஹஸ்த முத்திரையால் காட்டிநிற்கும் இடது பாதம்தான் அருள் பெறுவதற்கு வழி என்று சிலை சொல்லாமல் சொல்லி நிற்கும் என்றார்.

இறைவனின் முதல் நாலு பண்புகளையும் மிக அழகாக காட்டியுள்ளீர்கள், ஐந்தாவதான மறைத்தலை எப்படி சிலையில் காட்டியுள்ளீர்கள்? என்று கேட்டான். அதற்கு இறைவனின் வலது காலால் அழுத்தப் பட்டிருக்கும் அசுரன் அறிவுறுத்திருப்பதுடன் அதுவே இறைவன் தன்னை மறுத்து எதிர்த்து வருபவரை அணுகுவதையும் காட்டும். கடவுளுக்கும் காலடியில் இருக்கும் அசுரனுக்கும் என்ன தொடர்பு? என்று சாமி கேட்டான். அதற்கு அயனர் சொன்னார், “மகன், முயலகன் எனும் அரக்கனை முனிவர்கள் எல்லாம் வல்ல இறைவனை அழிப்பதற்கு அனுப்பிய வேளை, அந்த அசுரனை தனது வலது காலால் நசுக்கிய கதையை மறந்து விட்டாயா? என்று. அந்தச் சிறுவன், எவ்வளவு அழகாக புராணக் கதையையும், இறைவன் செயலையும் புனைந்து தந்துள்ளார் என்று வியந்தான்.

ஒரு சராசரி மனிதனுக்கு பல கைகளுடன் கூடிய சிலையாகத் தெரியலாம். எனவே பையன் அயனரிடம், “பொதுவாக மனிதருக்கு இரண்டு கைகள் தானே இருக்கும். இங்கு நாலு கைகள் இருப்பது தவறு அல்லவா?” என்று கேட்டான். வயோதிப சிற்பி புன்னகைத்து, “நிச்சயமாக மனிதரிலும் வேறுபட்டவர் இறைவன் என்பதைக் காட்டுதற்கே. மேலும் அவர் மனிதரிலும் சற்று உயர்ந்தவர், சிறந்தவர் அல்லவா?” என்று பதில் சொன்னார். தொடர்ந்து அயனர், “மக்களுக்கு இரண்டு கண்கள் உண்டு நிகழ்காலத்தை பார்ப்பதற்கு. இறைவனுக்கோ மூன்றாவது கண் உண்டு கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பார்ப்பதற்கு. மேலும் தம்பி உனக்கு ஞாபகப்படுத்த வேண்டும், கடவுள் மனிதனை உருவாக்கினார். இங்கு மனிதன் கடவுளுக்குஉருவத்தை கொடுக்க முயலுகிறான். இறைவனுக்கு இந்த அவயவங்கள் இல்லாமலே எல்லாக் கருமங்களும் ஆற்ற முடியும். மனிதனைப்போல் மூச்செடுக்க மூக்கும் சாப்பிடுவதற்கு வாயும் வேண்டியதில்லை அல்லவா? உருவமற்ற இறைவனுக்கு உருவம் கொடுத்ததற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்வோம்.

என்றாலும் நீங்கள் இறைவனை ஆணாகத் தானே அமைத்துள்ளீர்கள், எப்படி இரு பாலாருக்கும் பொது என்று கூறுவீர்கள் என்று பையன் சொன்னான். அயனர் சிலையின் இரு காதுகளையும் சுட்டிக்காட்டினார். வலது காதில் ஆண்கள் அணியும் குண்டலமும், இடது காதில் பெண்கள் அணியும் தோடும் இங்கு இருபாலாரையும் பிரதிநிதித்துவப் படுகிறதல்ல வா? என்றார். பையன் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் “தாத்தா நீங்கள் கெட்டிக்காரர்தான். பெண் பாதியான இடது மார்பை இடது கையால் மறைத்து இறைவனின் கௌரவத்தை காத்துவிட்டீர்கள்” என்றான்.

அயனர் புன்னகைத்துக்கொன்டு ஆண்பாதி யான வலது கால் தண்டனையை கொடுக்கிறது, பெண்பாதியான இடது கால் அருளல் தொழிலை செய்கிறது. இப்படி செய்தது பொதுவாக தந்தை பிள்ளையை கண்டித்து திருத்தி வழிநடத்துவார், தாய் அன்பால் அரவணைத்து திருத்தி நடக்கவைப்பதால் என்றார். “ஆகா!” என்றான் பையன்.

அடுத்து அந்தப் பையன், “தாத்தா நீங்கள் ஏற்கனவே இறைவனை மறுத்து நின்றவர்க்கு என்ன செய்வார் என்று சிலையில் காட்டிவிட்டீர்கள். ஆனால் அவர் காலடியில் சரணடைந்தவர்க்கு என்ன நடக்கும் எனக் கூற தவறிவிட்டீர்கள்” என்றான்.

“நீ சந்திரனை வாசுகி கலைத்தபோது, சந்திரன் இறைவனின் காலடியில் விழுந்து சரணடைந்த புராணத்தை அறிவாயல்லவா? இறைவன் சந்திரனுக்கு அடைக்கலம் கொடுத்தது மல்லாமல் தனது தலையில் தூக்கி வைத்தார். இச்சிலையிலும் சடைமுடியில் சூடியிருக்கும் சந்திரன் இந்த உண்மையை சுட்டிக்காட்டி யிருக்கிறது. புராணங்கள் சாதகர்களுக்கு உண்மையை சூட்சுமமாக காட்டி நிற்கும். சில குருமாரும் சிறுகதை மூலம் உண்மையை விளக்குவர்.

சிறுவனுக்கு முதிய சிற்பியின் அறிவுத்திறனைப் பார்க்க வியப்பாயிருந்தது. அடுத்ததாக இறைவன் சந்நிதியில் அமைதியும் சமரசமும் நிலவும் என்பதை எப்படி காட்டப்பட்டு ள்ளது என்ற சந்தேகம் எழுந்தது. அதற்கு அயனர், இறைவன் முடியில் எதிரிகளான வாசுகியும் சந்திரனும் சமரசமாக இணைந்து அமைதியாக ஒருவர் முடியிலும் மற்றவர் கழுத்திலுமாக இருப்பதைச் சுட்டிக் காட்டினார். சாமி மனதுக்குள் நினைத்துக் கொண்டான் இறைவன் சந்நிதானத்தில் அமைதியும் சமரசமும் நிலவும் என்பதை எவ்வளவு அழகாக காட்டப்பட்டுள்ளது என்று.

இவையனைத்தும் சரியே ஆனால் அவர் ஏன் நடனமாடிக் கொண்டிருக்கிறார் என வினா எழுப்ப, அயனர் இறைவன் படைத்தது மட்டுமன்றி அந்த படைத்த பிரபஞ்சத்தை நிலைத்து நிற்கச் செய்கின்றார் என்பதை திருவாசியில் இருக்கும் தீப்பிளம்புகள் கோள்களையும், அந்த திருவாசி விழுந்து விடாதிருப்பது அவரது சடாமுடியும், வீசிய கைகளினாலும் என்பதால் உணர்த்தி நிற்கும் என்றார்.

அவரது நடனம்தான் அணுக்களுக்கிடையில் நடக்கும் நடனத்துக்கும் கோளங்களுக் கிடையில் இடம்பெறும் நடனத்துக்கும் மூல காரணம். இறையின் நடனம் நின்றுவிட்டால் அனைத்துமே நின்றுவிடும். இது ஒரு பிரபஞ்ச நடனம்.

பையன் உடனே இந்த பிரபஞ்ச நடனமாடும் இறையை “நடராஜர்” என்றுதான் அழைக்க வேண்டும் என்றான். பின் “தாத்தா, உங்களுடைய பிரபஞ்ச நடனக்காரரான இறைவன் இருக்கும் வரை உங்கள் புகழ் இருந்து கொண்டே இருக்கும். இதனால் நீங்கள் நித்தியமானவராகி விட்டீர்கள். சரி நீங்கள் குகையில் யார் நிற்கிறார் என்று பாருங்கள்” என்றான். முதிய அயனர் மெதுவாக திரும்பி பார்த்தார். அங்கு வள்ளி தெய்வானையுடன் முருகன் அவரை வாழ்த்தி நின்றிருந்தார். திரும்பி பார்த்தபோது அந்தப் பையனைக் காணவில்லை.

அயனர் கண்கள் குளமாக கைகூப்பி தொழுது நின்றார். அப்போ முருகன், “அயனரே, மக்கள் மனமொருமித்து வழிபட ஒரு உருவம், உருவமில்லா இறைவனுக்கு கொடுக்க விரும்பினேன். உமது தெய்வீக ஆற்றலால் உலகுக்கு தந்துள்ளீர். நீண்ட நெடிய காலம் நோய் நொடி இல்லாது வாழ்ந்து எம்முடன் வ்ந்து சேரும்” என்று வாழ்த்தி மறைந்தார்.

**தொடர்புகளுக்கு:**
**kumarpunithavel@yahoo.com**

# திருமுறைகள்

## சிவசோதி சிவஞானம்

பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த அபய குலசேகரன் என்னும் குலோத்துங்க சோழ அரசனின் வேண்டுகோளுக்கமைய 600 வருடங்களுக்குள் வாழ்ந்த 63 நாயன்மார் களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து அவர்கள் இயற்றிய தெய்வீகப் பாடல்களை 12 திருமுறை களாக நம்பிஆண்டார்நம்பி தொகுத்து வைத்தார்.

**முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்** பாடியவை யாகும். இவர் சீர்காழி என்னும் ஊரில் கி.மு. 7ம் நூற்றாண்டில் பிறந்தவரும் சிவனில் பாதியான சக்தியால் திருமுலைப்பால் சுரந்து அளிக்கப் பட்டவருமாவார். சம்பந்தர் மிகக் குறுகிய காலமான 16 வருடங்கள் இப்பூவுலகில் வாழ்ந்து பக்திமார்க்கத்தைக் கட்டி எழுப்பினார். சிறந்த தேவாரங்களை அருளியதோடு சமண குருக்களுடன் வாதில் வென்று பாண்டிய மன்னனை மீண்டும் சைவசமயத்துக்குக் கொண்டுவந்தார். இவர் 1600 பதிகங்கள் பாடியிருந்தும் 384 பதிகங்களே எமக்குக் கிடைத்துள்ளது.

**நான்காவது, ஐந்தாவது, ஆறாவது திருமுறைப் பாடல்கள் திருநாவுக்கரசு நாயனார்** அருளி யவையாகும். பக்தி மார்க்கத்தை உயர்த்தும் இன்னுமொரு வல்லுனராக திகழ்ந்த இவரை அப்பர் எனவும் அழைப்பர். திருவாமூரில் பிறந்த இவர் திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த வராகும். இவர் சிறிது காலம் சமணராக இருந்து வயிற்று வலியிலிருந்து மீழ்வதற்காக சைவ சமயத்துக்கு மீண்டும் மாறி 80 வருடங்கள் சைவத்துக்கும் சைவ சமுகத்துக்கும் தொண்டாற்றினார். இவர் பாடிய 4800 பதிகங்களில் (ஒரு பதிகம் 10 பாடல்கள் கொண்டது) 312 பதிகங்களே எமக்குக் கிடைத்துள்ளன.

**ஏழாம் திருமுறைப்** பாடல்களை அருளிய **சுந்தரமூர்த்திநாயனார்** திருமுனைப்பாடியில் பிறந்தவராவர். பக்திமயமான பாடல்களைப் பாடியதோடு பக்தர்களை வெவ்வேறு குழுக்களாக இயங்கச்செய்த பெருமையும் இவருக்குண்டு. சுந்தரர் பாடியவற்றுள் 100 பதிகங்களே எமக்குக் கிடைத்துள்ளது. முதல் ஏழு திருமுறையில் அடங்கிய பாடல்கள் முழுவதும் ‘‘தேவாரம்’’ எனப்படும்.

**எட்டாம் திருமுறையில் மாணிக்கவாசகர்** மணியான சொற்களால் பாடிய திருவாசகம், திருக்கோவையார் ஆகியன அடங்கும். திருவாதவூரில் பிறந்த இவர் கி.மு. 8ம் நூற்றாண்டில் அல்லது 9ம் நூற்றாண்டின் முன்னைய பகுதியில் வாழ்ந்தவராவார். பாண்டிய மன்னனின் மந்திரியாக இருந்த இவர், குதிரைகள் வாங்க அனுப்பப்பட்டபோது பணத்தை சமய காரியங்களுக்காகச் செலவிட்டார். சிவபெருமான் இவருக்கு அருள் புரிந்து அரசன் அளித்த தண்டனையிலிருந்து காப்பாற்றியருளினான். இவர் அருளிய பாடல்களை படித்தவர்கள் **‘‘திருவாச கத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்’’** எனக் கூறுவதுண்டு.

திருவாசகத்தில் 51 பதிகங்கள் உண்டு. அப்பாடல்களில் அகவல், வெண்பா, கலிப்பா, விருத்தம் ஆகிய பாடல் இலக்கண அளவுகள் அழகாக உபயோகப்படுத்தப் பட்டுள்ளன.

தமிழுக்கும் சைவத்துக்கும் கிடைத்த இவ் வரிய பாடல்கள் ஒவ்வொன்றும் தனித்தனியான சிறப்புகளை கொண்டுள்ளன. இவை இறைவனே தன் விருப்பத்தை சொல்லப் பாடப்பட்டவை எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும் பிற சமயங்களிலிருந்தும் பண்பாடுகளிடமிருந்தும் தமிழையும் சைவத்தையும் காத்துத் தழைத் தோங்கச் செய்த பெருமைக்கு உரியவர்கள் இந்த நாயன்மார்கள். இவற்றை அவர்கள் திருப்பாக்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இவர்கள் பாடிய திருப்பாக்களில் சைவமும் தமிழும் இறை வழிபாடும் எப்படி ஒன்றோ டொன்று பின்னிப் பிணைந்தது என்பதற்கு சான்றாக ஞானசம்பந்தப் பிள்ளையார் தன் திருப்பாக்களில் **‘‘பண்ணும் பதம் ஏழும் பல ஞானத் தமிழவையும் முழுதானான்’’** இறைவன் என்றும் **‘‘செந்தமிழர் தெய்வமறை நாவர் செழ்நற்கலை தெரிந்த அவரோடு அந்தமிழ் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய அமர்கின்ற அரன்’’** சிவன் என்றும், திருநாவுக்கரச நாயனார் தன் திருப்பாக்களில் **‘‘தமிழோடிசை பாடல் மறந்தறியேன்’’, ‘‘வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவர்’’** இறைவன் எனவும், சுந்தரமூர்த்தி நாயனார் தன் திருப்பாக்களில் **‘‘மன்னார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே’’** என இறைவனையும், **‘‘நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் தன்தமிழ் நாற்புல வாணர்க்கோர் அம்மானே’’** என இறைவன் என்று தமிழையும் இறைவனையும் இணைத்துக் கூறுவதுடன் இவர்களின் வாழ்க்கை வழிபாட்டு

முறைகள் நால்வகை சைவசமய வழிபாட்டு முறைகளாகிய சரியை, கிரியை, யோகம் ஞானம் ஆகியவற்றை எமக்குக் காட்டி நிற்கின்றன. இவர்கள் நால்வரும் அருளிய தேவார திருமுறைகள் சைவத்தின் நால் வேதம் எனப் போற்றப்பட்டு வருகின்றது.

**ஒன்பதாவது திருமுறைப்** பாடல்கள் **திருவிசைப்பா** வாகும். இப்பாடல்கள் **ஒன்பது அருளாளர்களால்** பாடப்பட்டவை யாகும்.

**பத்தாவது திருமுறை சைவ சித்தர், திருமூலர்** பாடிவைத்த **திருமந்திரம்** ஆகும். திருமூலர் கி.மு. 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த சித்தாந்தக் கவிஞராவார். திருமந்திரப் பாடல்கள் இலகுதமிழில் வெண்பா ரூபத்தில் விருத்தமாக பண் இசைக்கக் கூடிய முறையில் பாடப்பட்டன வாம். திருமந்திரம் சித்தாந்தக் கருத்துகளை சொல்வதோடு எம்மனத்தை மாற்றும் வல்லமை கொண்டதாகும். திருமூலர் பாடல்களில் தந்திரம், மந்திரம், யோகம் பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளார்.

கீழ்க்காணும் பாடல் மூலம் ஆண்டவனை அடைதற்கு நாம் எப்படி அன்பு செய்யவேண்டு மென்பதை அழகாகக் கூறியுள்ளார்.

**என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போல் கனலில் பொரிய வார்ப்பினும்**
**அன்போடு உருகி அகம்குழை வார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்தஒண் ணாதே.**

உள்ளது ஒரு கடவுளே, உலகில் நாம் காண்பதனைத்தும் ஒன்றாகவே இயங்குகிறது எனும் சைவ சித்தாந்தத்தை ஆணித்தரமாக திருமூலர் திருமந்திரம் மூலம் கூறியுள்ளார். இக் கொள்கையையே இவரைத் தொடர்ந்து பிற் காலத்தில் தாயுமானவரும் இராமலிங்க அடிகளாரும் பாடியுள்ளார்கள். கீழ்க்காணும் திருமந்திரப் பாடல் இக்கருத்தை விளக்குகிறது:

**ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்**
**ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது**
**நன்றுகண் டீர்இனி நமசிவா யப்பழந்**
**தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.**

**பதினோராவது திருமுறைப்** பாடல்கள் **12 சைவப் பெரியார்களால்** பாடப்பட்டவை யாகும். அவர்களில் **காரைக்கால் அம்மையார், நக்கீர தேவர், கபிலதேவர், சேரமான்பெருமாள், நம்பியாண்டார்நம்பி, பட்டினத்தடிகள்** குறிப்பிடக் கூடியவராவர்.

தமிழ் இலக்கியத்தில் பட்டினத்தார் என்னும் பெயரில் இரண்டு கவிஞர்கள் இருந்துள்ளார்கள். இருவருமே காவிரிப்பூம் பட்டினத்தில் சைவர்களாக வாழ்ந்தவர்கள். ஒருவர் கி.மு. 11ம் நூற்றாண்டிலும் மற்றவர் 14 - 15ம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள். 11ம் நூற்றாண்டில் வாழ்ந்த **பட்டினத்தடிகள் அருளிய திருமுறை, கோயில் நான் மணி மாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றி யூர் ஒருபாஒருபது** பாடல்களும் **11ம் திருமுறை** யில் அடங்கியுள்ளது. பட்டினத்தடிகள் சிறந்த சைவராக வாழ்ந்ததோடு தனது பாடல்கள் மூலம் மனிதன் பாரம்பரியமான குடும்ப வாழ்க்கையில் இருக்கும்போதே சிவனை பக்தியோடு பூசிப்பதன் மூலம் இறவனை அடையலாமென எடுத்து ரைத்தார். பிற்காலத்தில் தோன்றிய பட்டினத்தார் போதித்த சந்நியாசக் கருத்துகளுக்கு இவர் கருத்துக்கள் மாறுபட்டவையாம்.

**பன்னிரண்டாவது திருமுறை சேக்கிழாரால்** எழுதப்பட்டதாகும். அவரது படைப்பு **பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம்** ஆகும். இவர் கி.மு. 12ம் நூற்றாண்டில் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆண்ட காலத்தில் வாழ்ந்தவராம்.

இப்பன்னிரண்டு திருமுறைகளில் உள்ள தெய்வீகப் பாடல்களை ஓதும்போது அவற்றின் பண், பொருள் என்பன கெடாது ஓதின் எமக்கு இறையருள் கிட்டும். இவற்றில் பண் எனப்படும் இசை வடிவமே முதன் முதலில் தமிழ் இசைக்குக் கிடைத்த திருத்தமான பண்பட்ட இசை வடிவம். அதனால் நாம் இந்த பண்களை அதாவது இசை வடிவத்தை எம் வருங்கால சந்ததியினர்களுக்கும் மற்றோர்க்கும் சரியாக எடுத்துச் சொல்லல் சாலச் சிறந்தது.

திருமுறைப் பாடல்களை பண்ணோடு ஓதினாலும் செவி மடுத்தாலும் என்ன பயன் என்பதனையும் அந்த நாயன்மார்கள் தமது பாடல்களிலேயே கீழ்க்காணும் படியாக விபரித்துள்ளார்கள்:

**“திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே”;**

**“தமிழ் மாலை பற்றி என்றும் இசை பாடிய மாந்தர் பரமன் அடி சேர்ந்து குற்றமின்றிக் குறைபாடொழியாய் புகழ் ஓங்கிப் பொலிவாரே” ;**

**“பண் இயல் பாட வல்லார்கள் இந்தப் பாரொடு விண் பரியாவகரே”;**
**“பத்திமையாலே பாடியும் ஆடியும் பயில வல்லார்கள் விண்ணவர் விமானம் கொடுவர ஏறி வியன் உல காண்டு வீற்றிருப்பவர் தாமே”**

என்றும் பலப் பல பாடல்களில் கூறியுள்ளார்கள்.

**************

உ

# தமிழில் இறைபுகழ்பாடும் இசை மரபு

(பண்ணிசை பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பு)

**கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன்**

**த**மிழில் இறைபுகழ்பாடும் இசைமரபுக்கு நீண்டதொரு வரலாறு உள்ளதை நாம் இலக்கியங்கள் வாயிலாக உய்த்துணர்ந்து கொள்கிறோம். தமிழின் 2000ஆண்டுப் பழைமை வாய்ந்த தொல்லிலக்கியங்களான சங்க இலக்கியங்களில் 'இறைபுகழ்பாடும்' மரபின் தோற்றத்தை எம்மால் தரிசிக்க முடிகிறது. இதற்கான சான்றுகளை அவற்றின் கடவுள வாழ்த்துகள் மற்றும் அப்பாடற்பகுதிகளில் இடம்பெற்றுள்ள வழிபாட்டு முறைமைகள்சார் செய்திகள் என்பவற்றில் கண்டு தெளியலாம். இவ்வாறான இறை புகழ்பாடும் மரபானது தொடர்ந்து பல்வேறு கட்டங்களில் வளர்ச்சியும் மாற்றமும் எய்திவந்துள்ளது. கி.பி ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்து உருவான 'பண்மரபு' சார்ந்த **திருமுறை – திவ்யப் பிரபந்த** பாடல்கள் மற்றும் கி.பி. 15ஆம்நூற்றாண்டு சார்ந்தவையான 'சந்தமிகு' **திருப்புகழ்**ப்பாடல்கள் அவற்றைத் தொடர்ந்து உருவான **கீர்த்தனைப்** பாடல்கள் என இந்த வளர்ச்சிவரலாறானது பல்வேறு மாற்றங்களுடன் தொடர்கின்றது. இந்த வரலாற்றிலே பண்மரபு சார்ந்த பாடல்கள் பற்றியதாவே இக்கட்டுரை அமைகிறது. பண் மரபைப் 'பண்ணிசை மரபு' எனக்கூறுவது பொதுவழக்காகும். இம்மரபின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை இங்கு நாம் வரலாற்றுமுறையில் நோக்கலாம்.

இசையைக் குறிப்பதற்கு வழங்கிய சொற்களிலொன்றே 'பண்' என்பதாகும். இச்சொல் பொதுவாக இசையைக் குறிப்பதோடு மட்டுமல்லாது இசையின் ஒரு கூறாகிய 'இராகம்' என்பதையும் குறிப்பதாக வழங்கி வந்துள்ளது. **திருமுறை** இலக்கியப் பரப்பிலுள்ள பாடல்களனைத்தும் பண் முறைமையில் திட்டமிட்டுப் பாடப்பட்டு வந்துள்ளன என்பதை நாயன்மார்களின் வரலாறுகளினூடாகவும் உமாபதிச்சிவாச்சாரியாரின் **திருமுறை கண்ட புராணம்** வாயிலாகவும் நாம் அறிந்து கொள்கிறோம்.

'பண்' என்ற சொல் பண்ணப்படுதல் என்ற செயலைக் குறிப்பதாகும். இச்செயற்பாட்டு நிலையை,

*'பாவோடணைதல் இசையென்றார் பண்ணென்றார்*
*மேவார் பெருந்தான மெட்டானும் - பாவாய்*
*எடுத்தன் முதலா இருநான்கும் பண்ணிப்*
*படுத்தமையால் பண்ணென்று பார்'*

எனவரும் **பஞ்சமரபு** என்ற இசைஇலக்கணநூலின் வெண்பா தெளிவுபடுத்திநிற்கிறது. குரல்சார்ந்து வெளிப்படுத்தப்படும் இசைக்கோலத்திற்கே 'பண்' என்ற பெயர் வழங்கி வந்துள்ளமையை இப்பாடல் உணர்த்துகிறது. அதாவது தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் முதலிய எட்டு இடங்களிலும் முறையே எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு முதலிய எட்டுவகைச் செயற்பாடுகளாலும் ஓசை பிறப்பிக்கப்படும் நிலையில் 'பண்' உருவாகிறது என்பதே இப்பாடல் தரும் செய்தியாகும்.

'இராகம்' என்ற சொல் முதலில் மதங்கரின் **பிருகத்தேசி** (5ஆம் நூற்றாண்டு) என்ற வடமொழி இசை இலக்கணநூலில் காணப்படுகிறது. 'அழகிய கமகங்களோடு கூடிய சுரக்கூட்டங்கள்' என்றும், 'மக்கள் கேட்டு இன்புறும் தன்மையது' என்றும் அந்நூலில் இராகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழின் பண் மரபுடனும் இராகம் என்ற சொல் தொடர்பு பட்டுள்ளமையை 'நட்டராகம்', 'தக்கராகம்', 'பழந்தக்கராகம்', 'மேகராகக் குறிஞ்சி' ஆகிய பண்களின் பெயர்கள் உணர்த்திநிற்பன. இவற்றின் மூலம் பண்களுக்கும் இராகங்களுக்கும் காலங்காலமாக ஒரு தொடர்பு இருந்து வந்ததனை அறிகிறோம்.

சங்ககாலத்திலே ***முல்லைப்பண், ஆம்பல்பண், காஞ்சிப்பண், காமரப்பண், குறிஞ்சிப்பண், செவ்வழிப்பண், நைவளப்பண், படுமலைப்பண், பாலைப்பண், மருதப்பண், பஞ்சுரப்பண், விளரிப்பண்*** ஆகிய பெயர்களிற் பண்கள் பெயர்சுட்டி வழங்கப்பட்டு வந்துள்ளதை இலக்கியங்கள்வாயிலாக அறிந்துகொள்கிறோம். இவை அக்காலத்து மக்களின் இயல்பான உணர்வெழுச்சிகளின் வெளிப்பாடுகளாக அமைந்தவையாகும். இவற்றிற்பல அக்கால இறை வழிபாடுகளுடனும் தொடர்புபெற்றிருந்தன. பாணர், விறலியர், பாடினி, பொருநர் எனப் பலதிறப்பட்ட ஆண்களும் பெண்களும் இறைவழிபாட்டில் பாடல்களுடன் பல்வகைக் கூத்துக்களையும் ஆடுதற்கு இப் பண்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவைபற்றிய பலசெய்திகள் பண்டைய இலக்கியங்களிற் காணப்படுகின்றன.

இயற்றமிழின் தொல்லிலக்கணமாகிய **தொல்காப்பிய**த்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகைநிலங்களுக்குமுரிய பண்களும் அந்நிலத்துக்குரிய இசைக்கருவிகளான யாழ்வகைகளும் முழவுக்கருவிகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. நாற்பெரும்பண்களாவன ***பாலை யாழ்ப்பண், குறிஞ்சியாழ்ப்பண், மருதயாழ்ப்பண், நெய்தலியாழ்ப்பண்*** என்பனவாகும். இவற்றில் ***பாலையாழ்ப்பண்***ணிலிருந்து குரல் திரிபினால் ஏழ்பெரும்பாலையிசைகளான ***அரும்பாலை, செவ்வழிப்பாலை, படுமலைப்பாலை, செம்பாலை, மேற்செம்பாலை, விளரிப்பாலை, கோடிப்பாலை*** என்பன உருவாகின்றன. பின்னர் இவ்வாறு பெறப்பட்ட ஏழ்பெரும்பாலையிசைகளிலிருந்து 103 பண்கள் தோற்றம் பெறுகின்றன.

இவைபற்றிய தகவல்களனைத்தையும் இலக்கண-இலக்கிய நூல்கள் வாயிலாகவே நாம் அறிகிறோம். குறிப்பாகச் **சிலப்பதிகார**மும் அதன் உரைகளும் **சேந்தன் திவாகரம், பிங்கலநிகண்டு, சூடாமணிநிகண்டு** முதலான நிகண்டு நூல்களும் **பஞ்சமரபு, இசைநுணுக்கம், கூத்தநூல்** போன்ற இசைஇலக்கணநூல்களும் இவ்வகைத் தகவல் களைத்தருவனவாகும்.

தமிழிலே பண்ணமைதியுடன் கூடிய பாடல்களைக் கொண்டதாக எமக்குக் கிடைக்கும் முதலாவது இலக்கியம் **பரிபாடல்** ஆகும். இதிலே பாடல்களை இயற்றியவர்கள் பெயர்களும் அவற்றுக்கு இசையமைத்தவர்கள் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. ஒருவர்பாடிய பாடலுக்கு இன்னொருவர் இசையமைத்ததான அக்காலச் செயன்முறைமையை இவ்விலக்கியம் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம். இவ்வமைப்பிலே ***பாலையாழ், காந்தாரம், நோதிறம்***(நேர்திறம்) ஆகிய மூன்று பண்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

மேற்படி **பரிபாடல்** என்ற ஆக்கத்துக்குப் பின்னர் பண்ணிசை தொடர்பாக நமக்குக் கிடைக்கும் முக்கிய ஆக்கம் நாயன்மார்களில் ஒருவரான காரைக்காலம்மையாரின் **மூத்ததிருப்பதிக**ங்கள் ஆகும். இயற்றியவரே அவற்றை இசையமைத்துப் பாடியுள்ள நிலையை இவை உணர்த்துவன. ***நைவளம், இந்தளம்*** ஆகிய பண்கள் இப்பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழிலே திருமுறைமரபில் பதிகமுறைமையைத் தோற்று வித்தவை மேற்படி அம்மையாரின் பதிகங்களேயாகும். எனவே, வரலாற்றில் காரைக்காலம்மையாரே பதிக அமைப்புடன் பண்முறைமையை இயைவித்த முதல்வராகிறார். இவர் தொடக்கிவைத்த மரபை அடியொற்றியே நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பல்லாயிரக்கணக்கான பண்கனிந்த பாடல்களைச் சைவஉலகுக்கு வழங்கியுள்ள னர். இவை பக்திப் பாடல்களாக மட்டுமன்றித் தமிழின் பண்வளத்தைக் காட்டும் இசைப்பாடல்களாகவும் - இசை உருப்படிகளாகவும் - திகழ்கின்றன. பெருந்தொகை யான பண்சுமந்த பாடல்களைப்பாடிய மேற்படி மூவரில் சம்பந்தரும் சுந்தரரும் முறையே ***நைவளம்*** மற்றும் ***இந்தளம்*** ஆகிய பண்களிலலேயே தமது முதற் பாடல்களைப் பாடியுள்ளனர் என்பதிலிருந்து பண்களின் பரப்பில் இப்பண்களுக்குரிய முக்கியத்துவத் தையும் நாம் அறிந்து கொள்கிறோம்.

மேற்படி மூவர் பாடல்களையும் '*தேவாரம்*' என்ற சொல்லாற் குறிப்பிடுவது மரபு. இச் சொல்லானது மேற்சுட்டிய மூவர்பாடல்களையும் சுட்டும்வகையில் பயிலத்தொடங்கிய காலம் கி.பி.17ஆம் நூற்றாண்டாகும். நாயன்மார்கள் காலத்திலும் (கி.பி 600-900) அதன்பின்னர் அவர்களின் வரலாறு கூறும் **பெரியபுராணம்** எழுதிய சேக்கிழார் காலத்திலும் (கி.பி.1200) கூட ***'தேவாரம்'*** என்ற சொல்லானது இம் மூவர்பாடல்களையும் குறிக்கும் சொல்லாக வழக்கிலிருந்தமைக்குச் சான்றுகள் கிடைக்க வில்லை. அப்பாடற்பரப்புக்கு ஆரம்பத்தில் ***'திருப்பாட்டு', 'திருப்பதிகம்', 'திருப்பாசுரம்', 'கீதம்'*** போன்ற சொற்களே வழக்கிலிருந்தன என்பதை அப்பாடல்களின் அகச்சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. ***தேவாரம்*** என்ற சொல்லை மூவர் பாடல்களுக்கு முதலில் பயன்படுத்தியவர் 17ஆம் நூற்றாண்டினரான சைவ எல்லப்ப நாவலர் ஆவார். இவர்பாடிய **திருவருணைக் கலம்பக**த்தின் காப்புச் செய்யுளில்,

*'வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்*
*உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே'*

என வரும் அடிகள் சைவசமய குரவர் நால்வரைப் போற்றுவதாக அமைகிறது. இச்செய்யுள் மூலம் சமயக்குரவர் நால்வரில் முதல் மூவரின் பாடல்களைத் ***தேவாரம்*** எனவும் மாணிக்கவாசகரின் பாடல்களைத் ***திருவாசகம்*** எனவும் சுட்டப்பட்டமையை உய்த்துணர்ந்து கொள்கிறோம்.

இவ்விடத்திலே மேற்படி ***தேவாரம்*** என்ற சொல்லின் பகுதியாக அமையும் 'வாரம்' என்ற சொல்லின் பொருண்மைபற்றி அறியவேண்டியது பண்ணிசை பற்றிய விளக்கத்துக்கு அவசியமாகிறது. இச்சொல் இசையோடு தொடர்புடைய தொன்றாக பண்டைக்காலம் முதல் வழங்கிவந்தமைக்குச் சான்றுகள் உள.

'வல்லோன் புணரா வாரம் போன்றே....'

என வரும் **தொல்காப்பிய** நூற்பா (மரபியல்:109)ப் பகுதியிலே 'வாரம்' என்ற சொல்லானது இயற்பாடலில் புணர்க்கப்படும் இசைக் கூறு பாட்டினைச் சுட்டியமைகின்றது. மேலும் பண்டைய தமிழரின் இசைபற்றிய பல அரிய செய்திகளைக் கூறுவதான **சிலப்பதிகார**ப் பேரிலக்கியத்தின் **அரும்பதவுரை**யிலே,

'நடை, வாரம், கூடை, திரள் என்ற நான்கு இயக்கங்களில் சொல்லொழுக்கமும் இசை யொழுக்கமும் பெற்ற வாரப் பாடலை அளவுகண்டு நிறுத்தவல்லவராகக் குழலோன் இருக்கவேண்டும்'

எனக் குழலாசிரியன் பற்றிய இலக்கணம் எடுத்துரைக்கப்பட்டுளது. இதிலே 'வாரப்'பாடலே இசைப்பாடலுக்குரிய இயல்பைப் பெற்ற பாடல் எனற கருத்து அமைந்துளது. இவ்வாறு இசையோடு தொடர்புடையதாக வழங்கி வந்த 'வாரம்' என்ற சொல்லானது இறை யுணர்வுசார்ந்த இசைப்பாடல்களைச் சுட்டும் நிலையில் ***தே - வாரம்*** எனவும் ***தேவாரம்*** எனவும் ஆயிற்று. நாளடைவில் இப்பெயரே மூவர் பாடல்களைக் குறிக்கும் பொதுப்பெயராகவும் நிலைத்து விட்டமையை வரலாறு உணர்த்துகிறது.

இவ்வாறு ***தேவாரம்*** பாடிய சமயக்குரவர்களின் பாடல்கள் பெரும்பான்மையும் பதிகமுறைமையில் பக்தியுணர்வை வெளிப்படுத்துதற் கேற்ற வகையிலான பல சீர்கள் கொண்ட ***விருத்தப்பா*** வடிவில் அமைந்தவையாகும். இப்பாடல்கள்

மேற்படி நாயன்மார்களது பல்வகை உணர்வுகள் மற்றும் அநுபவங்கள் என்பவற்றின் வெளிப்பாடுகளாகும். திருத்தலத்தின் பெருமை கூறுதல், இறைவனது திருத்தோற்றத்தை வர்ணித்தல், அவற்றுக்குரிய புராணக்கதைகளை எடுத்துரைத்தல், இறைவனால் ஆட்கொள்ளப் படவேண்டுதல், ஆட்கொள்ளப்பட்ட அனுபவங்களை எடுத்துரைத்தல் முதலான பல்வகையான பக்தியுணர்வுசார் அம்சங்களை இப்பாடல்களில் நாம் தரிசிக்கிறோம்.

இப்பாடல்கள் மக்களைச்சென்றடைவதன் மூலம் சைவம் தழைக்கவேண்டு மென்பதே அவர்களது முக்கியநோக்கமாக இருந்தது. இதனால், கோயிலைமையப்படுத்தி யனவாகவும் அடியார்கள் கூட்டத்துடன் இணைந்துபாட வாய்ப்பானவை யாகவும் மக்களின் அன்றாட பாவனையிலுள்ள மொழியில் அமைந்தனவாகவும் இவை வெளிப்பட்டன. நாவுக்கரசரது *'தமிழோடிசைபாடல் மறந்தறியேன்'*, சம்பந்தரது *'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாக...'*, சுந்தரரின் *'ஏழிசையாய் இசைப்பயனாய்...'* எனத் தொடங்கும் பாடலடிகள் மேற்சுட்டியவாறான அவை பாடப்பட்ட சூழல்சார் அம்சங்களைத் தெளிவாக உணர்த்திநிற்பனவாகும்.

சோழப்பெருமன்னர் காலத்தில் நம்பியாண்டார் நம்பியின் பெருமுயற்சியால் தேவாரங்கள் மீட்டெடுக்கப்பட்டு மதங்கசூளாமணியாரால் இசை யமைக்கப்பட்டுப் பேணப்பட்டன என்பது வரலாறு. தமிழ்ப் பண்களின் தொகை 103என இசைஇலக்கண நூல்கள் வாயிலாக அறியப் படினும் மேற்படி நாயன்மார் மூவரின் பாடல்களில் பயின்றனவாக நாமறியும் பண்களின் தொகை 23மட்டுமே என்பது இங்கு நமது கவனத்துக் குரியது. இப்பண்முறைமைகள் அடுத்து நம் கவனத்திற்கு வருகின்றன.

காலத்தால் முற்பட்டவராகக் கருதப்படும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரில் திருஞானசம்பந்தரது பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளிலும் திருநாவுக்கரசருடைய பாடல்கள் 4,5,6ஆம் திருமுறைகளிலும் அமைந்துள்ளன. சம்பந்தரது பாடல்களமைந்த முதலாம் திருமுறையில் முதலிருபத்தியிரண்டு பதிகங்கள் ***நட்டபாடைப் பண்***ணில் அமைந்துள்ளன. அடுத்து ***தக்கஇராகம்*** (23-46), ***பழந்தக்கஇராகம்*** (47-62), ***தக்கேசி*** (63-74), ***குறிஞ்சி*** (75-103), ***வியாழக்குறிஞ்சி*** (104-128), ***மேகராகக் குறிஞ்சி*** (129-135), ***யாழ்மூரி*** (136) என பண்முறமைகள் பதிக ஒழுங்கில் அமைந்துள்ளன. இரண்டாம் திருமுறையில் ***இந்தளம்*** (1-39), ***சீகாமரம்*** (40-54), ***காந்தாரம்*** (55-82), ***பியந்தைக்காந்தாரம்*** (83-96), ***நட்டராகம்*** (97-112), ***செவ்வழி*** (113-122) எனவும் மூன்றாம் திருமுறையில் ***காந்தாரபஞ்சமம்*** (1-23), ***கொல்லி*** (24-41), ***கொல்லிக்கௌவாணம்*** (42), ***கௌசிகம்*** (43-55), ***பஞ்சமம்*** (56-66), ***சாதாரி*** (67-101), ***பழம்பஞ்சுரம்*** (102-116), ***கௌசிகம்*** (117), ***புறநீர்மை*** (118-123), ***அந்தாளிக்குறிஞ்சி*** (124-125) எனவும் ஒரு திட்டப்பாங்குடன் பதிகங்களின் பண்முறைமைகள் அமைந்துள்ளன. சம்பந்தரது பாடல்களனைத்தும் தாளத்துடன் 'பண்ணாங்கமாக'ப்பாடப் படுபவையாகும். தொகுக் கப்பட்ட 383 பதிகங்களது 4147 பாடல்களின் (பிற்சேர்க்கை தவிர்ந்து) பண்களே மேலே சுட்டப்பட்டன.

திருநாவுக்கரசரது தொகுக்கப்பட்ட பாடல்கள் 312 பதிகங்கள் கொண்ட 30064பாடல்களாகும். இவற்றில் 4ஆம் திருமுறையில் அமைந்துள்ள முதல் 22 பதிகங்கள் பண்ணாங்கமாகத் தாளத்தோடு பாடப் படுபவையாகும். தொடர்ந் தமைந்துள்ள பதிகங்களில் **திருநேரிசை** (22-79), **திருவிருத்தம்** (80-113) ஆகிய பெயர்களிலமைந்த பதிகங்கள் மரபாக ***கொல்லிப்பண்***ணில் சுத்தாங்கமாக (தாளத்திற் குள்ளமையாது விருத்த மாக)ப் பாடபட்டு வருபவையாகும். தற்பொழுது ***கௌசிகம்*** (பைரவி), ***பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்), சாதாரி (பந்து வராளி)*** போன்ற பண்களிலும் ஓதுவார்களால் இவை பாடப்பட்டு வருகின்றன. அடுத்து 5ஆம் திருமுறையிலமைந்த **திருக்குறுந்தொகை** என்ற பெயரிலமைந்த 100 பதிகங்கள் சுத்தாங்கமாக ***இந்தளப்பண்***ணில் மரபாகப் பாடப்பட்டு வருவதாகும். 6ஆம் திருமுறையிலமைந்த **திருத்தாண்டகம்** எனப் பெயர்சுட்டப்பட்ட 99பதிகங்கள் ***குறிஞ்சிப்பண்***ணில் ***(ஹரிகாம்போதி இராகம்)*** சுத்தாங்கமாகப் பாடப் பட்டு வருபவையாகும். சுந்தரமூர்த்திநாயனாரின் பண்ணாங்கமாகப் பாடப்பட்டுவரும் முதல் 21பதிகங்களினதும் பண்முறைமைகளை நோக்கின், ***காந்தாரம்*** (1-7), ***பியந்தைக்காந்தாரம்*** (8), ***சாதாரி*** (9), ***காந்தாரபஞ்சமம்*** (10-11), ***பழந்தக்கராகம்*** (12-13), ***பழம்பஞ்சுரம்*** (14-15), ***இந்தளம்*** (16-18), ***சீகாமரம்*** (19-20), ***குறிஞ்சி*** (21) என்ற ஒழுங்கில் அமைந்திருக்கின்றன.

சுந்தரமூர்த்திநாயனாரினது பாடல்கள் 100 பதிகங்களில் அமைந்துள்ளன. பெரும்பாலும் பண்ணாங்கமாகப் பாடப்பட்டு வரும் இவரது பாடல்கள் சம்பந்தர், அப்பர் ஆகியோர் பயன் படுத்திய சிலபண்களோடு அவர்கள் பயன்படுத்தாத பண்ணொன்றினையும் பயன் படுத்தியுள்ளார். அப்பண்ணானது ***செந்துருத்தி (மத்தியமாவதி)*** என்பதாகும். ***இந்தளப்பண் (***1-12), ***தக்கஇராகம்*** (13-16), ***நட்டராகம்*** (17-30), ***கொல்லி*** (31-37), ***கொல்லிக்கௌவாணம்*** (38-46), ***பழம்பஞ்சுரம்*** (47-53), ***தக்கேசி (***54-70), ***காந்தாரம் (***71-75), ***பியந்தைக்காந்தாரம் (***76), ***காந்தாரபஞ்சமம்*** (77), ***நட்டபாடை*** (78-82), ***புறநீர்மை*** (83-85), ***சீகாமரம்*** (86-89), ***குறிஞ்சி*** (90-93), ***கௌசிகம் (***94), ***செந்துருத்தி (***95), ***பஞ்சமம்*** (96-100) என்பனவாகப் பதிகங்களில் பண் முறைமையானது காணப்படுகின்றன.

மேற்படி சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பயன்படுத்திய 23 பண்களின் பெயர்களும் அவற்றிற்கு ஒப்பானவையாகச் சுட்டப்படும் கர்நாடகசங்கீத இராகங்களும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் ***காந்தாரம், பியந்தைக்காந்தாரம், கொல்லி, கொல்லிக்கௌவாணம்*** ஆகிய பண்கள் ***'நவரோசு'*** என்ற ஒரே இராகத்தைக் குறிப்பதாகவும் ***சாதாரி, நட்டஇராகம்*** போன்ற பண்கள் 'பந்துவராளி' என்ற

ஒரே இராகத்தைக் குறிப்பதாகவும் ***தக்கேசி, தக்கராகம்*** ஆகிய இருபண்களும் ***'காம்போதி'*** என்ற ஒரே இராகத்தைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளமை நோக்கற்பாலது. மேற்கூறிய பண்கள் சிறுசிறு வேறுபாட்டால் வெவ்வேறு பெயர்கள் கொண்டமைந்தாலும் அவற்றின் பயில்நிலையினை அறியமுடியாதிருப்பதால் ஒரே இராகப்பெயர் கொண்டமைகின்றன.

| **தேவாரப்பண்களின் <u>பெயர்களும்</u>** | **இராகங்களின் <u>பெயர்களும்</u>** |
|---|---|
| *1.இந்தளம் :* | *மாயாமாளவகௌளை* |
| *2.நட்டபாடை :* | *கம்பீரநாட்டை* |
| *3.காந்தாரபஞ்சமம் :* | *கேதாரகௌளை* |
| *4.குறிஞ்சி :* | *ஹரிகாம்போதி* |
| *5.காந்தாரம் :* | *நவரோசு* |
| *6.பியந்தைக்காந்தாரம் :* | *நவரோசு* |
| *7.கொல்லி :* | *நவரோசு* |
| *8.கொல்லிக்கௌவாணம் :* | *நவரோசு* |
| *9.கௌசிகம் :* | *பைரவி* |
| *10.சாதாரி :* | *பந்துவராளி* |
| *11.நட்டஇராகம் :* | *காமவர்த்தனி (பந்துவராளி)* |
| *12.செவ்வழி :* | *யதுகுலகாம்போதி* |
| *13.தக்கேசி :* | *காம்போதி* |
| *14.தக்கராகம் :* | *காம்போதி* |
| *15.பஞ்சமம் :* | *ஆகிரி* |
| *16.பழந்தக்கஇராகம் :* | *ஆரபி* |
| *17.பழம்பஞ்சுரம் :* | *சங்கராபரணம்* |
| *18.புறநீர்மை :* | *பூபாளம்* |
| *19.மேகராகக்குறிஞ்சி(யாழ்மூரி) :* | *நீலாம்பரி* |
| *20.அந்தாளிக்குறிஞ்சி :* | *சாமா* |
| *21.வியாழக்குறிஞ்சி :* | *சௌராஸ்டம்* |
| *22.சீகாமரம :* | *நாதநாமக்கிரியை* |
| *23.செந்துருத்தி :* | *மத்தியமாவதி* |

பண்களுக்கும் அவற்றுக்கு ஒப்பான இராகங்களுக்கும் உள்ள இயைபு மற்றும் இயைபின்மை ஆகியன தொடர்பாக தமிழகத்தில் ஆழமான ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. பண்ணாராய்ச்சியை முன்னெடுக்கும் நோக்கில் தமிழிசைச்சங்கம் என்ற நிறுவனம் 1943இல் சென்னையில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பண்ணாராய்ச்சிக் கருத்தரங்கங்களை முத்தமிழில் புலமைபெற்ற சான்றோர் மத்தியில் வருடாவருடம் நிகழ்த்திவருகின்றது. பண்களும் அவற்றிற்கு ஒப்பான இராகங்களும் பற்றிய சிந்தனைகள் மற்றும் பண்கள், இராகங்கள் என்பவற்றின் பெயர்களில் காலங்காலமாக நிகழ்ந்துவந்துள்ள மாற்றங்கள் பற்றிய வரலாற்றுப் பார்வைகள் என்பன பண்ணாராய்ச்சிக் கருத்தரங்குகளில் முக்கிய கவனத்தைப் பெற்றுவந்துள்ள விடயங்களாகும். இவற்றை அடியொற்றியே மேற்சுட்டப்பட்ட பட்டியல் அமைந்துள்ளது. இவ்வகை ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொண்டுவருவதன் மூலம் பண்கள் பற்றிய சில தெளிவான கருத்துகளை இன்றும் 'கருத்தரங்க முடிபு'களாக தமிழிசைச் சங்கம் வெளியிட்டு வருகின்றது.

துமிழ் இசையிலக் கணநூல்கள் பல கால வெள்ளத்தில் மறைந்தொழிந்த நிலையில் மேற்படி கருத்தரங்க முடிபுகளே தமிழரின் பண்ணிசை மரபு பற்றிய தெளிவுக்கு நம்மை வழிப்படுத்தும் முக்கிய ஆதாரங்களாகத் திகழ்ந்துவருகின்றன.

**************

**<u>கிரகதோஷ நிவாரணம்:</u>** வைத்தீஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கும் வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிகள் பக்தர்களுக்கு கிரகதோஷங்களால் வரும் பிணிகள் நீக்க வல்லவர். மேலும் அம்பாள் துர்க்கை வடிவிலும், அங்காரகன் தனி வடிவமெடுத்து இக்கோயிலில் பிரத்தியட்சமாயுள்ளதால், செவ்வாய்க் கிழமையில் நடாத்தப்படும் விசேட பிரார்த்தனைகள் தீராத நோய்கள் அனைத்தையும் தீர்க்கும்.

பக்தர்கள் பிணி தீர்க்க, மாதந்தோறும் கடைசிச் செவ்வாய்க் கிழமை மாலை 5.00 மணியில் இருந்து விசேட கூட்டுப்பிரார்த்தனையும் அதைத் தொடர்ந்து அபிஷேக பூசைகளும் நடாத்தப்பட்டு விசேட பிரசாதம் வழங்கப்படும். பிரார்த்தனைக்கு வரமுடியாத நோயுற்ற பக்தர்கள் பெயர், நட்சத்திரம், விலாசம், தொலைபேசி எண் ஆகியவற்றை கோயில் நிர்வாகத்துக்கு அறிவித்தால், பூசை முடிவில் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும்.

# தீர்த்தம்

## குருவடி பணிந்து
## வைத்திய கலாநிதி இ.லம்போதரன்

**"சென்றாடு தீர்த்தங்கள் ஆயினான் காண்"** – திருவநாவுக்கரசு நாயனார்

**"ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்"** – மாணிக்கவாசகரின் திருவாசகம்

**"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"** – தாயுமானவர்

நமது வினைகளைத் தீர்ப்பதனால் "தீர்த்தம்" எனப்பெற்றது என்று வாரியார் சுவாமிகள் கூற்கின்றார். புண்ணிய தலங்களுக்குச் சென்று வழிபட்டால் நமது பாவங்கள் வினைகள் தொலைந்து நாம் சிவபுன்னியம் செய்த புண்ணியர்களாகத் திரும்பலாம். ஆயினும் பல வேளைகளில் குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்வது போல் நாம் தலங்களுக்கு என்று யாத்திரை கிளம்பி அத்தோடு செய்யும் பல காரியங்களினால் புண்ணியத்துக்கு பதிலாகப் பாவங்களைச் சம்பாதித்துக்கொண்டு வருகிறோம். இதனால் முன்னையதிலும் பார்க்க பல படி கஷ்டங்களும் துன்பங்களும் அதிகரிக்க "ஐயோ நாம் தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தும் எமது கஷ்டங்கள் தீரவில்லையே என அங்கலாய்க்கின்றோம்".

புண்ணிய தலங்களுக்கு யாத்திரை கிளம்பு வதற்கு முன்னர் அருகிலுள்ள எமது இஷ்ட தெய்வத்தின் கோவிலுக்குச் சென்று வழிபட்டுக் கிளம்பவேண்டும். இதை புறப்படும்போதோ அல்லது அதற்கு முந்திய நாட்களிலோ செய்து கொள்ளலாம். இப்போதுதான் எமது தல யாத்திரை முறையாகத் தொடங்குகின்றது. ஆகவே அந்த நாளில் இருந்து மச்ச மாமிச உணவுகளைத் தவிர்த்து ஆசாரமாக இருந்து தினமும் உங்களால் இயன்ற தேவார திருமுறைப் பாடல்களை ஓதி வர வேண்டும். "முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்" என்று திருவாசகம் கூறும். இவ்வாறு சிவபுராணம், விநாயகர் அகவல், அபிராமி அந்தாதி, திருமுருகாற்றுப்படை போன்ற பாடல்கள் ஓதி வருவதனாலேயே எமது வினைகள் பாவங்கள் விலகும். இது இயலாதவர்கள் நமச்சிவாய நாமத்தையோ தமது இஷ்ட தெய்வத்தின் நாமத்தையோ தொடர்ந்து சொல்லி வரலாம். கலியுகத்தில் நாமஜபம் பாவங்களைப் போக்கும் சிறந்த நிவாரணியாகும்.

**"ஹரேர் நாம ஹரேர் நாம ஹரேர் நாமைவ கேவலம், காலௌ நாஸ்தி ஏவ நாஸ்தி நாஸ்தி ஏவ கதிர் அன்யதா"** – பிரஹண் நாரதீய புராணம்.

இனி தல யாத்திரை கிளம்பி இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று இறங்கியதும் அங்கும் முதல் வேலையாக அருகில் உள்ள தலம் ஒன்றுக்குச் சென்று வழிபட வேண்டும். தல யாத்திரையின் போது மட்டுமல்ல, எந்தப் பிரயாணத்தின்போதும் ஒரு இடத்திற்குச் சென்று அங்கு தங்கும் போது அவ்விடத்தில் உள்ள தலத்துக்குச் சென்று தரிசனம் செய்த பின்னரே மற்ற காரியங்களில் ஈடுபடவேண்டும். ஆசாரத்தை முறைப்படி கடைப் பிடிப்பவர்கள் நீராடி அருகில் உள்ள தலத்துக்குச் சென்று வழிபட்ட பின்னரே உணவருந்துவார்கள். இதன் பின்னரும் இடையிலும் வேறு அலுவல்களிலும் பண்டங் கள் வாங்குவதிலும் இடங்கள் பார்ப்பதிலும் நண்பர்கள் உறவினர்களைச் சந்திப்பதிலும் அலுவலக வேலைகளிலும் ஈடுபடுவதில் தவறில்லை. ஆயினும் முறையாக ஆசாரத் துடன் தல யாத்திரைக்கென்றே செல்பவர்கள் இவற்றைக்கூடத் தவிர்த்துக் கொள்வார்கள்.

இவ்வாறே ஒவ்வொரு தலங்களுக்கும் செல்லும்போதும் நாம் கவனிக்காமல் விடுகின்ற ஒன்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களாகும். புண்ணிய தலங்களுக்குச் சென்று, அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் முழுகி, அங்குள்ள புண்ணிய மூர்த்திகளை வழிபட்டு அங்கு அடியார்களுக்கு அமுதளிக்கும் மகேசுர பூசையும் பிராமணருக்கு போசன வசதிக்காக தட்சணையும் ஏழைகளுக்கு அன்னதானமும் வழங்கி வழிபட நமது வினைகள் நலிந்து நாம் புண்ணியர்கள் ஆவோம். தலத்தில் உள்ள மூர்த்திக்கும் புது வஸ்திரம் அலங்காரம்

மாலைகள் சாத்துவித்து வழிபடுதல் சிறப்பு. புண்ணிய தீர்த்தங்களைச் சிவமயமாகப் பாவித்து அதிலே முழுகுதல் வேண்டும். அவ்வாறு நாம் முழுகும்போது நமது வினைகளும் மூழ்கின்றன. நாம் மீண்டும் எழுகின்ற போது அவ்வினைகள் எழுவதில்லை. அவ்வாறே நாம் தலங்களில் விழுந்து வணங்கும்போது நமது வினைகளும் வீழ்கின்றன. நாம் எழும்போது அவ்வினைகள் மீண்டும் எழுவதில்லை. இத்தலங்களை நாம் நடந்து வலம் வரும்போதும் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் நமது பாவங்கள் நசிகின்றன. பிராமணரைக் கொன்ற பிரம்மகத்தி போன்ற பாவங்கள்கூட இவற்றால் நலியும் என்று பின்வரும் சுலோகம் கூறுகின்றது.

**"யானி கானி ச பாபானி**
**பிரஹ்ம-ஹத்யாதிகானி ச**
**தானி தானி ப்ராணஸ்யந்தி**
**பிரதக்ஷிணா பதே பதே"**

புண்ணிய தலங்களில் எத்தனையோ மகான்கள் ஞானிகள் சித்தர்கள் அடியார்களின் புனிதமான பாதங்கள் பட்டிருக்கும். அவர்களின் உடல் படிந்து வணங்கியிருக்கும். அங்கெல்லாம் நாம் வீழ்ந்து வணங்கி அந்த மகான்களை தீண்டும் பேறு பெற்ற தூசுத் துணிக்கைகளில் ஒன்றாவது நம்மைத் தீண்டும் பேறு பெற்றால் நாம் ஜன்மசாபல்யம் அடைந்தவர்களாவோம்.

தலயாத்திரை முடிந்து வரும்போது நாம் யாத்திரை செய்த தலங்களின் விபூதி குங்கும பிரசாதங்களையும் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். பலர் தாம் தங்கும் இடங்களிலேயே அவற்றை விட்டு விட்டு வந்துவிடுவதைப் பார்க்கிறோம். இது நாம் இறையருளையே விட்டு விட்டு வருவது போலாம். விமானப் பயணத்தில் கொண்டுவர முடியாத பூக்கள், பழங்கள் போன்றவற்றை அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் கடல் ஆறு போன்ற ஏதாவதொரு ஓடும் நீரில் விட்டுவிட வேண்டும். அத்தோடு நாம் புறப்படும் இடத்தில் வழிபட்டுக்கிளம்பிய எமது இச்ட தெய்வத்தின் கோவில் மூர்த்திக்கும் வஸ்திரம், ஆபரணம், விளக்கு, குங்குமம் போன்ற பொருட்கள் வாங்கி வரவேண்டும்.

வீடு வந்து சேர்ந்ததும் முதல் காரியமாக நீராடி அந்த தலத்துக்குச் சென்று தாம் கொண்டு வந்த மேற்கூறிய பொருட்களை பக்தியுடன் சமர்ப்பித்து வழிபட்டு வீடு திரும்ப வேண்டும். தமது குடும்பத்தினர்க்கும் உறவினர்களுக்கும் நண்பர் களுக்கும் தாம் கொண்டுவந்த தலங்களின் விபூதி குங்கும பிரசாதங்களை வழங்க வேண்டும். இவ்வாறு பிரசாதங்களைக் கொண்டுவருவதற்கு இங்கிருந்து செல்லும்போதே மூடித்திறக்கும் அமைப்புள்ள பிளாஸ்திக்கு அல்லது பொலிதீன் பைகள் கொண்டு செல்வது வசதியாய் இருக்கும். இவற்றை தனித்தனியாக கொண்டுவர சிரமமாய் இருந்தால் விபூதி எல்லாவற்றையும் ஒன்றாக ஒரு பையிலும் குங்குமம் எல்லாவற்றையும் ஒன்றாக்கி ஒரு பையிலும் என்ற முறைப்படியும் கொண்டு வரலாம். ஆயினும் அவ்வத்தலங்களின் பிரசாதங்களை தனித்தனியாக கொண்டு வந்து வழங்குவது சிறப்பானது. இவ்வாறு வழங்குவதனால் அங்கு சென்று வழிபட இயலாதவர்களுக்கும் வசதியிருந்தும் மனம் இல்லாமல் இருப்பவர்களுக்கும் கூட அவர்களின் வினை நலிந்து புண்ணியம் கிடைக்கின்றது. இவ்வாறு மற்றவர்களுக்கு சிவபுண்ணியம் சேர்ப்பித்தல் புண்ணியங்கள் எல்லாவற்றிலும் மேலான புண்ணியமாகும்.


**<u>Graha Thosha Nivaranam:</u>** Special Prayers are conducted on last Tuesdays of every month to worship our Lord Vaitheeswaran and Sri Thaiyal Nayaki, who has powers to heal all type of sicknesses and deceases of their devotees.

Tuesday is considered auspicious to 'Ambal'. Also, 'Thurkai' and 'Ankaharahan' grace 'Vaitheeswaram'. All these factors make this temple powerful for healing affected devotees.

Special 'Vibuti Prasatham' shall be forwarded at the end of prayers to the suffering devotee, if the name, star, address and telephone number are informed to the Temple Office.

# ஆறுமுகநாவலரின் பிரசங்க வழி

தமிழிலே பிரசங்க மரபை முதன் முதலாக ஆரம்பித்து வைத்தவர் ஆறுமுகநாவலர் அவர்களே என்பதைச் "சைவமென்னுஞ் செஞ்சாலி வளரும் பொருட்டுப் பிரசங்கம் என்னும் மழையை முதன் முதற் பொழிந்தார்" என்று த. கைலாசபிள்ளை கூறுவது கருதற்பாலது.

சைவ ஆகமங்கள் பற்றியும், சமயகுரவர் பற்றியும் பிரசங்கங்கள் செய்து மக்களுக்குச் சமய உண்மைகளை எடுத்து விளக்கியவர் நாவலர். 1846 ஆம் ஆண்டு தனது வீட்டுத் திண்ணையில் மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லக் கொடுக்க ஆரம்பித்த நாவலர், பின்னர் பொதுமக்கள் நன்மையின் பொருட்டு 1847ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலிலே சைவப்பிரசங்கத்தை ஆரம்பித் தார். இப்பிரசங்க மரபானது அவரது இறுதிக்காலம் வரை நடத்தப்பட்டது.

நாவலரின் பிரசங்கங்களின் பயனாகப் பலர் சிவதீட்சை பெற்றனர்; மாமிச போசனத்தைத் தவிர்த்தனர்; கோவிலுக்கு ஒழுங்காகச் சென்று வழிபட்டு வரத் தொடங்கினர். சைவாசிரம தர்மங்களைக் கடைப்பிடித் தொழுகவும் தலைப் பட்டனர். இங்ஙனம் நாவலர் தமது சமயப் பிரசாரப் பணியைக் கிராமங்களிலும் மேற்கொள்ளத் தொடங்கினார்.

நமது சமயத்தின் மீது கிறிஸ்தவர்கள் நடத்தி வந்த தாக்குதல்களை எல்லாம் புறங் காணும் நோக்கத்தோடு நாவலர், 'சுப்பிரபோதம்', 'சைவ தூஷண பரிகாரம்' என்னும் நூல்கள் இரண்டை எழுதி வெளியிட்டார்.

"தாம் கொண்ட கொள்கையை நிறுவத் தமது சமய உண்மைகளைப் பாதுகாப்பதற்காக எடுத்தாண்ட நூல்களைப் பார்க்கும் போது ஆச்சரியமாயிருக்கிறது. எந்தெந்த வகையிலெல் லாம் எதிர்ப்பும் மறுப்பும் தோன்றக்கூடுமோ அவற்றையெல்லாம் எதிர்பார்த்து அவற்றுக் கெல்லாம் தர்க்க ரீதியான பதில் கூறி விளக்கியிருக்கும் சாதுரியத்தை உண்மையிலேயே முதல் தரமான நுண்ணறிவு படைத்த ஒருவரிடத்திலே தான் காண முடியும். இந்நூல் நமக்குப் பெருந் தீங்கையன்றோ விளை விக்கின்றது?"

இவ்வாறாக 1855 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலே அச்சிடப்பட்ட வெஸ்லியன் மெதடிஸ்த அறிக்கையிலே சைவதூஷண பரிகாரம் என்ற நாவலருடைய நூலைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சைவசமயத்தின் அடிப்படை அறிவைப் பெறாதவர்களே புராணங்களை விமர்சிக்கப் புறப்பட்டு, சிவனும், சுப்பிரமணியரும் தத்தமது சக்திகளை உண்மையாகவே திருமணம் புரிந்ததாகக் கூறி வருகிறார்கள். "சுவரூபி, எங்கும் நிறைந்தவர் என்பதையும் 'கடவுள் திருமணம் புரிந்தார்' என்பது அபத்தம், என்பதையும் ஓரளவு சமய அறிவு படைத்தவர் எவரும் அறிவர்." என்று நாவலர் தமது சுப்பிரபோதத்திலே கூறியுள்ளார். கோவில்களிலே தாசியர் நடனங்களை நடத்தும் துராக்கிருதமான செயல்களைத் தவிர்த்து அதற்குப் பதிலாக, தேவாரப் பண்களை இசைத்தல், சமயப் பிரசங்கங்களைச் செய்வித்தல் போன்ற நல்ல காரியங்களைச் செய்விக்குமாறு கோவில் அதிகாரிகளுக்கும் அந்நாளிலே நாவலர் அறிவுரை வழங்கினார்.

நாவலரின் சைவப்பிரசங்கக்களுக்குக் கிறிஸ்தவ தேவாலயங்களிலே நடக்கும் பிரசங்கங்கள் வழிகாட்டியாக அமைந்தன. கிறிஸ்தவர்களது வேகமான பிரசாரத்தால் மக்கள் மதிமயங்கி உண்மை அறியாது தவித்த நேரத்தில் இவர்களில் அக்கறை உடையவர்களாக சைவக்குருக்கள் விளங்கினார்கள் இல்லை. மதமாற்றத்தைக் கண்டும், அதைத் தடுக்க ஆவா செய்யாத சைவக் குருக்கள் மீதும், சைவசமயத்தைத் துறந்து சொந்த லாபம் பெறும் நோக்குடன் மதம் மாறினோர் மீதும் நாவலர் சொல்லம்புகள் துளைக்கத் தவறவில்லை. சைவசமயிகளை நோக்கி அவர் கூறிய அறிவுரைகளைப் பார்க்கும்போது நாவலர் நெஞ்சம் வருந்தி வேதனைப்பட்டது புலனாகின்றது.

"யாழ்ப்பாணத்திலுள்ள சைவசமயிகளே! உங்களி டத் துள்ள அன்புமிகுதியினாலே நாஞ்சொல்பவை களைக் கேளுங்கள். நீங்கள் சிவதீட்சை பெறும் என்னை! விபூதி ருத்திராக்ஷ¡தாரணம், பஞ்சாக்ஷர செபம், சிவாலய தரிசனம், இவைகளை நியமமாகச் செய்தும் என்னை! உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் புண் ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமையையும், அதனாலே பெறப்படும் முக்தியின் இலக்கணங்களையும், கிரமமாகப் படித்தாயினும், கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை. உங்கள் கோயில்க ளிலே சிவபக்தியை வளர்ப்பதற்கு ஏதுவாகிய வேதாபாராயாணம், தேவார திருவாசக பாராயாணம், சைவசமயப் பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்கின்றீர் களில்லை."

என உள்ளம் நொந்து நாவலர் சைவசமயிகளுக்கு விடுத்த விண்ணப்பத்தில் 'உங்களிடத்திலுள்ள அன்பு மிகுதியினாலே நாஞ் சொல்பவைகளைக் கேளுங்கள்' என்ற அவர் கூற்று சமுதாயத்தின் அக்கால நிலைமையை வெளிப்படுத்துகின்றது. சைவ சமயத்தவர்களின் நலன் கருதி உழைக்காத சைவக்குருக்கள் போக்கும் நாவலரை வேதனைக் குள்ளாக்கியது. இவை யாவற்றுக்கும் பரிகாரமாகவே பிரசங்க மரபை அவர் தொடக்கினார். நாவலரோடு ஒருசாலை மாணாக்கராயிருந்த கார்த்திகேய ஐயரும் இடையிடையே பிரசங்கம் செய்து வந்தார்.

தான் மட்டும் பிரசங்கங்கள் செய்து மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கம் கொண்டவராக விளங் காது சைவப்பிரசங்கங்கள் செய்ய வல்லரவர் களுக்குத் தேர்ச்சி கொடுத்து இத்தொண்டிற் பலரை ஊக்குவிக்கவும் முயன்றிருக்கின்றார்.

"தமிழ்க்கல்வியும், சைவசமயமும் அபிவிருத்தி யாவதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை ஸ்தாபித்தலும், சைவப்பிரசார ணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரம மாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசார கர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே நல்லொ ழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையறாமுயற்சியும், ஆரோக்கியமும் உடைய வர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண விலக்கியங்களையும், சைவசாஸ்திரங்களையுங் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர் களாகவும் சைவப் பிரசாரகர்ளாகவும் நியமிக்கலாம்."

மேற்குறிப்பிட்ட ஆறுமுகநாவலர் கூற்றிலிருந்து தமிழ், சைவம் என்ற இரண்டினையும் அபிவிருத்தி செய்வதற்காக இளஞ்சந்ததியினரை ஊக்குவிப்பதற்கு நாவலர் ஒரு திட்டத்தினையே மனதிற் கொண்டி ருந்தார் என்பது தெளிவாகின்றது.

## நாவலரின் கடைசிப் பிரசங்கம்

நாவலர் பிரசங்கங்களையும் புராண படலங்களையும் இருந்து கொண்டு செய்வார். ஏனைய சமூக, பொருளாதார விடயங்கள் பற்றிப் பிரசங்கங்கள் செய்யும் போது நின்றுகொண்டு செய்வார். பிரசங்கம் செய்யும்போது தரித்திருக்கும் பட்டாடையும் திரி புண்டரமும் கௌரிசங்கமும் தாழ்வடமும் எவரையும் வசீகரிக்கும். இவரது இனிமையான குரல் வெகுதூரம் கேட்கும்.எல்லா வகையான இராகங்களும் நாவலருக்கு வரும். சிலசமயம் நான்கு மணி நேரம் வரையும் காலெடுத்து மாறி வையாமலும் உடலுறுப்புக்களை அசைக்காமலும் ஒரே மாதிரியிருந்து கொண்டு பிரசங்கிப்பார்.

நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879 ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளது குருபூசை தினமான ஆடிச்சுவாதியன்று வண்ணார்பண்ணை சைவப்பிர காச வித்தியாசாலையில் நடைபெற்றது. அன்று பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை என்ற சுந்தரரின் தேவாரத்தைப் பீடிகையாக வைத்துப் பிரசங்கித்தார்.

நிலையில்லாத இந்தச் சரீரம் உள்ள பொழுதே எனது கருத்துக்கள் நிறைவேறுமோ என்னும் கவலை இராப்பகலாக என்னை வருத்துகிறது. அதாவது சைவமும் தமிழும் வளர்ச்சியடைவதற்கு வித்தியாசாலைகளைத் தோற்றுவித்தலும், சைவப் பிரசங்கத்தைச் செய்வித்தலும் இன்றியமை யாதனவாகும். நான் உங்களிடத்துக் கைமாறு கருதாமல் முப்பத்திரண்டு ஆண்டுகள் தமிழ்ப் பணியும் சைவப் பணியும் செய்துள்ளேன்.எனக்குப் பின் சைவ சமயம் குன்றிப்போகும் எனப் பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். எனவே உங்களுக்காக சைவப் பிரசாரகரைத் தேடிக்கொள் ளுங்கள். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம், இனிமேல் நான் உங்களுக்குப் பிரசங்கம் பண்ணமாட்டேன் என்ற கருத்துப்பட பேசினார். அப்பிரசங்கத்திற்கு வந்தவர்களில் கண்ணீர் விட்டழாதவர் எவருமில்லை.

மறுநாள், நேற்றிரவு ஏன் இவ்வாறு பிரசங்கம் செய்தீர்கள்? என்று அன்பரொருவர் கேட்டபோது தமக்கு அந்நேரம் ஒன்றும் தெரியவில்லை என்றாராம் நாவலர்.

நாவலரது கூற்றுப்படியே அப்பிரசங்கம் அவரது கடைசிப் பிரசங்கமாக அமைந்தது. இப்பிரசங்கம் நடைபெற்று நான்கு மாதங்களின் பின் அவர் சிவபதமடைந்தார்.

**நன்றி: சைவநீதி**
(சைவப் பத்திரிகை)

# நாவலர் முதல் சிவத்தமிழ்ச் செல்வி வரை

(ஈழத்துச் சைவ மரபு நாவலர் காலம் முதல அண்மைக் காலம் வரை இயங்கிவந்த முறைமை பற்றிய ஒரு வரலாற்றுநிலைப் பார்வை)

கலாநிதி நா. சுப்பிரமணியன்

## தோற்றுவாய்

ஈழத்துச் சைவ மரபுக்கு நீண்டதொரு வரலாறு உளது. தொல்பழங்காலம் முதலே தொடரும் அந்த மரபில் கி.பி. 19ஆம் நூர்றாண்டுக் காலப்பகுதி ஒரு முக்கிய வரலாற்றுக் கட்டமாகும். அதுவரை மக்களின் வாழ்வியலில் ஒரு முக்கிய பண்பாட்டுக் கூறாகமட்டும் இயங்கிநின்ற சைவநெறியானது அக்காலகட்டத்தில், 'சமூகம் தழுவிய மக்களியக்கம்' என்ற ஒரு புதிய பரிமாணத்தை எய்தியது. அந்நிய மதமாற்ற முயற்சிகளுக்கு எதிராக, 'சுயபண்பாட்டுப் பாதுகாப்பு' என்ற நோக்கில் பேரெழுச்சியாக உருப்பெற்ற சைவ சமூக இயக்கம் அது. இவ் வியக்கத்துக்கான உணர்வு நிலைகளை ஒருங்கிணைத்து வடிவமைத்து வழிநடத்திய 'தானைத்தலைவர்' என்ற கணிப்புக்குரியவர் 'நாவலர்' என்ற சிறப்புப் பெயரால் சுட்டப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்(1822-79) ஆவர். அவருடைய சமயப் பேருரைகள், பலவகை எழுத்தாக்கங்கள், நூற்பதிப்புமுயற்சிகள் மற்றும் கல்விக்கூட உருவாக்க முயற்சிகள் ஆகியன அக்காலச் சைவத்துக்கு ஒரு 'மக்களியக்க'ப் பரிமாணத்தை நல்கின என்பது வரலாறு.

அவ்வாறு, நாவலரால் வடிவமைக்கப்பட்ட சைவஇயக்கத்தின் வரலாற்றியக்கத்தில் நமது சமகாலத்தின் முக்கிய செயற்பாட்டாளராகத் திகழ்ந்து நிறைவு பெற்றவர் 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற சிறப்புப் பெயர் தாங்கிய பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்(1925 – 2008). 'சைவ உலகின் அன்னை' என்ற சிறப்புக் கணிப்புக்குரியவராகத் திகழ்ந்த அவர் தமது சொல்வன்மை மற்றும் ஆலய அறங்காவல் திறன் முதலியவற்றால் சைவநெறியை 'மக்கள் மய'ப் படுத்தியவர்.

மேலே நோக்கியவாறு, நாவலர் காலத்தில் உருப்பெறத் தொடங்கிய சமூகந்தழுவிய சைவ இயக்கமானது சிவத்தமிழ்ச் செல்வியின் நிறைவுநிலை வரையான காலகட்டத்தில் நடந்துவந்த பாதை பற்றிய எனது மனப்பதிவுகள் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன.

## அ. நாவலர் காலச் சைவ இயக்கம் - நோக்கும் செயல்வடிவமும்

19ஆம் நூற்றாண்டில் நாவலரால் வடிவமைத்து வழிநடத்தப்பட்ட சைவ இயக்கத்தின் முன்னிருந்த முக்கிய பிரச்சினை சமகாலக் கிறிஸ்தவமதமாற்ற முயற்சிகளினின்று சைவ சமூகத்தைப் பாதுகாப்பது ஆகும்.இப் பாதுகாப்பு முயற்சியானது வெற்றிபெற வேண்டுமானால் அக்காலப் பகுதியில் சைவ சமூகத்தில் நிலவிய அறியாமைகள் மற்றும் ஒழுக்கநிலை சார்ந்த குறைபாடுகள் என்பவை துடைத்தெறியப்படவேண்டியது அவசியம் என்பது அக்காலச் சூழலில் உணரப்பட்டது. இதற்கு ஏற்றவகையில், 'சைவம் சார்ந்த அறிவுவளத்தைப் பொதுமக்கள்மத்தியில் முன்வைத்து, அவர்களைச் சிந்திக்கத் தூண்டுதல்' மற்றும் 'எதிர்நிலைக் கருத்துக்களைக் கண்டனம் செய்தல்' ஆகிய செயல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறான செயல்திட்டம்சார் நடவடிக்கை களாகவே நாவலரின் மேற் சுட்டியவாறான பேருரைகள் முதல் கல்விக்கூட உருவாக்கங்கள் வரையிலான பல்வகைச் செயற்பாடுகளும் அமைந்தன. நாவலர் வழிநடத்திய சைவத்தின் அறிவுத்தள மானது **இருக்கு** முதலிய நால்வேதங்கள், சிவாகமங்கள், சைவம்சார்ந்த புராணங்கள், திருமுறைகள் மற்றும் மெய்கண்ட சாஸ்திரங்கள் ஆகியவற்றை நம்பகமான மூலாதாரங்களாகக் கொண்டதாகும். கோட் பாட்டு நிலையில் இது ***சைவ சித்தாந்தம்*** என்ற தத்துவமரபு சார்ந்ததாகும். நாவலருடைய சைவநிலைப்பட்ட இயங்கு நிலையானது இத்தத்துவம் பேசும் உண்மைப் பொருள்களான 'இறை-உயிர் - மலம்' என்பன பற்றிய சிந்தனைகள் மீதான பற்றுறுதியுடன் அமைந்ததாகும். சமூகத்துக்கு இவை பற்றிய சிந்தனைத் தெளிவை ஏற்படுத்துவதும், இவற்றோடு தொடர்புடைய வழிபாட்டு முறைமைகள் மற்றும் வாழ்வியல் 'அற- ஒழுக்க' நிலைகள் என்பவற்றை விளக்கி யுரைப்பதும் நாவலருடைய முக்கிய நோக்கு நிலைகளாக அமைந்தன. அவருடைய மொழியில் சுட்டுவதாயின் சமூகத்திற்கு 'நல்லறிவுச் சுடர் கொளுத்தும்' நோக்குகள் இவை.

அவருடைய பேருரைகள் மற்றும் **சிவாலய தரிசனவிதி**, **சைவ வினாவிடை 1-2**, **பாலபாடம் 1- 2- 4**, **திருவிளையாடற்புராண வசனம்** , **திருத்தொண்டர் பெரியபுராண வசனம்** , **சுப்பிர போதம்** முதலிய எழுத்தாக்கங்கள் மற்றும் அவர் உரை யெழுதியும் பதிப்பித்தும் வெளியிட்ட பண்டைய ஆக்கங்கள் என்பன அவரு டைய மேற்படி நோக்கின் செயல் வடிவங்களேயாகும். சமூகத்தின் பல நிலை யினரதும் அறிவுத்தரங்களை மனங்கொண்டு அவ்வவர்க்கு ஏற்றவகையில் எடுத்துரைக் கும் ஒரு நல்லாசிரியனாக அவர் செயற்பட்டு நின்றார். **சைவ வினாவிடை**கள் மாணவ நிலையினரை முன்நிறுத்தி எழுதப் பட்டவையாகும். **திருத்தொண்டர் பெரியபுராண வசனம்** முதலிய பல ஆக்கங்கள் கற்ற றிந்தவர்களை முன்னிறுத்திய செயற்பாடுக ளாகும். எதிர்க் கருத்தாளர்களை எதிர் கொள்ளும் சந்தர்ப் பங்களில் கண்டனக் காரராகவும் வடிவெடுத்தவர், நாவலர்.

நாவலரவர்கள் தம்முடைய 57ஆண்டுக்கால வாழ்வில் 32 ஆண்டுக்காலத்தை (1848 முதல் 1879 வரை) இவ்வாறான செயற்பாடு களுக்காக முழுநிலையில் அர்ப்பணித்தவர். அவர் வழிநடத்திய மேற்படி மக்களியக்க மானது அக்காலகட்டத்தில் ஈழத்தில் நலிவுற்றிருந்த சித்தாந்த சார்பான சைவ மரபுக்குப் புதிய இரத்தம் பாய்ச்சியது. இதன்மூலம் அவ்வியக்கம் சமகாலத்தின் கிறிஸ்தவ மதமாற்றச் செயற்பாடுகளின் முன்னால் ஈழத்துச் சைவச் சமூகம் முழுநிலையிற் பணிந்து விடாவண்ணம் நிமிர்ந்து நிற்க வகைசெய்தது.

இவ்வாறாகப் பயன்பட்டுநின்ற இந்த இயக்க மானது ஒருவகையில் 'ஈழத்தமிழரின் பண்பாட்டு மீட்பு முன்முயற்சி' யாகவும் இன்னொரு வகையில் 'ஈழத்தின் தேசிய உணர்வின் முதல் முகிழ்ப்பு' ஆகவும் அமைந்தது என்பது நமது காலகட்ட ஆய்வுலகின் கணிப்பாகும். மேற்படி சைவ இயக்கத்திற்கான எண்ணக்கரு நாவலருக்கு முன்பே ஈழத்துத் தமிழ்ச் சூழலில் கால்கொண்டுவிட்டது. அவருடைய காலத்துக்கு முன்பிருந்தே, சைவ சமூகத்தினரின் உள்ளத் தில், கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகளுக்கு எதிரான உணர்வுகள் உருவாகி வளர்ந்து வந்துள்ளன. இவ்வாறு உருவாகிவளர்ந்த ஒரு கருத்தியலுக்கே அவர் தமது காலச்சூழலை யொட்டி ஒரு மக்களியக்க வடிவம் தந்து வழி நடத்தினார். இதுவே இங்கு நாம் மனங்கொள்ள வேண்டிய வரலாற்றுண்மை யாகும். இவ்வாறு நாவலரு க்கு முன்னரேயே இந்தக் கருத்தியல் உருப்பெற்றுவிட்டமைக்கு , சுன்னாகம் அ.முத்துக்குமார கவிராசர் (1780 – 1851) அவர்களின் இயற்றிய **யேசுமத பரிகாரம்**, **ஞானக்கும்மி** ஆகியன முக்கிய சான்றுகளாகும். இவை கிறிஸ்தவரின் மதமாற்ற முயற்சிகள் மீதான எதிர்ப் புணர்வின் வெளிப்பாடுகளாகும்.

நாவலரின் சமகாலத்தில் மேற்படி எதிர்ப்புணர்வை வலுவாக வெளிப்படுத்திய வர்களுள் ஒருவர் நீர்வேலி சிவ.சங்கர பண்டிதர் அவர்கள்(1829--1870). இவர் 1864 இல் **பரமதகண்டன சுயமத ஸ்தாபன சங்கம்** என்ற ஒரு அமைப்பை உருவாக்கியவர். **கிறிஸ்துமத கண்டனம்**, **சைவப்பிரகாசனம்** முதலிய தலைப்பு களிலான நூல்களையும் இவர் எழுதி யுள்ளார். நாவலரோடு இவர் நேரடித் தொடர்புகொண்டு செயற்பட்டாரா என்பதை அறியச் சான்றுகள் கிடைத்தில. ஆயினும் நாவலர் வழிநடத்திய மக்களியக்கச் செயற்பாட்டிற்கு இவரும் உரிய பங்களி ப்புச் செய்துள்ளார் என்பது மேற்சுட்டிய இவருடையமுயற்சிகள் மூலம் தெளிவாகி ன்றது. எனவே நாவலர் வழிநடத்திய இயக்கம் நாவலர் என்ற தனிமனிதரின் செயற்பாடாக மட்டும் அமைந்த ஒன்றல்ல என்பது மனங் கொள்ளப்பட வேண்டிய வரலாற்றுண்மை யாகும்.

நாவலர் வழிநடத்திய மேற்படி இயக்கத்துக்கு அவருடைய சமகாலத்தில் பங்களிப்புச் செய்ததோடு அமையாமல் அவருக்குப் பின்னரும் அவ்வியக்கத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள் பலர். இவ்வகையில் சி.வை. தாமோதரம்பிள்ளை (1832– 1901), காசிவாசி சி.செந்திநாதையர (1848 – 1924), சு.சபாபதி நாவலர்(1848 – 1903), த.கைலாசபிள்ளை (1855 – 1939) என இவர்களின் பெயர்பட்டியல் தொடர் கின்றது. இவர்களின் சிந்தனைகள் செயன் முறைகள் என்பன பற்றிய தகவல்கள் ஏற்கெனவே பலராலும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வரலாற்றிற் பதிவாகியுள்ளன. (அவற்றின் விவரங்கள் இங்கு விரிவுகருதித் தவிர்க்கப்படுகின்றன.) 'மேற்சுட்டியவர்களால் நாவலருக்குப் பின்னரும் தொடரப்பட்ட சைவ இயக்கத்தின் அண்மைக்காலம் வரையான முக்கிய செல்நெறிகள் எத்தகையன?' என்பதே இங்கு நம் சிந்தனைக்குரிய முக்கிய விடயமாகும்.

### ஆ. நாவலருக்குப் பிற்பட்ட சைவ இயக்கநிலை – முனைப்பாகப் புலப்படும் இரு அம்சங்கள்

நாவலர் காலத்தின் சைவ இயக்கமானது சைவச் சமூகத்துக்கு 'நல்லறிவுச் சுடர் கொளுத்தும்' நோக்கிலான செயற்பாடாக

வடிவம் கொண்டது என்பது மேலே நோக்கப்பட்டது. மேற்படி இயக்கச் செயற் பாடுகளில் சைவ சித்தாந்த உண்மைகள் பொது மனிதரை நோக்கி எடுத்துரைக கப்பட்டன. நாவலரின் எழுத்தாக்க முயற்சிகள் பலவும் அன்றைய தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு நிலையினரின் வாசிப்புத் தரங்களை யும் கவனத்திற் கொண்டனவாகவே அமைந்தன என்பதை முன்னரே நோக்கி யுள்ளோம். நாவலரின் கல்விக்கூட உருவாக்க முயற்சிகள் அவருடைய சமூகநோக்கை வெளிப்படை யாகவே உணர்த்திநிற்பன. நாவலர்கால இயக்கத்தின் இவ்வாறான செயற்பாட்டு நிலைகள் நாவலருக்குப் பிற்பட்ட வரலாற்றிலே வெவ்வேறு தளபரிமாணங் களை எய்தின என்பதே இங்கு நமது கவனத்துக்குரியனவாகும்.

இவ்வகையில், நாவலருக்குப் பிற்பட்ட கால ஈழத்துச் சைவ இயக்க வரலாற்றுச் செல்நெறியிலே முனைப்பாகப் புலப்படும் இரு அம்சங்கள் வருமாறு:

1. **சைவசித்தாந்த தத்துவம் எய்திய ஆய்வு நிலைப் பரிமாணம்**

2. **சைவசமய உணர்வு சமூகமட்டத்தை நோக்கிப் பரவலாக்கப்பட்டமுறைமையில் ஏற்பட்ட வளர்ச்சி**

நாவலர் சித்தாந்தம் சார்ந்த சைவமரபை முற்றுமுழுதாக நம்பிநின்றவர். அது சார்ந்த செய்திகளைத் தரும் மூலநூல்களைப் பதிவு(பதிப்பு) செய்து பேணுதலும் அம் மூலநூல்களிலிருந்து பெறப்படும் முக்கிய கருத்துகளை மக்களை நோக்கி எடுத்துரைப்பதுமே அவருடைய முக்கிய நோக்காகவும் செயற் பாங்காகவும் அமைந்தன.

நாவலருக்குப் பிற்பட்ட சூழலானது மேற்சுட்டிய அவருடைய செயற்பாட்டு நிலைகளுக்கு மேலாக மற்றொரு படிநிலை யை ஈழத்துச் சைவ இயக்கத்திடம் எதிர் பார்த்து நின்றது. அந்தப் படிநிலைதான் 'சைவசித்தாந்த தத்துவத்தை ஆய்வு நிலையில் விளக்கியுரைக்கும் நிலை' யாகும். இவ்வாறான எதிர்பார்ப்புக்கான பின்புலத்தை இங்கு சுருக்கமாகவேனும் சுட்டுவது அவசிய மாகிறது.

### இ. தத்துவ விவாதப் பின்புலமும் சைவ சித்தாந்த ஆய்வியலும்

இங்கு பின்புலம் எனச்சுட்டப்படுவது தமிழகத்தில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலவிய தத்துவ விவாதச் சூழலாகும். வேதாந்தச் சிந்தனைகள் மற்றும் மேலைத்தேய தத்துவங்கள் என்பவற்றுடன் சைவசித்தாந்தம் தன்னை ஒப்புநோக்கித் தன் சிறப்பியல்புகளை வெளிக்காட்ட வேண்டிய தேவையை இச்சூழல் ஏற்படுத்தியது.மேலும் வைணவ சமயத்துக்கு எதிரான விவாதங்களிலும் சைவம் ஈடுபட வேண்டியிருந்தது. ஏதிர்ப்புக்கான பின்புலத்தை இங்கு சுருக்கமாகவேனும் சுட்டுவது அவசியமாகிறது.

இவ்வாறான தமிழக விவாதச் சூழலுடன் ஈழத்தவர்களும் தொடர்புகொண்டிருந்னர். இவ்வாறு தொடர்பு கொண்ட ஈழத்தவர்களில் முக்கியமானவராக வரலாற்றரங்கில் கால் பதித்தவர் 'காசிவாசி' சி.செந்திநாதையர் அவர்கள் (1848-1924). யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள குப்பிளான் என்ற கிராமத்தைச சார்ந்த இவர், நாவலருடன் இணைந்து அவருடைய சைவ இயக்கத்தில் பணியாற்றி நின்றவர். பின்னாளில் இந்தியா சென்று காசிவரை தன் வாழ்க்கைத் தளத்தை விரிவுபடுத்திக் கொண்டவர். இவ்வாறான வாழ்வியல் தளவிரிவானது அவரை மேற்படி தமிழகத் தத்துவ விவாதச்சூழலில் இணைத்தது. அதன் தேவையை ஒட்டிச் சித்தாந்த தத்துவத்தின் ஆழ அகலங்களை நோக்கி அவர் நடைபயின்றார்.

இவர் சைவத்தின் சித்தாந்த தத்துவ மரபுக்கும் வடமொழியின் நால்வேத மரபுக்கும் உள்ள உறவுநிலை பற்றிச் சிந்தித்தவர். வேதாந்தச் சிந்தனை மரபுடன் சித்தாந்தச் சிந்தனைமரபானது முரண்பட்டு நிற்கும் முறைமைகளை நுனித்து நோக்கியவர். **தேவாரம் வேதசாரம் , சிவஞானபோத வசனாலங்கார தீபம், பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்** முதலிய இவருடைய ஆக்கங்கள் இவருடைய மேற்படி சிந்தனைகள், நோக்குகள் எனபவற்றின் ஆழத்தையும் அகலத்தையும் உணர்த்துவன. நாவலர் வழிநடத்திய சைவ இயக்கமானது அவருக்குப் பின் செந்திநாதையருடைய மேற்சுட்டியவாறான ஆக்கங்களில் ஒரு ஆய்வியல் பரிமாணத்தை எய்தியது. இவ்வாறான ஆக்கங்களின் உள்ளடக்கங்களை நுனித்து நோக்க முற்பட்டால் கலாநிதிப் பட்டத் தரத்திலான ஆய்வேடுகள் பலவற்றை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இவ்வாறு இவர் தொடக்கிய சைவ சித்தாந்தம் தொடர்பான ஆய்வியல் அணுகு முறையைச் சமகாலத்திலும் பின்னாளிலும் தொடர்ந்தோர் பலர். நமது காலப்பகுதியில் இந்த ஆய்வியலை முன்னெடுத்தவர்களுள் முக்கிய கணிப்புக்குரியவர் இலக்கிய கலாநிதி,

பண்டிதமணி ஆகிய சிறப்பு விருதுகளைப் பெற்ற ஏழாலையூர் மு.கந்தையா அவர்கள். (1917–2002). மெய்கண்ட சாஸ்திரங்களிற் புலப்பட்டு நிற்கும் சித்தாந்த உண்மைகளைச் சிவாகமங்கள் மற்றும், திருமுறைகள் முதலியவற்றுடன் ஒப்புநோக்கி விளக்கி யுரைக்கும் பாங்கில் தமது சித்தாந்த ஆய்வியலை முன்னெடுத்தவர் இவர்.

**சித்தாந்தச் செழும்புதையல்கள், சிவஞான சித்தித் திறவுகோல்** முதலான இவருடைய ஆக்கங்கள் சித்தாந்த ஆய்வியலுக்குப் புதிய வளம் சேர்த்தவையாகும். இவையும் பல ஆய்வேடுகளுக்கான பொருட்பரப்பு டையவையாகும்.

### ஈ. சைவத்தின் சமூக மட்டத்தை நோக்கி...கல்வித் திட்டத்தில் சைவ சமயம்

நாவலரால் சமூகமட்டத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடுத்தகட்ட வளர்ச்சிநிலை என்றவகையில் முதற் கவனத்துக்கு வருவது ஈழத்தில் சமயம் ஒரு கல்வித்திட்டமாக – பாடத்திட்டமாக – வும் வடிவம் கொண்ட நிலையாகும். சைவம், பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய நான்கு சமயங்களும் ஈழத்திலே ஆரம்ப வகுப்பு முதல்10 ஆம் வகுப்பு (க.பொ.த-சாதாரணதரம்) வரை முறைப்படியான பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன என்பதறிவோம். ஆரம்பவகுப்பு முதல் ஒவ்வொரு வகுப்பிலும் கற்கும் மாணவர்களின் உளவளர்ச்சிநிலைகளுக்கு ஏற்ப பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன. இதனால் அவ்வச் சமயங்கள்சேர்ந்த மாணவர்கள் தத்தம் சமய அடிப்படைகள் பற்றிய அறிவை முறையாகப பெற்றுக் கொள்ள முடிகிறது.

இவ்வாறான சமயக் கல்வியானது க.பொ.த. (உயர்தரம்) முதல் பண்பாட்டுக் கல்வியாக – 'இந்து நாகரிகம்', 'கிறிஸ்தவ நாகரிகம்' முதலியனவாக - வடிவங் கொள்கிறது. இவ்வாறான கல்வித்திட்டச் செயற்பாடானது சமய அறிவை மக்கள்மயப்படுத்தும் நோக்கில் அமைந்தது என்பது வெளிப்படை. சைவசமயத்தைப் பொறுத்த வரை இவ்வாறான சமயக்கல்வித்திட்டமும் பாடநூலாக்கமும் ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களின் **சைவ வினாவிடை**கள் மற்றும் **பாலபாட**ங்கள் **திருத்தொண்டர் பெரிய புராண வசனம்** முதலியவற்றின் தொடர் ச்சியும் வளர்ச்சியுமாக அமைந்தனவாகும். எனவே நாவலர் வழிநடத்திய இயக்கச் செயற்பாடானது கல்விநிலையில் சமூகமட்டத்தை நோக்கித் திட்டப்பாங்குடன் விரிந்து சென்றமை வெளிப்படை.

சைவ மாணவர்கள் தமது சமயநெறியைப் பேணிக்கொண்டே உலகியல் சார்ந்த பாடங்களைக்கற்க வாய்ப்புக் கிடைக்க வேண்டு மென்பது நாவலரின் முக்கிய குறிக்கோள்களி லொன்றாகும். அவர் மேற் கொண்ட கல்விக்கூட உருவாக்க முயற்சிகளின் பிற்கால வியத்தகு வளர்ச்சிநிலையை ஈழத்தின் பல பாகங்களிலு முள்ள சைவப் பாடசாலை களும் இந்துக் கல்லூரிகளும் காட்சிப் படுத்துகின்றன.

நாவலர் வழியில் வந்தவரான 'சைவப்பெரியார்' சு. சிவபாதசுந்தரனார் அவர்கள் (1877-1953) **சைவ போதம் 1,2** மற்றும் **திருவருட்பயன் விளக்கவுரை** முதலிய நூல்களை எழுதி மேற்படி சைவசமய பாடத் திட்டத்தை வளம்படுத்தினார் என்பது இங்கு குறிப் பிடப் படவேண்டிய முக்கிய செய்தியாகும். 'இந்து நாகரிகம்' என்ற தலைப்புடன் உருவான உயர்கல்விப்பாடத்திட்டமானது பல்கலைக் கழக நிலையில் கலாநிதிப் பட்ட ஆய்வு வரை பெருவளர்ச்சி பெற்றுள்ளது என்பதும் இத்தொடர்பில் இங்கு சுட்டப்பட வேண்டிய முக்கியத்துவ முடையதாகும்.

இவ்வாறு சைவசமயம் கல்விசார்ந்த நிலையில் மக்கள் மயப்பட்டுவந்த வரலாற்றின் ஊடாக உருவான ஒரு 'சமய அறிஞர் பரம்பரை'யே நாவலர்காலச் சைவ இயக்கத்தை இன்றுவரை முன்னெடுத்து வந்துளது என்பது இங்கு சுட்டத்தக்கது. நமது காலகட்டத்தில் வாழ்ந்து நிறைவுபெற்ற சைவப் பெரியார்களான 'ஆத்மஜோதி' நா.முத்தையா மற்றும் 'சிவத்தமிழ்ச் செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி முதலியவர்கள் மேற்படி அறிஞர்மரபில் நடுநாயகமாகத் திகழ்ந் தோராவர் என்பது இங்கு நினைவிற் கொள்ளப்பட வேண்டிய வரலாற்றுச் செய்தியாகும்.

இவ்விருவரும் நாவலர் மரபைப் பேணிநின்ற பேருரையாளர்கள் என்பதும் ஈழத்திலும் ஏனைய நாடுகளிலும் சைவப்பேருரைகள் நிகழ்த்திப் புகழ்நாட்டியவர்கள் என்பதும் பொதுவாக அறியப்பட்ட செய்திகளாகும். நா.முத்தையா அவர்கள் இதழியல் துறைசார்ந்து - **ஆத்மஜோதி** என்ற இதழைப் பலகாலம் தொடர்ந்து வெளியிட்டு - ஆன்மிகப்பணி ஆற்றியவர் என்பது இத்தொடர்பில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய செய்தியாகும்

### உ. ஆலயம் அறநிலையமாக...

நாவலருக்குப் பிற்பட்ட சைவஇயக்க வரலாற்றில், சமூகமட்டத்தை நோக்கிய

செயற்பாடுகளில் அடுத்த கட்ட வளர்ச்சிநிலை என்றவகையில் சுட்டப் படவேண்டிய முக்கிய நிகழ்வு 'ஆலயம் என்பது ஓர் அறநிலையம்' எனத்தக்க வகையில் நிகழ்ந்துள்ள வளர்ச்சியாகும். ஆலயமானது ஆகமவிதி முறைப்படியான கிரியைகள் நிகழுமிடமாகவும் பக்தியுணர்வுக் கானசூழலாகவும் இருக்கவேண்டும் என்பது பொதுவாக எல்லோரும் ஒப்புக்கொள்ளும் அடிப்படை அம்சமாகும். நாவலருடைய பெருவிருப்பமும் இதுதான். இதனை அவரு டைய எழுத்துகள் பலவற்றில் நோக்கலாம். அவர் வழிநடத்திய இயக்கத்தின் இன்றைய வரலாறானது, மேற்படி அடிப்படை அம்சத்து க்கு மேலாக, **'ஆலயம் ஓர் அறநிலையம்'** என்பதான கருத்து நிலையை நோக்கி வளர்ந்துள்ளது. இது சைவத்தின் சமூகம் நோக்கிய இயங்குநிலையின் வளர்ச்சி என்பது வெளிப்படை. இதற்குத் தக்கதொரு முதன்மைச் சான்றாகத் திகழ்வது ஈழத்தில் தெல்லிப்பழையிலுள்ள துர்க்கையம்மன் ஆலயம் - துர்க்காதேவி தேவஸ்தானம் - ஆகும்.

மேற்படி ஆலயத்தின் வருவாயானது அதன் வழிபாடுசார் செலவுகள், பௌதிகக் கட்டமைப்புகள் மற்றும் பணிபுரிவோருக்கான ஊதியம் ஆகியவற்றுக்குச் செலவிடப் படுவதற்கு அப்பால், சமூகத்தின் நலிந்த பிரிவினரின் நலங்காக்கவும் மருத்துவத் துறைசார் கட்டமைப்புகளை மேம்படுத்தவும் மற்றும் பல சமூகநலச் செயற்பாடுகளுக்கும் திட்டப்பாங்கான முறையில் செலவிடப்படு கின்றது. ஆலயமே சிறார்களுக்கான காப்பகம், மகளிர் இல்லம் மற்றும் நூலகம் முதலிய சமூகநல நிறுவனங்களை நடத்தி வருகின்றது என்பதும் இங்கு சுட்டப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். கடந்த அரை நூற்றாண்டுக் காலப்பகுதியில் மேற்படி ஆலயம் எய்திய சமூகநிலைப் பரிமாணம் இது.இவ்வாறான சமூகநிலைப் பரிமாணத்தை அவ்வாலயம் எய்துவதற்கு இயக்கு விசையாக அமைந்து நெறிப்படுத்தி நின்றவர் மேலே நாம் நோக்கிய 'சிவத் தமிழ்ச்செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களாவர். சமயப் பேருரையாளர் என்ற வகையில் சைவச் சமூகமத்தியில் உயரிய கணிப்பைப் பெற்ற அவர் ஆலய நிர்வாகி என்ற வகையில் மேற்படி ஆலயத்தின் அறங்காவற் பொறுப் பேற்று நிகழ்த்திய பெருஞ்சாதனை இது. ஈழத்திலுள்ள பிற சைவாலயங்களும் புலம்பெயர் நாடுகளிலுள்ள சைவாலயங்களும் கவனத்திற்கொள்ளவும் பின்பற்றவும் வேண்டிய முக்கிய செயற்பாங்கு இது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இன்று கனடா முதலான புலம்பெயர் நாடுகளில் ஆலயங்க ளின் அறங்காவற் பணி புரிவோர் கருத்துட் கொள்ளவேண்டிய முக்கிய செய்தி இது.

**நிறைவாக...**

ஈழத்துச் சைவம் நாவலருக்குப் பின்னர் இயக்கநிலையில் அடைந்துள்ளவளர்ச்சி யானது ஒரு முழுநூலாக எழுதப்பட வேண்டிய விடயப்பரப்புடையது. அவ்வாறாக விரிவாக எழுதப்படக் கூடிய வரலாற் றைக் கோடிட்டுக்காட்டும் ஒரு சுருக்கமான அறிமுகக் குறிப்பாக மட்டுமே இக்கட்டுரை அமைகிறது.

------------- 29-06-2011--------

# கூட்டுப் பிரார்த்தனை

## செல்வி கார்த்திகா மதியழகன்

அடிப்படைத் தேவைகளுக்குமேல் நாம் எதற்கு ஆசைப்படுகிறோம், ஏன் ஆசைப்படுகிறோம்? என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனியான இடத்தில் அமர்ந்து இக் கேள்விகளை நமக்கு நாமே எழுப்ப வேண்டும். ஓய்வாக காலாற நடக்கும்போதோ, தனிமை கிடைக்கும்போதோ நாம் சிந்திக்க வேண்டும்.

மனிதனின் உயர்நிலைத் தேவைகள் என்று சில இருக்கின்றன. அவற்றில் மனிதன் பேரின்பம் காண்கின்றான். உடல் பொறிகளால் காணும் நிறைவை விட அதிகமான நிறைவையும் மகிழ்ச்சியையும் மனிதன் பெறுகிறான்.

**பிரார்த்தனை** - இப் பிரபஞ்சத்தின் மூலாதாரப் பொருளுடன் ஐக்கியமாதல், கூட்டு வழிபாடு இவற்றின் மூலம் நமது உயர்நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முயல்கிறோம். பிரார்த்தனையின் மூலம் பிரபஞ்சத்தின் மாபெரும் சக்தியுடன் நாம் உறவு ஏற்படுத்திக் கொள்கிறோம். அந்த உறவு நம்மைச் சுற்றியிருப்போரிடம் நாம் காட்டும் அன்பாகவும், பரிவாகவும், உதவியாகவும், இனிமையாகவும் நம்மிடமிருந்து புறப்படுகிறது.

மகாத்மா காந்தி தனக்குத் தானே பிரார்த்தனை செய்தார். அத்துடன் வாராந்திர வழிபாட்டுக் கூட்டம் நடத்தினார். ஞானிகள் கூறுகிறார்கள் "எல்லோரும் கூட்டமாகச் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழிபாடு செய்யும்போது, அந்த சக்தி கூட்டுச் சக்தியாக எழுகிறது. அந்த வலிவுள்ள கூட்டுச் சக்தி, எங்கே அந்தக் கூட்டத்தில் அதிகப் படியான தேவையுள்ள மனிதன் இருக்கிறானோ அவனிடத்து ஓடிச்சென்று உதவுகிறது." கூட்டு வழிபாடு மற்றோர் வழியிலும் நன்மை பயக்கிறது. எல்லோரும் பிரார்த்திப்பதற்காகக் கூடி இருக்கிறோம் என்ற நினைவு பிரார்த்தனைச் சூழ்நிலை நம்மையும் பிரார்த்தனைக்காகத் தயார் செய்து, அதில் ஈடுபடுத்துகிறது.

பிரார்த்தனைக்கு முன்னோ, பின்னோ பல இடங்களில் பாடுகிறார்கள்; பஜனை செய்கிறார்கள்;

இசை நம்மை பிணைக்கும் தன்மை கொண்டது. நமது ஆழ்மனத்தை எளிதில் ஊடுருவும் தன்மை கொண்ட நாதம் அதில் இருக்கிறது. காரண காரிய அறிவைப் புறந்தள்ளிவிட்டு, நம்மை எங்கோ ஒன்றிவிடச் செய்யும் வலிமை இசைக்கு உண்டு. அதனால்தான் மகாத்மா காந்தி 'ரகுபதி ராகவா' என்று பஜனைப் பாட்டிலே ஆழ்ந்துபோனார். ஆத்ம தரிசனத்துக்கு முழுக் கூட்டத்தையும் ஒன்றாக அழைத்துச் செல்ல பஜனை பாடல்களைக் கருவியாக உபயோகித்தார்.

கிருஸ்துவ ஆலயங்களிலே சாமியாரது உபதேசத்துக்கு முன்னும், பின்னும் எல்லோரும் கூட்டமாக பஜனை கீதங்களை இசைக்கின்றனர். நம் மனத்தை ஒரு முகப்படுத்த உதவும் அரிய சாதனம் இந்த பஜனைப் பாடல்கள். கூட்டு வழிபாட்டிலிருந்து வந்தவர்களுடன் பேசிப் பார்த்தால் அன்பு, இனிமை, சாந்தம், உதவும் பண்பு எல்லாம் எப்படி அவர்களிடம் அந்த நிலையில் மேலோங்கி நிற்கிறது என்பது புலப்படும்.

இப்படிக் கூட்டுவழிபாடு செய்யும் மக்கள் கூட்டம் ஒன்று 'எமிஷ்' என்ற பெயரால் அமெரிக்காவில் பிலடெல்பியா நகரில் இருக்கிறது. அவர்கள் அனைவரும் குடும்பமாக, 'மற்ற குடும்பத்திற்காக வீடு கட்டவும் நிலம் உழவும்' என்று பலவிதங்களில் சமுதாயத்திற்காக வாழ்கிறார் கள். எமிஷ் மக்கள் உலகில் ஒரு சிறிய - ஆனால், பெரிய தன்னிறைவு கொண்ட கூட்டம். தனிமனிதப் பிரார்த்தனையின் போதோ, கூட்டு வழிபாட்டின் போதோ, சிலர் கண்களில் நீர்வழிகிறது. சிலர் விக்கி விக்கி அழுகின்றனர். மனித மனம் தன்னைத்தானே திருத்திக் கொள்ளும் செயல் இது. வேண்டாத அழுக்குகளை நீக்கிப் பரிசுத்தம் பெறும் நேரம் அது. மனிதன் இதன் மூலம் புதிய மனிதனாக - அன்பு, பொறுமை, சாந்தம் நிறைந்த மனிதனாக வெளி வருகிறான். அவன் குடும்பத்தில் இனிமை ஒளி வீசுகிறது. பிறரது உரிமைகளை மதிக்கிறான் அவன், பிறரது உரிமைகளை அபகரிப்பதைப் பற்றி அவன் கனவிலும் எண்ணுவதில்லை.

பிரார்த்தனை, பஜனை மனிதனைச் சுத்தப் படுத்துகிறது; புனிதமாக்குகிறது; பிறரை மதிக்கவும் பிறருக்கு உதவவும், நம்மைப் பக்குவப் படுத்துகிறது. தனித்து தியானம் செய்ய முடியாதபோது கூட்டு வழிபாட்டில் - பஜனையில் ஈடுபடுங்கள். நல்லெண்ணம் இருக்கிறதே அது ஒரு சக்தி. 'பிறர் நலமுடன் வாழ வேண்டும்' என்றும் நாம் எண்ணும்போது அந்த சக்தி நம்மிடமிருந்து புறப்பட்டு, அந்த நபரை அடைகிறது. அந்த சக்தி அந்த மனிதருக்குத் தெம்பூட்டுகிறது. மனவலிமை தருகிறது.

அந்த மனவலிமை உடல் நோயைக் குணப்படுத்தவல்லது. அந்த மனவலிமை அவர்கள் வாழ்வில் வாய்ப்புக்களையும் வளத்தையும் ஏற்படுத்த வல்லது என்று டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி அழகாகக் கூறியுள்ளார்.

எண்ணம் என்ற சக்தி, பிரார்த்தனையின் மூலம் - கூட்டுவழிபாட்டின் மூலம் நன்மை விளைக்கிறது. ஆலயங்களில் அந்தணர்கள் நடத்தும் ஹோமம், சாம வேதம்வரை அனைத்தும் நன்மை நாடி செய்யப்படும் செயல்கள். அவைகளைப்பற்றி அறியாதவர்கள் தான் அவற்றைப் பற்றி குறைத்து மதிப்பிடுகிறார்கள். "தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்'' என்று திருவள்ளுவர் இறைவனை மனம் வருந்தி வணங்கினால் கிடைக்காதது எதுவும் இல்லை என்று கூறுகின்றார். இவற்றுக்கமைய நாமும் ஆலயம் செல்வோம், இறைவனைத் துதிப்போம், பஜனை கீதங்களை ஒலிப்போம், இறையருள் பெறுவோம்.

**இன்றே செல்வோம் வைத்தீஸ்வரம்!**

# Pirathosha Viratham

Among the Siva Virathams, Pirathosha Viratham is stated to be exceptional. Siva Devotees fast on Pirothosham during 'Thiriyothasi Thithi' which generally comes 2 days before New moon day (Amaavaasai) and Full Moon Day (Pooranai) twice a month.

When Thevarkal and Asuras churned Milky ocean (Thiruppaatkadal) using Manthara mount as Churn, and Vasuki snake as rope, the tired snake spat a dangerous poison, called 'Alakaala Visham'. The frightened Devas and Asuras collectively prayed to Lord Siva to protect them and the world from this great danger. The loving Lord Siva swallowed the poison to save his devotees from the great danger. Sakthy immediately held his throat and the poison was thus retained in his throat and his neck appeared blue in colour. Hence, the name Neelakandan for Lord Siva.

Thevar and Asurar continued to churn the Milky ocean and finally Amirtham was found.

After enjoying the Amirtham Thevarkal forgot to worship Lord Siva and started enjoying themselves. Later when they realized their folly, they went to Mount Kailas on Thrayodashi day to worship Lord Siva and prayed for his forgiveness.Lord Siva forgave them and performed his dance for them between the horns of Nandi Thevar to the extreme delight of Thevarkal. This was witnessed by all the Thevarkal and Deities. This period of time, when all this happened is known as the Pirathosha Time of the Thrayaodashi day.

Observing Pirathosha Viratham and worshipping Lord Siva during Thirayothasi Thithi shall yield Virtue, Wealth, Pleasure and Home, the most important four 'Purusharthangal' to the devotees.

In Sivan Temples, Pooja with Abishekam is performed for Nandhi Thevar and Lord Siva during the Pirathosha Period of the day concerned.

Pirathosha day fasting shall be started on a Saturday Pirathosha day. When yours and your family's Stars (Natshathiram) and Names are provided, even when you are unable to attend the Pirathosha Pooja, your names & Stars will be pronounced at the Pooja. Devotees are also provided with 'Pirasatham' blessed by Siva-Sakthy as dinner on Pirathosha days. Kindly contact Temple office for more details.

# தமிழ்ச் சமய நெறி

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ் காலத்தால் மூத்த மொழி. கருத்தாலும் முதிர்ந்த மொழி. தமிழில் இன்றுள்ள முதல் நூல் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல். தொல்காப்பியர் காலம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. இலக்கியம் தோன்றி வளர்ந்த பின்தான் இலக்கணம் தோன்றும் என்பது மொழிநூற் கொள்கை. தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கண நூலைத் தரத்தக்க அளவுக்கு தொல்காப்பியத்திற்கு முன் இலக்கிய உலகம் சிறந்து விளங்கியிருக்க வேண்டும். மிகச் இலக்கியங்களைக் காணக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழி சிறந்திருந்ததென்றால், அம் மொழியைப் பேசி வாழ்ந்த மக்கள் சிந்தனையிலும் செயலிலும் மிக வளர்ந்திருக்க வேண்டும் என்பது உய்த்துணரத் தக்கது. உலகில் உள்ள எல்லா மொழிகளுமே எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் பெற்றுள்ளன. அவற்றுள்ளும் எழுத்து, சொல் இலக்கணங்களில்கூட முழுநிலை பெற்று விளங்கும் மொழிகள் சிலவே. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்ட பெருமை உலக மொழிகளில் தமிழுக்கே உண்டு.

வாழ்வதெல்லாம் வாழ்க்கையல்ல. வாழ்க்கை அருமையானது. பயனுடையது. இன்பத்துக் குரியது என்ற உணர்வுகளுடன் நெறிகளோடு இசைந்து வாழ்தலே வாழ்க்கை என்று தமிழ் வலியுறுத்துகிறது. ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற காதல் வாழ்க்கையும், அவர்களே சமுதாயத்துக்குப் பயன்படுமாறு வாழும் கற்பு வாழ்க்கையும் அக வாழ்க்கை. சமுதாய வரம்புக்குள் அடங்கி, அரசு வகுக்கும் சமுதாயப் பொது விதிகளுக்கு இணங்க வாழும் வாழ்க்கை புற வாழ்க்கை. சமுதாயத்துக்கு உறுப்பாகச் செய்வன செய்து, துய்ப்பன துய்த்து வாழும் வாழ்க்கை அக வாழ்க்கை. இது தொல்காப்பியம் காட்டும் முடிவு. இவ்விலக்கண நூல் தோன்றுவதற்கு முன்பே, தமிழ்மொழி பேசும் மக்கள் சிறந்த வாழ்க்கையுடையவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆயினும், காலத்தின் விளைவுகளால் இங்கும் அங்குமாகத் தவறுகள் தலை காட்டத் தொடங்கிய உடனேயே வாழ்க்கையைச் செப்பம் செய்யும் கவலை தமிழ் குடியினருக்குத் தோன்றியதின் விளைவு, தொல்காப்பியத்தின் பொருளதிகாரம்.

வாழ்க்கை, நெறிமுறைகளுக்கு இசைந்தவாறு அமையவேண்டும் என்ற கவலை அரும்பும் நிலையே சமயத்தின் தோற்றம். இந்த நிலையிலேயே சமயம் கால் கொள்கிறது. அங்ஙனமாயின் தொல்காப்பியத்திற்கு முன்பு, தமிழருக்குச் சமயம் இல்லையா? என்ற வினாத் தோன்றும். தொல்காப்பியத்திற்கு முன்பும் தமிழ் மொழி பேசிய மக்கள் இறை வழிபாடு செய்து வந்துள்ளனர். அவர்களுடைய வாழ்க்கையில் ஒழுங்குகளும், ஒழுக்கங்களும் சமயநெறிக் கோட்பாடுகளும் இருந்தன. ஆயினும் செப்பமாக வடிவமைப்புப் பெற்றது தொல்காப்பியர் காலத்தில் தான். சமயம் என்பதற்குச் செப்பமுறச் செய்யப்பெற்றது, சார்ந்து நின்று ஒழுகுவோரைச் செப்பமுறச் செய்வது என்பது விளக்கம். சமயம் என்பது கடவுளை வழிபடும் நிலையை மட்டும் வற்புறுத்துவதன்று: வாழ்க்கை முழுவதையும் தழுவி நிற்பதே சமயம்.

தமிழ்மொழி, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்த முறை நம்பிக்கைக்குரியது: நல்லெண்ணத்தின் பாற்பட்டது: அறிவார்ந்தது. தமிழ்ச் சமயத்தில் நம்பிக்கைக் கொள்கை உண்டு. ஆனால், நம்பிக்கை மட்டுமேயன்று. தமிழ்ச் சமயநெறி உலகை, உயிர்க் குலத்தை, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து கண்டு காட்டும் முடிவுகள் சிறப்புடையன: அறிவுக்கு விருந்தாய் அமைவன. உயிர்கள் அறியாமையிலிருந்து விலக, துன்பத் தொடக்குகளிலிருந்து விலக, சமயம் துணை செய்வது. தமிழ்ச் சமயம் உயிரை நம்புகிறது. உயிர், இல்பொருளன்று: பிறிதொன்றன் விளைவுமன்று. உயிர், கடவுளுமன்று: கடவுளின் ஒரு பகுதியுமன்று. உயிர், கடவுளின் பிரதிபலிப்புமன்று: அழிக்கக் கூடியதுமன்று. உயிர் கடவுளின் கைப்பாவையுமன்று. உயிர் அறிவுப்பொருள். ஆயினும் உயிர் முற்றாக அறிந்த அறிவுப் பொருளுமன்று. உயிர், ஒன்றல்ல பலப்பல.

அதன் பொதுவகை ஆறு வகையே! இப் பாகுபாடு அறிவின் அடிப்படையில் அமைந்தது. உயிர்கள் தோன்றியனவும் அல்ல: அழியக்கூடியனவுமல்ல. உயிர்களுக்குப் பிறப்புமில்லை. உயிர்கள் உடலைத் துணை கொண்டு அகக்கருவிகள், புறக்கருவிகள் வாயிலாக உலகத்தோடு தொடர்பு கொள்ளுதலையே பிறப்பு என்கிறோம். இது தமிழ்ச் சமயத்தின் உயிரைப்பற்றிய உயர்தனிக் கொள்கை.

உயிரின் இயற்கை வளர்தல்: மாறுதல். உயிர்களின் அடிப்படை இயல்பு துய்ப்பது. துய்த்தலும் இன்புறுதலும், அவ்வழி வளர்தலும், அன்புநிலையை எய்துதலும் உயிர்களின் அன்பு வழிப்பட்ட நோக்கம். உயிர்கள் பிறத்தல், இறத்தல் என்பது நேரடியாக உயிர்களைப் பற்றியதல்ல. உயிர், தன்னுடைய வளர்ச்சிக்குத் துணையாக உடலைத் துணை கொண்டு அறிகருவிகள், செய்கருவிகள் வாயிலாக உலகத்தோடு பொருந்துதலும் நீங்குதலுமே பிறப்பு, இறப்பு ஆகும். இங்ஙனம் அறிகருவிகளையும் செய்கருவிகளையும் உடைய உடம்பினோடு உயிரைப் பொருத்திப் பிறப்பு வாழ்க்கையொடு இணைத்தலே படைத்தலாகும். உடலைப் பெற்ற உயிர்கள் துய்பனவும் உய்ப்பனவும் பெற்று வளரச் செய்தலே காத்தலாகும். வாழ்க்கையில் துன்பச் சுமை குறைவதற்காகவும், புத்துணர்ச்சியோடு வளர்வதற்காகவும், மறைக்கத்தக்கனவற்றை மறைத்தலே மறைத்தலாகும். உயிர்களின் இன்ப வாழ்க்கைக்கொவ்வாத தீமையை அழித்தலே அழித்தலாகும். வளர்ந்துவரும் உயிர்கள் என்றும் இன்ப நிலையில் அமர்ந்து வாழச் செய்தல் அருளுதலாகும். இவ்வாறு உயிர்களின் வாழ்நிலைகளை ஐந்து நிலைகளாகவும், இவ்வைந்து நிலைகளிலும் உயிர்களுக்குத் துணை செய்யும் ஐந்தொழில்களே கடவுளின் ஐந்தொழில்கள் என்றும் தமிழ் கூறும்.

உயிர்கள் உய்யும் நலம் நோக்கி உடுத்துக் கொண்டதே உடம்பு. 'உடு' என்ற முதனிலையிலிருந்தே 'உடம்பு' என்ற சொல் பிறக்கிறது. உயிர், அறியும் இயல்பினது. உயிர் ஒரு அறிவுப் பொருளே! ஆயினும் இயற்கையிலேயே அறியாமையில் உயிர் இணைந்து இருக்கிறது. உயிர் அறியாமை யினின்றும் விலகி அறிவைப் பெறுதலே வாழ்க்கையின் நோக்கம். உயிர், அறிவு மயமாதலே, உயிரின் முதிர்ந்த வளர்ச்சி நிலை. உயிர், அறியாமையை நீக்கிக்கொண்டு அறிவைப் பெறுவதற்கே பேரறிவாகிய கடவுளை நாடுகிறது: துணையாகப் பெறுகிறது. வளர்ந்த அறிவின் இயல்பு வாழ்வித்தலே. வளர்ந்த அறிவு, சிற்றெல்லைகளைக் கடந்தது. அதற்குத் தற்சார்பான குறிக்கோள் இராது. எனவே உலகுயிர்கள் அனைத்தையும் தழுவி நின்று மெல்ல அவற்றை அறியாமையிலிருந்து நீக்கி அறிவில் பூத்துக் குலுங்கச் செய்தலும் அறிவில் இன்புற்றமரச் செய்தலுமே இறைவனின் குறிக்கோள். இது தமிழ் சமயத்தின் சாரம்.

தமிழர் சமயம் இன்று தோன்றி வளர்ந்துள்ள பொருள்முதல் வாதக் கொள்கைக்கும் ஈடு கொடுக்கும் வகையில் அமைந்த சமயமாகும். ஏன்? அக நிலைக் கருத்துமுதல் வாதம் என்று சொல்லப்படுகின்ற கொள்கை, தமிழ்ச் சமயத்திற்கு முரணானது. இக் கொள்கையுடையார் பொருள்களே இல்லை: எல்லாம் கருத்துக்களின் பிரதிபலிப்பே என்பர். இது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று. அடுத்து, புறநிலைக் கருத்து முதல் வாதக் கொள்கை. இக்கொள்கை யுடையார் உயிர் என்று ஒன்று இல்லை. 'பரமான்மா' என்று சொல்லப்படுகின்ற கடவுளின் ஒரு பகுதியே ஆன்மா என்பர். பரவெளியாகிய ஆகாயத்தையும் குடத்துக்குள் உள்ள ஆகாயத்தையும் ஒப்புமை காட்டுவர். இவ்விரண்டிற்கும் பொருள் வேறுபாடில்லாத போதும் குடத்திற்குள்ளிருப்பதன் காணமாக ஏற்பட்ட தன்மை வேறுபாட்டை அவர்கள் அறிகிலர். இக் கொள்கையினால் அவர்கள் 'நானே கடவுள்' என்று தருக்கித்திரியும் இயல்பினராகின்றனர். அது மட்டுமா? உலகம் என்ற ஒன்று இல்லை. துய்பனவும் இல்லை. உய்ப்பனவுமில்லை: எல்லாம் வெறும் மயக்கம் என்பர். உலகம் பொய்யன்று: உயிரும் பொய்யன்று. எனவே, இந்தப் பொய்மைக் கொள்கை மயக்கத்தில் பிறந்தது. மயக்கத்தில் ஆழ்த்துவது. இக் கொள்கை பொருள் முதல் வாதத்தின் முன்னும் தமிழ்ச் சமயத்தின் முன்னும் நிற்க முடியாது. புறநிலைக் கருத்து முதல்வாதிகள் கடவுளை நம்புகிறவர்கள். உலகிற்கும் உயிர்களுக்கும் புறத்தே கடவுள் உண்டு. அது முன்னே தோன்றியது: உயிர் உலகம் எல்லாவற்றையும் அக் கடவுளே படைக்கிறது என்ற கொள்கையினர் இவர்கள். இவற்றுள் -

கடவுள் உண்டு என்ற கொள்கையையும் அது வளர்ந்த அறிவினது என்பதையும் தமிழ்ச் சமயம் ஒத்துக் கொள்கிறது. ஆனால், உயிர்களும் கடவுளைப் போல் என்றும் உள்ளவை. உலகு, இறைவனின் செயல் வழியது. உலகு, முகிழித்து விரிவதற்குக் காரணமாக – முதற்களமாக அமைந்துள்ள மாயையிலிருந்து முகிழ்த்ததேயாம். அதாவது தோன்றிதேயாம் என்பது தமிழ் சமயம் உயிர்கள், கடவுளால் படைக்கப்பட்டன என்றால் உயிர்களின் குறை நிறைகளுக்கும் இன்ப துன்பங்களுக்கும் யார் பொறுப்பு? குறைவிலா நிறைவு, கோதிலா அமுது, நன்றுடையான், தீயதில்லான், இன்பமுடையான், துன்பமில்லான் என்று விளங்குகின்றனவாகிய பரம்பொருளால் குறைகளுடைய பொருள் – உயிர் படைக்கப்பட்டது என்று கூறுவது கடவுட் கொள்கையையே குறை படுத்துவதாகும். இயற்கையின் பரிணாம வளர்ச்சி, குறைகள் நிறைகளாவதேயாம். நிறைவுகள், குறைகளாவ தல்ல. எனவே, உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டன அல்ல என்ற தமிழ்க் கொள்கை – உயிர்கள் உற்று அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் கடவுள் பொறுப்பாக மாட்டார். அவைகளின் செயற்பாடே அவற்றுக்குக் காரணம் என்ற தமிழ்க் கொள்கை – பொருள்முதல் வாதத்தினை ஈடு கொடுத்து நிற்கின்ற சிறப்புடைய கொள்கை.

தமிழ்சமயம் வாழ்க்கையைப் பொய்மை என்றும் கூறுவதில்லை: வெறுத்து ஒதுக்குவதுமில்லை. தமிழ்ச்சமயம் வாழ்வாங்கு வாழ வலியுறுத்து வதேயாம். தமிழ்ச் சமயத்தின் கொள்கை, செயல்கள் மட்டுமே பயன் தருவன அல்ல: சிந்தனை இன்றியமையாதது: செயல்களின் நோக்கமே அளவைக்குரியது என்பதாகும். தமிழ்ச் சமயம் இயற்கையோடிசைந்தது. அது இல்லற வாழ்க்கைதான் உயர்ந்தது என்றோ, பறை சாற்றுவதில்லை. எந்த வாழ்கையாயினும் நெறிமுறைகளிற் சிறந்து வாழ்வாராயின் இன்புறுவர் என்பதே தமிழ்ச்சமயக் கொள்கை.

என்நெறியில் நின்றாலும் எத் தொழிலைச் செய்தாலும் சிந்தனையும் செயலும் சிறந்து இருக்குமானால் சிறப்புடையதேயாம். செம் பொருளைக் காணத் துணை செய்வதேயாம். துய்த்தல், தூய இன்பத்திற்குத் தடையன்று. ஆனால் மற்றவர் துய்த்தலுக்கு இடையூறாக, மற்றவர் துய்க்க வழங்காமல் தானே துய்க்க ஒருப்படுதல் தமிழ் நெறிக்கு முரணானது. எந்த வகை வாழ்க்கையாயினும் துய்ப்பித்தல் குறிக்கோளாக இருக்க வேண்டும். அங்ஙனம் வாழும் வாழ்க்கை, தமிழ் வாழ்க்கை. இம் மண்ணிலே வளர்ந்த நிலையில் இன்ப அன்பினைத் துய்த்து வாழ முடியும் என்ற நம்பிக்கையுடையது தமிழ்ச்சமயம். உயிர்கள் ஞான மயமாகி இன்ப அன்பினில் தங்கித் திருவருளைத் துய்த்து இன்புறுதலே வீடு! இங்ஙனம் வளர்ந்த தமிழ்ச்சமயம் இதுவரையில் உலகில் தோன்றி தத்துவ இயல்களில் சிறந்ததாக, முடிந்த முடிபாக விளங்கி வருகிறது.

இது சமய நெறியை, நாம் தமிழ்ச்சமயம் என்று குறிப்பிட்டாலும் இந் நெறி உலகப் பொது நெறி. தமிழ் மொழிச் சிந்தனையாளர்களிடம் தோன்றி வளர்ந்ததால் தமிழ்ச் சமயமாயிற்று. ஆனால் தத்துவச் சிறப்புகளாலும், கொள்கை உயர்வாலும், நடைமுறை வாழ்வியலுக்கு இசைந்திருப்பதாலும் எல்லா வேறுபாடுகளையும் கடிந்து ஒதுக்குத லாலும் இத் தமிழ்ச்சமய நெறி உலகப் பொது நெறியாதற்குத் தகுதியுடையது. இந்நெறி உலகப் பொது நெறியானால் கடவுள் நெறியின் பெயரால் ஒரு குலம் தோன்றும்: சமநிலைச் சமுதாயம் மலரும்: வாழ்க்கை, தன்னம்பிக்கையால் ஆள்வினையால் விரிவடையும். இன்பமே என்நாளும் துன்பமில்லை என்று முழங்கி மக்கள் வாழ்வர். பெண்மை பெருமைப் படுத்தப் பெறும். வழுவிலா மனையறம் சிறந்து விளங்கும். பாரம் ஈசன் பணியே எனக் கண்டு அந்தணர் வாழ்வர். தமிழ்ச்சமய நெறி கால் கொள்ளும். திசையெல்லாம் ஒரு புதிய சமுதாயம் அமைந்து விளங்கும்.

*********

# என்னே விதியின் பயன்?

கடவுளைத் தனித்துணைவன் என்று கூறிய மாணிக்கவாசகப் பெருமான் தனக்குக் கடவுள் உண்டு என்னும் அறிவின் தெளிவு அரும்பியதை அழகாகச் கீழ்வருமாறு சொன்னார்.

**"ஈர்க்கு இடைபோகா இளமுலை மாதர்தம்**
**கூர்த்த நயனக் கொள்கையில் பிழைத்தும்**
**பித்த உலகர் பெரும்துறைப் பரப்பினுள் மத்தக்**
**களிறு என்னும் அவாவிடைப் பிழைத்தும்**
**கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்**
**செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்**
**நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்**
**புல்வரம்பு ஆய பல்துறை பிழைத்தும்**
**தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி..."**

அவருடைய அனுபவம் நமக்கு முன் உதாரணம்.

நாமும் கனடாவில் கோவிலுக்குப் போவதற்கு முன்னால்..

**"வேலை என்னும் வெம்மையில் பிழைத்தும்**
**ஊதியம் என்னும் உழைப்பில் பிழைத்தும்**
**வாகனம் என்னும் வண்டிகள் பிழைத்தும்**
**சிவப்பு மஞ்சள் பச்சை என்னும் விளக்குகள் பிழைத்தும்**
**குளியல் என்னும் கூதல் பிழைத்தும்**
**குழந்தைகள் என்னும் கும்மாளம் பிழைத்தும்**
**ஓட்டம் என்பதோர் ஆட்டம் பிழைத்தும்**
**ஆலயம் செல்வதோர் திருப்தி உண்டாகி**
**ஆறுதல் தேறுதல் ஆனந்தம் அனைத்தும்**
**கொள்முதலாகி வீடு திரும்புவோம்**
**ஓடிக்களைத்து உழைத்துக் களைத்து**
**கும்பிட்ட நிறைவில் குறட்டை விடுவோம்."**

மனித வாழ்க்கையில் அன்றைய - இன்றைய அனுபவம் ஒத்திருப்பது வியப்பில்லை – விதி.

- **புலவர் க. சிவானந்தன்**

# ஓட்டாவா சிவனுக்கு முதியோர் பிரலாபம்

நோயுற் றலறாமல் நொந்து மனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் – காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கியெனை ஒட்டாவா ஐயா நின்
சீரடிக்கீழ் வைப்பாய் தொடர்ந்து.

கன்றழைக்குமுன்னே கருதிவரும் ஆப்போல்
நின்றழைக்கும் நாயேற்குநேர் தோன்றி – ஒன்றினுக்கும்
அஞ்சாதே வாவென்று அழைப்பாய் ஒற்றாவா ஊரா
எஞ்சாதே பேரருளால் இன்று.

ஈண்டுலகில் உன்னை இணங்கறியா நாயேனை
ஆண்டருள் ஒற்றாவா அரசனே – மாண்டு
பிறவாமல் உன்தன் பதப்பூப் பெருந்தேன்
இறைவா எனக்கருள் நீ இன்று.

அன்னம் அளிக்குமூர் அண்டினரைக் காக்கமூர்
சொன்ன மழைபோற் சொரியுமூர் – உன்னினார்க்கு
தீதுபிணி தீர்க்குமூர் செவ்வேள் இருக்குமூர்
ஒற்றாவா பேரூர் எம்மூர்.

- **சண்முகம் நடராஜா, வல்வெட்டி**

************

# நம்பிக்கை

அது ஒரு எளிமையான ஆச்சிரமம். திண்ணையில் இரண்டு மண்பானைகள் ஒன்றில் நீர் நிறைந்து ததும்பி நிற்கிறது. மற்றது வெறும்பானை. வெறும்பானை ஏக்கத்துடன் போகிறது ''சகோதரா, நீர் ததும்ப காணும் உன்னைப் பார்க்கும் வேளையில் எனக்கு மிகவும் கவலையாகவும், அவமானமாகவும் இருக்கிறது. உன்னைப் போலவேதான் என்னையும் ஆற்றிலிருந்து எடுத்து வரும் போது நீரை நிரம்ப கொண்டு வருகிறார் அந்த சீடர், ஆனால்.... என் அடிப்புறம் உள்ள வெடிப்பால் அத்தனை நீரும் பயனில்லாமல் வெளியே கொட்டி விடுகிறதே! நினைத்தால் கவலைதான் என்னிடம் மிஞ்சுகிறது.'' என்றது பானை.

இதையெல்லாம் கேட்டிருந்த சீடர் ஏதும் பேசவில்லை. மறு நாள்... வழமைபோல் நீர் அள்ளப் புறப்பட்டான் சீடர். நீர் நிறைந்த பானைகளை நோக்கி ''நான் ஆச்சிரமம் போகும் பாதையைக் கீழே குனிந்து பார்த்து வாருங்கள்'' என்றார். ஏன்ன அதிசயம் பாதையில் இருக்கப்போகிறது..?

பானைகள் கீழே பார்த்தபடி வந்தன. அடடா... என்ன விந்தை... மஞ்சள், சிவப்பு, ஊதா என வண்ணங்கள் பலவாக சீடரின் காலடி அருகே செடிகள் வளர்ந்து பூத்துக் குலுங்கியதைக் கண்டன.

சீடர் கூறினார்... இந்தச் சின்னஞ்சிறு செடிகள் இப்படி அழகுறப் பூத்துக் குலுங்குவது எதனால் தெரியுமா? இந்தச் சின்னஞ்சிறு துவாரத்தால் வழிந்தோடிய நீரின் செழிப்பால்தான். நான் உதவாக்கரை என்று யாரும் நினைக்கக்கூடாது. ஒவ்வொருவர் செயலிலும் ஓர் நன்மை மறைந்தே உள்ளது.''என்று முடித்தார். இதன் பின்னர் அந்த ஓட்டைப்பானை கவலைப்படவே இல்லை. நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் தம்மைப் பயனுடையவராக்கிக் கொள்ளவேண்டும்.

தற்போது நம்மைச்சுற்றி அறிவியல் துறையின் அளப்பரிய சாதனைகளால் வாழ்க்கை முறையில் பல முன்னேற்றங்களைக் காண்கிறோம். ஆனால்... மனிதனை மேம்படுத்தும் முயற்சிகள் எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. மனிதன் மனநிறைவுடன் வாழ்கிறான் என்று சொல்ல முடியாது. ஆந்த மன அமைதியை ஏற்படுத்த எந்தவித முயற்சியும் சொல்ல முடியாது. அந்த மன அமைதியை ஏற்படுத்த எந்தவித முயற்சியும் இன்றைய உலகில் இடம்பெறுவதில்லை. இதன் காரணமாகவே இளைய சமூகத்தினர் தவறான வழிகளில் செல்கின்றனர். கொடூரமனவராயும் போதை மருந்துக்கு அடிமையானவராயும் மாறுகின்றனர். சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர். விளைவு...? சமுதாயத்தில் அமைதி நாசமாகிறது. மனிதரிடையே ஒற்றுமை குலைகிறது. வெறுப்பும் பகைமையும் பரவுகின்றன. எங்கோ ஓர் மூலையில் தொடங்கும் சிறு சச்சரவு கூட மிகப்பெரும் கலவரமாகவும் மூலதனமாகவும் வெடிக்கிறது. நாடுகளுக்கிடையே பெருயுத்தமாக இது மாறி உலக அமைதிக்கே உலைவைக்கிறது. இதுவே இன்றை உலகின் நிலை.

நிகழ்காலத்தில்தான் நாம் செயற்பட முடியும். சாதனை படைத்திட முடியும். நிகழ்காலத்தில்தான் நம்மால் பிறருக்கு சேவை புரிய முடியும். பிறரின் உதவியைப் பெறவும் முடியும். கடந்தகாலம் - முடிவடைந்த காலம், நம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. எதிர்காலம் இதைப் பொறுத்த மட்டிலும் கூட நம்மால் தற்பொழுது செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

உயிர்த்துடிப்புடன் கூடிய நிகழ்காலத்தில் மட்டுமே நாம் செயற்படமுடியும். இதில்தான் வாழ்க்கையின் அனுபவங்களைச் சுவைத்து இன்புற முடியும். ஏதிர்காலமோ நம்மை நோக்கி வேகமாக வருகிறது.

நிகழ்காலமோ மாறி நம்மை மூழ்கடித்துவிட்டு 'கடந்த' காலமாகத் தேய்ந்து மறைகிறது. காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது.எதற்காகவும், யாருக்காகவும் நிற்பது இல்லை கண்ணிமைக்கும் நேரத்தில் மறைந்து விடுகிறது.

செயல் புரிவதற்கும் சாதனைகள் படைப்பதற்கும், உரிய காலம் இன்று மட்டுமே நம் எல்லோருக்கும் வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அவற்றை நழுவவிடாமல் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி நன்கு உழைப்போம். அப்படிச் செய்தால் உழைப்புக்குத் தக்கபலன் நமக்குக் கிட்டுவது திண்ணம். தடைகளையோ, தோல்விகளையோ பற்றிக் கவலைப்படாமல் இருப்போம். செயலை ஆற்றிடத் தீர்மானித்த நேரத்தில் இருந்து, எமது இலட்சியம் உயர்ந்தது எனும் எண்ணமும் அதை அடைந்திடுவோம் என்ற தன்னம்பிக்கையும் நமக்கு வேண்டும். இவை இருந்தால் வெற்றி நிச்சயம் உலகம் வியக்கும் சாதனைகள் அனைத்தும் இவ்வாறே பெறப்பட்டன. நம்பிக்கை நம்மிடம் இருக்கிறது. ஆனால் அது பல நேரங்களில் உறுதியாக இருப்பதில்லை. வியக்கத்தக்க பலன் கிடைக்க வேண்டுமென்றால் தீவிரமான ஆழ்ந்த நம்பிக்கை நமக்கு வேண்டும். இதனை முயற்சி செய்துதான் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வேதாந்தம் இந்த நம்பிக்கையை அதைப் படிக்கும் மாணவரிடம் வெளிக்கொணர்கிறது. கீதை கூறும் கண்ணனின் அறிவுரைகளையும் உபநிடதங்களின் கூற்றுக்களையும் ஆழ்ந்து கற்கும் மாணவன் தன் எண்ண ஓட்டங்களில் ஓர் மாற்றம் ஏற்படுவதை உணர்வான். வாழ்வின் இலக்கைப் பற்றியும் பயனைப் பற்றியும் அவனுக்கு ஒரு தெளிவான பார்வை ஏற்படும். நமது இலட்சியம் உயர்ந்ததானால் பிறருக்கு சேவை செய்வது எளிதாகிறது. நாம் ஆற்றும் சேவையின் பயனாக நட்பும், இரக்கமும், அன்பும், அமைதியும் நம்மைச் சுற்றி மலரும் நமது நம்பிக்கைகள் போலியானதாக கீழ்த்தரமானதாக இருந்தால் அவை உலகில் வெறுப்பையும், பூசலையும், அழிவையும், மரணத்தையும்தான் பரவச் செய்யும். ஆகவே நமது இலட்சியம் எத்தகையது என்பதில் நிச்சயமாக இருக்க வேண்டும்.

நம்பிக்கைகளால் மட்டும், நிஜவாழ்க்கையில் நாம் சந்திக்கும் இடர்களையும் கொந்தளிப்புக்களையும் எதிர்கொள்ள முடியாது.

நட்பு முறிந்து போகலாம். அன்பு மறையலாம். செல்வமும் ஆரோக்கியமும் நம்மைவிட்டுப் போகலாம். அன்புக்குரியவரின் இழப்பு நம்மை மனமுடைந்து போகச் செய்யலாம். அபாண்டான பழிகளும் அவதூறுகளும் நம்மை உருக்குலையச் செய்யலாம். வாழ்க்கையில் எதுவேண்டுமானாலும் நிகழ்லாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் நமக்கு மிகவும் தேவைப்படுவது நம்முடைய நம்பிக்கைதான் ஆனால் வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் அந்த நம்பிக்கையை ஆட்டம் காணவைப்பதைக் காண்கிறோம். மனம் சோர்வடைந்து நம்பிக்கை இழந்தவராய் மாறுகிறோம். அறிவு பூர்வமாய் சிந்திக்குமாற்றல் மறைந்து மனம் வரண்டு போகின்றது. இந்நிலையில் நாம் செய்ய வேண்டியவை எவை?...

நம்பிக்கை இருந்தால் மட்டும் போதாது. அவையே எந்தச் சூழலிலும் நமது வாழ்க்கை முறையாக மாறவேண்டும். நல்ல நூல்களைப் படிப்பதன் மூலம் (சிரவணம்) அதினின்று பெறப்படும் கருத்துக்களை அலசி ஆராய்வதின் (மனனம்) பலனாக நம்பிக்கைகள் உருவெடுத்தால் அவை நாளடைவில் நம் வாழ்க்கை முறையாக மாறும். நமது நம்பிக்கைகள் மனதில் நன்கு வேரூன்றி செயல்களில் வெளிப்பட வேண்டுமானால் (தியானம்) நிதித்தியாசனம் செய்வது அவசியமாகும். அதன் மூலமாகவே நமது செயல்களுக்கு புதுப்பொலிவு ஏற்பட்டு பயன் தரக்கூடும். ஆழ்ந்த நம்பிக்கையுடனும் உறுதியுடனும் தவறாது அப்பியாசித்து வந்தால் நாளடைவில் சோதனைகளால் நாம் தளரமாட்டோம்.

நாம் நமது நம்பிக்கைகளை அவ்வப்போது சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் புதிதாகப் பெறப்படும் கருத்துக்கள் தகவல்களால் நமது சிந்தனையில் புதிய தெம்பு ஏற்படலாம். எனவே பழையன கழிதலும், புதியன ஏற்றலும் செய்வதற்குரிய மனோ தைரியம் நமக்கவசியும்.

புதிய தகவல்களின் பேரில் விஞ்ஞானி தனது கருத்துக்களை மாற்றிக் கொள்ளத் தயங்குவதில்லை. தனது நோயாளியிடம் காணப்படும் புதிய அறிகுறிகளை கண்டு, அதனடிப்படையில் சிகிச்சையில் மாற்றஞ் செய்ய மருத்துவர் ஒருவர் தயங்கமாட்டார். இவ்வாறே மாற்றங்களை ஏற்கும் பரிபாகத்தை ஏற்றுக் கொள்வோர்.

நாம் நம்பிக்கையோடு செயற்படுவோம். கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன் கொள்வோம். புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயங்காது முன்னேற்றப்பாதையில் பீடு நடை போடுவோம்.



# சைவசமயமும் சிறுவர்களும்

தற்போது அறிவியல் துறையின் அளப்பரிய சாதனைகளால் நமது வாழ்க்கை முறையில் பல முன்னேற்றங்களை காண்கின்றோம். ஆனால் சிறந்த வாழ்க்கைக்குரிய பழக்கவழக்கங்களையும், மனித விழுமியங்களையும் நாம் பின்பற்ற மறந்துவிடுகின்றோம். சமயமானது ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒரு அளப்பரிய பங்கினை வகிக்கிறது.

சிறுவயதிலேயே அடிப்படைச் சமய அறிவினைப் பெறுவது அத்தியாவசியமாகிறது. சமயமானது நமது வாழ்க்கையை நல்வழிப்படுத்த உதவுகிறது என்ற உண்மையை நாம் உணரவேண்டும். அதற்கு இறைவழிபாடு அவசியமாகிறது.

## இறைவழிபாடு:

இறைவன் ஒருவரே உண்மையானவர். அவரால் அனைத்து உயிர்களும் படைக்கப்பட்டுள்ளன. பல வடிவங்களில், பல பெயர்களில் நாம் அவரை வழிபடுகிறோம்.

பசுவின் உடலெங்கும் பால் வியாபித்திருந்தாலும் அதன் மடியிலிருந்தே நாம் பாலைப் பெறமுடியும். அது போலவே எங்கும் இறைவன் இருந்தாலும் கோவில்களிலுள்ள திருவுருவங்களின் மூலம் வழிபடுவதாலேயே அவனை எளிதில் அடையமுடியும்.

கோயிலுக்குச் சென்று வழிபடுவதால் நமது ஐம்பொறிகளான மெய், வாய், கண், செவி, மூக்கு என்பன ஒருநிலைப்பட்டு இறைவனை எளிதில் அறிய முடிகிறது.

ஆலயத்திற்குச் செல்வோர் முறைப்படி இறைவனை வழிபட வேண்டும்.

## அட்டாங்க நமஸ்காரம்

ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும்.அட்டாங்க நமஸ்காரம் எனப்படுவது தலை, காலிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்கள் என்னும் எட்டு அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

## பண்ணும்முறை

இந் நமஸ்காரதை பூமியிலே சிரசை வைத்து, மார்பு பூமியிலே படிம்படி வலக்கை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி பின் அம்முறையே மட்கி, வலப்புயம், இடப்புயம் மண்ணிலே போருந்தும்படி கைகளை அரையே நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்தல்வேண்டும்.

## பஞ்சாங்க நமஸ்காரம்

ஆலயத்தில் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். இந்நமஸ்காரமானது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து அவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வீழ்ந்து வணங்குதல் ஆகும்.

கோயிலுக்குச் செல்லும்போது திறுநீறு அணிந்து செல்லுதல் வேண்டும்.

## திருநீறு

திருநீறு சைவசமயத்தின் சிறப்புப் பிரசாதம். முடிவில் யாவரும் சாம்பல் ஆவர் என்ற நிலையான உண்மையை உணர்த்தவும், நமது உள்ளம் நீறு போல் தூய்மையாக இருத்தல் வேண்டும் என்பதை உணர்த்தவுமே நாம் திருநீறு அணிகின்றோம். அத்துடன் திருநீறு தலையிலுள்ள நீர்க்கட்டு, தலைவலி, உடம்பிலுள்ள கிருமிகள் முதலியவற்றை அகற்றவல்லது.

ஆலயத்திற்குச் செல்லும் ஒவ்வொருவரும் தம்மால் இயன்றளவு தொண்டுகளைச் செய்தல் வேண்டும். கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபடுதல் வேண்டும். ஏனெனில் நாம் இறைவனிடம் கொள்ளும் தொடர்பே கூட்டுப்பிரார்த்தனை ஆகும். நாம் அனைவரும் சேர்ந்து பாடி இறைவனை வழிபடுவது மேலும் சிறப்பானதொன்றாகும்.

சைவசமயிகளான நாம் இரக்கம், நல்லொழுக்கம், அடக்கம் என்பனவற்றை நமது உயிரிலும் மேலாக மதித்து வாழவேண்டும். இத்தகைய பண்புகள் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றன.

# AUM NAMACHIVAAYA!

As desired by Lord Vaithianathan, our magazine, *Vaitheeswaram 2011,* is provided to devotees on the holy chariot festival, the 'Ther Thiruvilla'. Though in the past, we published as a Quarterly News Letter, this year, the *Vaitheeswaram* has blossomed to be a special 2011 annual magazine release. This release contains several thought provoking religious articles which will enhance the devotees knowledge of Saivaism. Swami Vaithianathan and Sri Thaiyalnayaki bless all our devotees with a prosperous life of happiness.

The human body is a wonderful vehicle similar to the temple chariot or 'Ther'. When we place God on a pedestal in our chariot (the human body), we progress well in life. Further, we are praised for faithfully following our strict principles. It is the disciplined life and the elevated ideals that help us attain fulfillment. This, in fact, is the principle behind life. The wheels of the chariot are guided to its final destination by the use of pivoting blocks by the chariot driver. Similarly, people must endeavor to guide their own life through discipline to reach their own lifetime fulfillment.

Having lived life fully, there is a tendency for people to feel dismayed by the onset of old age in their life. When we analyse as to why we a getting old and why we get deceased we get enlightned.

Paddinathar and Pathirakiriyar were renowned spiritual leaders of their time. Paddinathar was an extremely wealthy person in life and his realization of the transience of wealth led him to seek spiritual enlightenment. In the case of Pathrakiriyar, he too became spiritual when he realized his own insignificance despite his royal might. When we stop seeking material wealth and instead seek spiritual knowledge, then one is on the path to spiritual enlightenment. In a similar fashion, Lord Buddha and Mahavira both got enlightened after living in similar circumstances. One seeks spiritual knowledge when one realizes that the answers to those questions are not found in material life. As such the extremes of confusion and hardships, are a pre-requisite for seeking spiritual solace.

Abirami Pattar Stated,

**Thanam Tharum Kalvi Tharum**
**Otu Naalum Thalarvu Ariya**
**Manam Tharum Theiva Vadivum Tharum**
**Nenjil Vanjam Illa**
**Innam Tharum Nallana EllamTharum**
**Anpar Enpavarkay**
**Kanam Tharum Poongkulalal**
**Abhiramy Kadaikankalay**

The genuine devotee of Sri Abhiramy would invariably be blessed with great knowledge, strength and wealth. Throughout history, one has never heard of a person with mundane thoughts reaching a high spiritual level. When one becomes prosperous with Abirami's blessings, it will become easy to get enlightened by the grace of Lord Siva.

When holding the chariot's rope we are reminded of our ancestors who illustrate the impermanence in human life. This knowledge triggers enlightenment in the minds of the "Ther" festival participants. When the devotee realizes the emptiness of material life, the secrets of divinity are revealed. This revelation rids us of our worldly doubts and confusions.

We hope that the auspicious occasion of the 'Ther Thiruvilla' allows us to clear our minds and attain spiritual enlightenment.

We wish to thank all our readers and well wishers for the success of this magazine. Our grateful thanks are also due to the contributors and translators of the articles, to the photographers and to the layout editors. A special thank you is due to all our generous advertisers and the printers who helped us provide the timely release of the *Vaitheesvaram 2011* magazine. We pray that all those who assisted us in this venture be blessed profusely by Vallambika Sri Thaiyalnayag and Swamy Vaithyanathar.

**AUM NAMACHIVAAYA!**

**-Editorial Group, Vaitheeswaram**

# MISSIONARY PREACHING STYLE OF ARUMUGA NAVALAR

**Translated by: Chinniah Ambikapathy**

Professor Kailasapillai theorizes that the zealous Hindu missionary 'Pirasangam' preaching style was pioneered in Jaffna by Arumuga Navalar. This style of preaching was initiated to protect saivaism from Christian religious conversions.

